Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 5-8-2011 | Issued : 5-8-2011

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஜூன் 7, 2011—தொகுதி 2—எண் 2**

**Tuesday, the 7th June 2011—Volume 2—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

7–6–2011

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. அறிவிப்புகள்—** | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 5 |
| (ஆ) வினாக்கள்-விடைகள் நேரம் இடம் பெறாததும் விடைகளை விரைந்து அனுப்பிட அமைச்சர்கள் அறிவுரை வழங்குதலும் | 6 |
| (இ) செல்லிடத் தொலைபேசியை அவைக்குள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் | 6 |
| (ஈ) தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.) | 10 |
| **2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | 7-8 |
| தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 | 7-8 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 7-8 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 7 |
| திரு. கே. கோபிநாத் | 7 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 7 |
| திரு. ம. கலை அரசு | 8 |
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—** | 8-9, 63-135 |
| *திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் | 8-9, 63-86 |
| திரு. இரா. காமராஜ் | 9 |

பக்கங்கள்

**3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—**தொடர்ச்சி

*திரு. க. பாண்டியராஜன் 86-96

*திரு. நயினார் நாகேந்திரன் 96-109

*திரு. க. பாலகிருஷ்ணன் 110-121

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 111-112,118, 125,126, 129-130,132

திரு. சு. குணசேகரன் 121-132

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 124, 127

*திரு. பழ. கருப்பையா 133-135

**4. அரசினர் தீர்மானங்கள்—** 9-10, 31

(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல் மற்றும் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 9-10

(ஆ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் 31

**5. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**

தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 10-30

திரு. சி.வி. சண்முகம் 10,13-14, 25-29, 30

*திரு. தங்கம் தென்னரசு 11-15



பக்கங்கள்

**5. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**தொடர்ச்சி

டாக்டர் க. கிருஷ்ணசாமி 15-17

திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் 17

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 17-18, 23

முனைவர் செ.கு. தமிழரசன் 18-20

*திரு. க. பாலகிருஷ்ணன் 20-22

திரு. எம். ஆறுமுகம் 22-23

திரு. ச. இராமச்சந்திரன் 23-25

**6. அரசினர் தனித் தீர்மானம்—**

சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கும் முடிவைத் திரும்பப் பெறுதல் 31-63

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 31-32, 48-52

முனைவர் செ.கு. தமிழரசன் 32-35

திரு. ரா. சரத்குமார் 35-37

டாக்டர் க. கிருஷ்ணசாமி 38-39

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 39-41

திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் 41-42

திரு. சு. குணசேகரன் 42-44

*திரு. ப. டில்லி பாபு 44-45

திரு. ச. இராமச்சந்திரன் 45-47

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 135-137

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042 – வைகாசி 24

## 2011 ஜூன் 7, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி"

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

*[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் முதல் கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன்:*

1. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்
2. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்
3. திரு. செ. தாமோதரன்
4. திரு. எல். வெங்கடேசன்
5. திரு. ப. டில்லி பாபு
6. திரு. சு. குணசேகரன்

### (ஆ) வினாக்கள்–விடைகள் நேரம் இடம்பெறாததும் விடைகளை விரைந்து அனுப்பிட அமைச்சர்கள் அறிவுரை வழங்குதலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. உறுப்பினர்களிடமிருந்து பேரவைச் செயலகத்திற்கு தற்போது வினாக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவ்விதம் வரப்பெற்ற வினாக்கள் அனுமதிக்கப்பட்டு, விடைகள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. வினாக்களுக்கான பதில்களைப் பெறுவதற்கு சிறிது காலம் ஆகும் என்பதால், அதுவரையில் "ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கு ஒதுக்கப்பெற வேண்டும்" என்னும் பேரவை விதி 32-ஐப் பேரவையின் அனுமதியுடன் தளர்த்தி, சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இடம் பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*சட்டமன்றப் பேரவை விதி 45-ன்படி வினாக்களுக்கான விடைகள், அவை அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும். இக்கால அளவிற்குள் விடைகள் அனுப்ப இயலாத நேர்வில், அதற்குரிய காரணங்களைத் தெரிவித்து, பேரவைத் தலைவரின் இசைவுடன் மேலும் இரண்டு வார கால அவகாசத்தில் விடைகள் கொடுக்கப்படலாம். வினாக்களுக்கான விடைகளை விரைந்து அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு, துறைச் செயலாளர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

### (இ) செல்லிடத் தொலைபேசியை அவைக்குள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது செல்லிடத் தொலைபேசியை* off *செய்துவிட்டு பேரவைக்குள் வரவேண்டும். இருப்பினும் பேரவையில் சிலர் செல்லிடத் தொலைபேசியை உபயோகிப்பதாக நான் அறிகிறேன். எனவே, பேரவைக்குள் வரும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றும் அலுவல் காரணமாக வரும் அலுவலர்களும் செல்லிடத் தொலைபேசியை* off *செய்துவிட்டு பேரவைக்குள் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*





## 2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த சட்டமுன்வடிவை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமச்சீர் கல்வித் திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைத்து கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய சட்டமுன்வடிவைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் ஆதரிக்கிறேன்.*

[2011 ஜுன் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகள் பதிவு செய்யப்படுகின்றன.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 3 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த



2011 ஜுன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

பேருரைக்கு @தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

**திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் முன்மொழிந்த மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல் மற்றும் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை விதி 13 (2)-ன்கீழ், ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று நடைபெற இருக்கும் ஆளுநர் உரை மீதான விவாதத்தைப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் தள்ளிவைத்து, சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2011) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 139 முதல் 168 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[2011 ஜூன் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 1. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஈ) தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை திருத்தச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2011) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2011), மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

---

*@ 7-6-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*



2011 ஜூன் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை சுருக்கமாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

***திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் தளபதி அவர்கள் அறிமுக நிலையிலேயே எதிர்த்திருக்கக்கூடிய நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமுன்வடிவில் எங்களுடைய கருத்துகளை இந்த மன்றத்தின் முன்னால் வைப்பதற்கு விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே சமச்சீர் கல்வி கொண்டுவரப்பட வேண்டும் என்கின்ற கொள்கை, அந்த முடிவு, வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு, தலைவர் கலைஞர் அவர்களாலே இந்தச் சட்டப் பேரவையிலே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டம், தமிழ்நாட்டினுடைய கல்வி வரலாற்றிலே ஒரு மிக முக்கியமான மைல் கல்லான திட்டம் ஆகும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே இந்தத் திட்டம் சுட்டிக்காட்டப்பட்டு அதைச் சட்டமாக நிறைவேற்றுவதற்கு பல்வேறு பணிகளை அன்றையதினம் இருந்த தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு மேற்கொண்டு, பல கல்வியாளர்கள், பல்வேறு கல்வி வல்லுநர்களால் பாராட்டப்பட்ட இந்தத் திட்டம், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தின் மூலமாக கிடப்பிலே போடப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது; நீண்டகாலமாக கல்வியாளர்கள் கோரி வந்த அந்தக் கோரிக்கை இன்றைக்கு நிரந்தரமாகத் தூக்கி எறியப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது உள்ளபடியே மிக மிக வருந்தக்கூடிய நிலை என்பதை நான் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. தங்கம் தென்னரசு] [2011 ஜூன் 7

*முற்பகல் 10-10*

தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, காலம் காலமாக இருந்து வந்த இந்தக் கல்வி முறை மாற்றப்பட வேண்டும். நான்கு விதமான கல்வி முறைகள் இருந்ததை மாற்றி தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மாணவர்கள் எல்லோருக்கும்—திருத்தணியிலேயிருந்து கன்னியாகுமரி வரையிலே இருக்கக்கூடிய மாணவர்கள் அத்தனை பேருக்கும்—ஒரேவிதமான கல்வி அமைய வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. இருந்த நிலைமை என்னவென்று கேட்டால், மாநிலக் கல்வி முறை, மெட்ரிகுலேஷன் கல்வி முறை, ஆங்கிலோ இந்தியன் கல்வி முறை, ஓரியண்டல் கல்வி முறை என்று நான்கு விதமான கல்வி முறைகள், நான்கு விதமான பாடத் திட்டங்கள், நான்கு விதமான தேர்வு முறைகள், நான்குவிதமான பாடப் புத்தகங்கள், நான்கு விதமான மதிப்பீடுகள் என்று கல்வியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் பாகுபாடுகளை முழுமையாகக் களைய வேண்டும் என்றுதான் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது.

பொதுவான கல்வி முறை வர வேண்டுமென்கின்ற இந்தக் கருத்தை நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால், இது 1964-லே உருவாக்கப்பட்ட கோத்தாரி கமிட்டி, பின்னாலே வந்த இராமமூர்த்தி கமிட்டி, அதற்குப் பின்னாலே 1993 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட Professor Yash Pal அவர்களுடைய கமிட்டி ஆகியவற்றிலெல்லாம் வலியுறுத்தப்பட்டு—அதேபோல, National Policy of Education 1997-லே உருவாக்கப்படுகிறபோது, ஜாதி, மத, இன, இட வேறுபாடின்றி இந்தக் கல்வி அமைய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து கவனிக்க வேண்டும். இந்த சமச்சீர் கல்வி குறித்து உயர் நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, அந்த வழக்கை பாதிக்காத வகையில் தாங்கள் கருத்துகளைச் சொன்னால் நலமாக இருக்கும். (குறுக்கீடு) இல்லையென்றால், அது sub-judice ஆகும்.

**திரு. தங்கம் தென்னரசு:** நான் சமச்சீர் கல்வி உருவாக்கப்பட்ட வரலாற்றை உங்களிடத்திலே சொல்ல வருகிறேன். ஆக, இந்த அடிப்படையில்தான், அப்போது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்த முத்துக்குமரன் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு,



2011 ஜூன் 7] [திரு. தங்கம் தென்னரசு]

அந்தக் கமிட்டி தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல கல்வியாளர்களை உள்ளடக்கிய ஒரு கமிட்டியாகி, தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று ஆய்வு நடத்தி, ஒரு பொதுக் கல்வி முறையை, ஒரு பொதுப் பாடத் திட்ட முறையை, சமச்சீர்க் கல்வி முறையைக் கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் பரிந்துரை செய்து—அந்தப் பரிந்துரையை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டுமென்று ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. விஜயகுமார் அவர்களுடைய தலைமையிலே ஒரு நபர் குழு அமைக்கப்பட்டு, அவர் பல மாநிலங்களுக்குச் சென்று, அங்கேயிருக்கக்கூடிய கல்வி முறைகளையெல்லாம் ஆராய்ந்து வந்து, அதற்குப் பிறகு தன்னுடைய பரிந்துரைகளை அளித்தார். அதோடு மாத்திரம் நின்று விடவில்லை. மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பாடத் திட்டம் ஏற்படுத்தினோம். அதுதான் சமச்சீர் கல்வியினுடைய அடிப்படையான ஒரு கூறு. சமச்சீர் கல்வியிலே பல கூறுகள் இருக்கின்றன. ஆனால், அதன் உயிர்நாடியாக இருக்கிறது அந்தப் பொதுப் பாடத் திட்டம். இன்றைக்கு சட்டமுன்வடிவிலே அந்தப் பொதுப் பாடத் திட்டத்தைப் பழைய முறைக்குக் கொண்டு வருவோம் என்று சொல்கிறீர்களே, அந்தப் பொதுப் பாடத் திட்டம்—நான்கு விதமான அந்தக் கல்வி முறைகள் இருப்பதிலே ஒரு பொதுவான பாடத் திட்டம் உருவாக்குவது அதனுடைய உயிர்நாடியான விஷயம்—ஆக, ஏதோ ** என்றோ, அன்றைக்கிருந்த தலைவர் கலைஞருடைய அரசு, நாங்களும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ** என்று சொன்னவை சரியான வார்த்தைகள் அல்ல. அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ** என்று அவர் சொன்ன அந்தச் சொற்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசிய பிறகு கடைசியாகச் சொல்லலாம் என்றிருந்தேன். அவர் சொல்ல வந்த ஒரேயொரு கருத்திற்கு மாத்திரம் பதிலாக ஒன்றைச் சொல்ல

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சி.வி. சண்முகம்] [2011 ஜூன் 7

விரும்புகிறேன். அவர்களால் அமைக்கப்பட்டது முத்துக்குமரன் குழு. பொதுக் கல்வி முறையிலே பாடத் திட்டம்தான் முக்கியமானது என்று சொல்கின்றார். அந்த முத்துக்குமரன் குழுவினால் சொல்லப்பட்டது என்னவென்றால், "சமமான தரம் உருவாக்குவதும், செயல்படுத்துவதுமான பாடத் திட்டம் மட்டுமல்லாது; பள்ளி வசதிகள், ஆசிரியர் எண்ணிக்கை, அவர்தம் திறமை, பாட நூல்கள், தேர்வு முறைகள், பள்ளிக் கல்வி நிர்வாகம் ஆகிய பள்ளிக் கல்வியின் அங்கங்கள், அவை தொடர்பான யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பெருந்திட்டம் என்பதில் ஐயமில்லை." ஏதாவது ஒன்று மட்டுமே சமமாக இருந்தால் மட்டும் சமச்சீர் கல்வியை உருவாக்கிட முடியாது என்பதுதான் எங்கள் அம்மாவினுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவர்னர் உரை மீதான விவாதம் இருக்கிறது. நீங்கள் கிட்டத்தட்ட 7 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இதிலே உங்களுடைய கருத்தை முழுமையாகச் சொல்ல முடியாது. நீங்கள் இதை ஏற்கிறீர்களா அல்லது நிராகரிக்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நோக்கக் காரண விளக்க உரையிலே இந்தப் பொதுப் பாடத் திட்டம் என்பது அங்கேயிருக்கக்கூடிய பதவிவழி உறுப்பினரால் மாத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அது உண்மையல்ல. பொதுப் பாடத் திட்டத்தை நாங்கள் கொண்டு வருகிறபோது, நிறைந்த கல்வியாளர்களிடத்திலே அது ஆலோசிக்கப்பட்டு, இன்னும் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வள மையங்களுக்கு அனுப்பப்பட்டு, விரிவான வகையிலே அது விவாதிக்கப்பட்டு, Internet-ல் அந்த syllabus போடப்பட்டு, எல்லோரிடத்திலும் கருத்துகளைக் கேட்டு உருவாக்கப்பட்டு, அதன் வழியாகப் பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அதற்கான text books கொண்டு வரப்பட்டிருக்கின்றனவேயொழிய, அவர்கள் சொல்லியிருப்பதைப்போல, வெறும் பதவிவழி உறுப்பினரால் மாத்திரம் செய்யப்படவில்லை.



2011 ஜூன் 7] [திரு. தங்கம் தென்னரசு]

முற்பகல் 10-15

நம்முடைய ஆசிரியர் பயிற்சி இயக்ககத்தின் மூலமாக அதை ஒரு Nodal Agency ஆக வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய கல்வியாளர்கள்--நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால் நம்முடைய வசந்தி தேவி அவர்கள் இப்போது அறிவித்திருக்கிறார்கள். நேற்றுகூட ஒரு meeting நடந்தது. நமது இந்திய கம்யூனிஸ்டு கட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். உங்களுடைய கருத்தைப் பதிவு செய்தாகிவிட்டது, உட்காருங்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** அரசியல் காழ்ப்புணர்ச்சிதான் அதற்குக் காரணம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Bill-ல் long discussion-ஐ allow பண்ண முடியாது. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** எங்களுடைய தலைவரின் கவிதை இடம் பெற்றிருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்களே அல்லாமல் வேறல்ல. அரசியல் காழ்ப்புணர்ச்சிதான் இதற்கு பின்புலமாக, நோக்கக் காரணமாக இருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இங்கே நான் எடுத்து வைக்கிறேன். எனவே நீங்கள், இந்தத் திருத்தச் சட்டத்தை உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும். இது நிறைந்த கல்வியாளர்களாலே உருவாக்கப்பட்ட சட்டம்; தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட சட்டம் தொடர்ந்து இருக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பேசுகிறபோது சொன்னார், கல்வி முறையிலே பல கூறுகள் இருக்கின்றன என்று; நானும் மறுக்கவில்லை. முக்கியமான காரணம் . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி பேசட்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை திருத்தச் சட்டமுடிவின்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு அரசைப்

பொறுத்தமட்டிலும் ஒரு திருத்தச் சட்டமுன்வடிவை முன்வைத்த காரணத்தினாலேயே சமச்சீர் கல்விக்கு எதிராகச் செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல முடியாது என்று கருதுகிறேன். இந்த அரசினுடைய நோக்கம், ஒரு பள்ளத்தை நிரப்பிடலாமே தவிர, மேட்டை வெட்டி இன்னொரு பள்ளம் உருவாக்கப்படக்கூடாது என்ற நோக்கத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன். அடித்தளத்திலேயிருந்து வருகை தந்திருக்கின்ற என்னைப் போன்றவர்களெல்லாம் சமச்சீர் கல்வி என்பதை பாராட்டித்தான் ஆக வேண்டும். ஆனால், சமச்சீர் கல்வி என்பது வெறும் பொதுப் பாடத் திட்டமாக, நிச்சயமாக இருக்க முடியாது.

தமிழகத்திலே வாழக்கூடிய 7 கோடி மக்களிலே 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், வசதி படைத்தவர்கள், வசதியற்றவர்கள், நடுத்தர மாணவர்கள் என்று அழைக்கப்படக்கூடிய அனைத்து சமுதாய மக்களுக்கும், கிராமப்புறங்களிலே வாழக்கூடிய மக்களுக்கும், கல்விக்கூடங்களிலே வசதிகள் சமமானதாக இருந்தால்தான் அந்தக் கூடத்திலேதான் பொதுவான கல்வித் திட்டத்தை வைக்க முடியுமே தவிர, வெறும் பொதுப் பாடத் திட்டத்தை மட்டும் முன்வைப்பதாலே நிச்சயமாக சமச்சீரான ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்க முடியாது. Being determines the conscious-வாழ்நிலையே எண்ணங்களைத் தீர்மானிக்கிறது என்ற அடிப்படையில், எந்தப் பள்ளிக்கூடத்தில் வசதி வாய்ப்போடு படிக்க வாய்ப்பு இருக்கிறதோ அவர்களிடத்தில்தான் உயர்ந்த சிந்தனைகள், நல்ல நோக்கங்கள் எதிர்காலத்திலே நல்ல ஒரு சமுதாயத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய சிந்தனைகள் வரும். அந்த அடிப்படையிலே பொதுவான பாடத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்பாக பொதுவான, சமமான வாய்ப்புகள் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு அடிக்கட்டுமானங்களை உருவாக்குவதுதான் நோக்கம். அந்த அடிக்கட்டுமானங்களுடன்தான் பொதுப் பாடத் திட்டமும் உருவாக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இன்று இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்று கருதுகிறேன். ஏனென்று சொன்னால், ultimate ஆக, இறுதியாக, எல்லோருடைய இலட்சியமும் தரமான கல்வி வழங்க வேண்டும் என்பதுதான். எனவே, தரமான கல்வியைக் கொடுப்பதற்கு இந்த அரசு நிச்சயமாக முயற்சி செய்யும். ஓராண்டு அல்லது ஈராண்டு தள்ளி





வைத்தாலும்கூட அந்த இலக்கோடு இப்போது திருத்தச் சட்டமுன்வடிவை முன்வைப்பதை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** சமச்சீர் கல்வி சம்பந்தமாக முந்தைய அரசு கொண்டுவந்த திட்டத்தில் ஒருசில குறைபாடுகள் இருக்கின்றன என்று எங்களுடைய நிறுவனத் தலைவர் அப்பொழுதே அறிவித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குறைபாடுகளை நீக்கி இந்தச் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவோம் என்று இந்த அரசு அறிவித்திருக்கிறது.

முற்பகல் 10-20

இதற்கு ஒரு காலக்கெடு இல்லாமல் இருக்கின்றது. இந்த ஆண்டே அந்தக் குறைகளையெல்லாம் நீக்கி அதை நிறைவேற்ற வேண்டும். சமச்சீர் கல்வி என்பது ஏழைக்கு ஒரு கல்வி, பணக்காரருக்கு ஒரு கல்வி என்று இல்லாமல், பாடத் திட்டம் C.B.S.E. ஆக இருந்தாலும் சரி, மெட்ரிகுலேஷனாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் ஒரே வகையான கல்வியைக் கொடுக்கவேண்டும் என்பது எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்து. அந்த வகையில் அந்தச் சமச்சீர் கல்வியை இந்த ஆண்டே நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தும்போதே பாட்டாளி மக்கள் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இதை அறிமுக நிலையிலேயே எதிர்ப்பதாகத் தெரிவித்தார். இது சம்பந்தமாக அவருடைய கட்சியின் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் என்ன பேசியிருக்கிறார் என்று அனைவருக்கும் தெரிவிப்பது பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். சமச்சீர் கல்வித் திட்டம் மிக அவசரமாகச் செயல்படுத்தக்கூடியது அல்ல. அனைவருக்கும் தரமான கல்வி

வழங்கப்படவேண்டுமெனில், டாக்டர் முத்துக்குமரன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதைத்தான் இந்த சட்டம் இந்த மன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்டபோது அனைத்துக் கட்சிகளும் எடுத்துக் கூறியுள்ளன. பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. மணி அவர்கள் தெரிவித்த கருத்தை நான் இங்கே நினைவுபடுத்த விழைகிறேன்.

“தமிழக அரசின் சார்பிலே சமச்சீர் கல்வி முறை கொண்டுவரப்படுவதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவிலே மிகப் பெரிய திருத்தங்கள் எல்லாம் செய்யப்படவேண்டும். இப்போது நீங்கள் கொண்டுவந்துள்ள சட்டமுன்வடிவு என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கின்றது. பிரிவு வாரியாக எடுத்தீர்கள் என்று சொன்னால் நிறைய சொல்லலாம். இருந்தாலுங்கூட டாக்டர் முத்துக்குமரன் அறிக்கையில் என்ன பரிந்துரை சொன்னார்களோ அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த சமச்சீர் கல்வி சட்டத் திருத்தத்தை நீங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும். இப்படியே நிறைவேற்றாமல் கல்வி வல்லுநர்கள் கொண்ட குழுவை அமைத்து இன்னும் முழுமையாக ஆய்வு செய்து, கருத்துக் கேட்டு நடைமுறைப்படுத்தவேண்டும்” என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட கருத்து. இதில் அவர்கள் நிற்கிறார்களா, இல்லையா என்பதை அவர்கள் தெரிவித்தால் நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே கொண்டுவரப்பட்டிருக்கிற சமச்சீர் கல்வித் திட்டத்திற்கான திருத்தத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதனால் சமச்சீர் கல்விக் கொள்கை கைவிடப்பட்டுவிட்டதாக யாரேனும் கருதினால் அவர்கள் இதை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் பொருள். சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்னால், அதை முழுமையாகச் செயல்படுத்தமுடியுமா, எந்த அளவிற்கு அதை நிறைவேற்றுவதற்கான தன்மை தமிழகத்தின் கல்வித்



துறையில் இருக்கிறது என்பதையெல்லாம் கடந்த ஆட்சி திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி இருக்கவேண்டும். எதற்கெடுத்தாலும் அவசரம், அவசரம் என்பதையே அவர்கள் வழக்கமாக வைத்திருந்ததனால், இதிலேயும் அப்படிப்பட்ட அவசரத்தைக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அவசரத்திலே அள்ளித் தெளித்த கோலத்தைப்போல இந்தச் சட்டத் திருத்தத்தை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களுடைய மிக மதிக்கக்கதகுந்த, போற்றத்தகுந்த தலைவரான பாபாசாகிப் அம்பேத்கர் ஒருமுறை சொன்னார்; “வளர்ச்சி என்பது உயரத்திலே இருக்கிறவர்களைப் பிடித்துக் கீழே இழுத்துவிடுவதல்ல; கீழே இருக்கிறவர்களை உயரத்திற்குக் கொண்டு போவதற்கு கைதூக்கி விடுவதுதான் உண்மையான வளர்ச்சியாக இருக்கமுடியும்” என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளத்திலே இருக்கிறவனை மேலே கொண்டுவர வேண்டுமே தவிர, மேலே இருக்கிறவனை பள்ளத்திலே தள்ளுவது ஒரு நல்ல திட்டமாக இருக்க முடியாது. நம்முடைய இன்றைய கல்வித் திட்டம் 75 ஆண்டு காலத்திற்கு மேலாக இருக்கிறது. மெகாலேயின் கல்வித் திட்டத்திலே தொடங்கி கோத்தாரியின் பரிந்துரையின் அடிப்படையிலே ஒரு கல்வித் திட்டம் 75 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துகொண்டு இருக்கிறது. இந்தக் கல்வித் திட்டம்தான் இன்றைக்கு உலகளாவிய உயர்ந்த கல்வித் திட்டமாக பெயர் வாங்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஆனாலும், அனைவருக்குமான சமச்சீர் கல்வி வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. பேராசிரியர், துணை வேந்தர், முனைவர் முத்துக்குமரன் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய infrastructure கடந்த ஆண்டு கல்வித் துறையிலே இருந்ததா? ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்பதை கண்கூடாகப் பார்த்தவர்கள் அறிவார்கள். மாட்டுத் தொழுவத்தைவிட மிகக் கேவலமாகப் பராமரிக்கப்படும் நிலைமை கடந்த காலங்களிலே இருந்தது. நல்ல தரமான ஆசிரியர்கள் உண்டா? இந்த சமச்சீர் கல்விக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உண்டா? அதற்கான காரணத்தை முன்னாள் முதலமைச்சர் அவர்களே ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்கிறார், ‘வேண்டுமானால் நான் எழுதியவற்றை எடுத்து விடுங்கள்’ என்று என் அப்பன் குதிருக்குள் இல்லை என்று சொல்வதைப்போல் சொல்கிறார். அதை எடுத்துவிட்டு நீங்கள் செய்யுங்கள் என்கிறார்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஜூன் 7

அதுதான் காரணம் என்று அவர்கள் சொல்கிறார்களா? அதுதான் உண்மையான காரணமா? அவர்கள் வேண்டுமென்றே செய்தார்களா?

முற்பகல் 10-25

அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஓர் ஆண்டு காலமல்ல, இரண்டு ஆண்டு காலமல்ல, அவசியமானால் எவ்வளவு காலதாமதமானாலும்கூட, ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, அந்த வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் பேரில் ஒட்டுமொத்தக் கல்வியின் தரத்தையும், கல்வி நிலையங்களையும் மாற்றுகின்ற வகையில் முழுமையாக இந்தத் திட்டத்தை சீரமைத்துக் கொண்டு வர வேண்டும். அதற்காக நாங்கள் இதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன் மொழிந்திருக்கிற இந்த சட்டத் திருத்தத்தின் நோக்க காரண விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிற வகையில் “எனவே, அரசானது சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு வழிமுறைகளை வழங்கி ஆலோசனை பெறுவதற்கு குழு ஒன்றை நியமிக்கக் கருதுகிறது” என்று சொல்வதன்மூலம் இந்த அரசு சமச்சீர் கல்வியை முழுமையான கல்வியாக அமல்படுத்துவதற்கு விழைகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைபெற்றபோது, மரியாதைக்குரிய திரு. முத்துக்குமரன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு சற்றேறக்குறைய 110-க்கும் மேற்பட்ட சிபாரிசுகளை வழங்கி அவற்றை முழுமையாக அமலாக்குவதன் மூலம்தான் சமச்சீர் கல்வியைக் கொண்டு வரமுடியும் என்று அவர்கள் சிபாரிசினை வழங்கினார்கள். ஆனால், தி.மு.க. அரசு அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம் போல, அதில் மூன்று, நான்கு சிபாரிசுகளை மட்டும் ஏற்றுக்கொண்டு அந்த சமச்சீர் கல்வியை ஒரு அரைகுறைக் கல்வியாக நிறைவேற்றினார்கள். இதனை ஏற்கெனவே எங்கள்



2011 ஜூன் 7] [திரு. க. பாலகிருஷ்ணன்]

கட்சியின் சார்பிலும் சட்டமன்றத்தில் நாங்கள் பதிவு செய்திருக்கிறோம். தமிழகத்தில் இருக்கிற பல கல்வியாளர்களும் அது முழுமையான சமச்சீர் கல்வியாகாது என்று அப்போதே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே, அதிலுள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு முழுமையான சமச்சீர் கல்வி அமைய வேண்டுமென்பதுதான் அனைவருடைய விருப்பமாகும். அதைத் தமிழக அரசு முன்மொழிந்திருப்பது வரவேற்கத்தக்கது என்பதை இந்த நேரத்தில் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதே நேரத்தில், 6 சதவிகிதம்தான் பள்ளிக் கல்வியிலிருந்து உயர் கல்விக்கு மாணவர்கள் செல்கிறார்கள், அதை 20 சதவிகிதம் அளவுக்கு உயர்த்தி மாணவர்களை உயர் கல்விக்கு அனுப்புவதன் மூலம்தான் ஒரு knowledge society-ஐ உருவாக்க முடியும் என்று மத்திய அரசு தனது கொள்கையில் தீர்மானித்திருக்கிறது. ஆனால், தமிழகத்திலேயும் மற்றும் பல மாநிலங்களிலும் உயர் கல்விக்குச் செல்கின்ற மாணவர்களின் விகிதாச்சாரத்தைப் பார்த்தால் தனியார் கல்வி நிலையங்களில் படிக்கின்ற மாணவர்கள்தான் அதிகப்படியான எண்ணிக்கையில் உயர் கல்விக்குச் செல்கிற நிலைமை உள்ளது. அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் குறைவான எண்ணிக்கையில்தான் உயர் கல்விக்குச் செல்கிற துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. எனவே, சமச்சீர் கல்வியை அமல்படுத்துவதன் மூலமாகத்தான் ஏழை, பணக்காரர்கள், உயர்ந்தவர், தாழ்ந்தவர்கள் என்கிற வேறுபாடு இல்லாமல் அனைத்து மாணவர்களும் உயர் கல்விக்குச் செல்கிற ஒரு வாய்ப்பு ஏற்படும் என்ற வகையில், முழுமையான சமச்சீர் கல்வி செயல்படுத்தப்பட வேண்டுமென்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்கிற நேரத்தில், அதற்காக குழு அமைக்கின்றபோது, ஒரு காலவரம்பிற்குள் அந்தக் குழு தனது சிபாரிசுகளை வழங்கி அதை இந்த அரசு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால், காலவரம்பு இல்லாமல் தள்ளிப் போவது உண்மையிலேயே ஏழை மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்தக் கல்வி வாய்ப்பு தள்ளிப் போவதாக அமையும். அதனால் சமூக நீதிக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்கிற காரணத்தினால், அந்தக் குழுவை ஒரு காலவரையறைக்குள் அமைத்து சிபாரிசுகளைப் பெற்று அமலாக்க வேண்டுமென்று கேட்கும் அதே நேரத்தில், இங்கே முன்மொழிந்திருக்கிற

திருத்தத்தினை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே 1 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை இந்தத் திட்டம் அமலில் இருந்துகொண்டு வருகிறது. அதில் பல குறைபாடுகள் இருப்பதைக் களைய வேண்டிய அவசியம் இருந்தாலும், அதை 1 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கொண்டே 7 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை சமச்சீர் கல்வி அமலாக்கத்தை வேண்டுமானால் நிறுத்தி வைத்து, ஒரு நிபுணர் குழு சிபாரிசு பெற்ற பிறகு அதை அமலாக்கலாம். இந்த ஆலோசனைகளைப் பரிசீலித்து, இந்தத் திருத்தங்களோடு, இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றலாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஏற்கெனவே இதுசம்பந்தமான பல்வேறு கருத்துகளைச் சட்டமன்றத்திலும் பதிவு செய்திருக்கின்றது, வெளியிலும் சொல்லியிருக்கின்றது. இதுவொரு சமூக நீதிக்கான சட்டமுன்வடிவு என்று நான் கருதுகிறேன். ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்றில்லாமல் அனைவருக்கும் சமமான கல்வி கொடுக்க வேண்டும் என்பதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுதியாக நிற்கிறது. அந்த அடிப்படையில், ஏற்கெனவே பல்வேறு தலைவர்கள், இந்த சமச்சீர் கல்வி முறை சம்பந்தமான அறிவிப்பு வெளியானவுடனேயே கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். இதில் திருத்தங்கள் இருக்குமேயானால் எடுக்க வேண்டியவற்றை எடுக்க வேண்டும் என்று சொன்னால், எடுத்துவிடலாம் என்ற கருத்துகூட வெளியிலே பேசப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டத் திருத்தத்தில் மரியாதைக்குரிய திரு. முத்துக்குமரன் அவர்கள் குழுவினால் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு கருத்துகள், பல்வேறு





ஆலோசனைகள், திருத்தங்கள் இருக்குமேயானால், முழுமையாக அவற்றை ஆராய்ந்து, திருத்தங்களோடு இந்த சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காலதாமதம் என்பது இருக்கக்கூடாது.

அமரர் ஜீவானந்தம் போன்றவர்கள், தந்தை பெரியார் போன்றவர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம், இந்த நாட்டில் அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற முறையிலே பல்வேறு இயக்கங்களையும், போராட்டங்களையும் நடத்தியிருக்கின்றார்கள். மறைந்த டாக்டர் அம்பேத்கர் அவர்கள்கூட, அவர் வாழ்ந்த காலத்தில் அவர் பட்ட அனுபவங்களையும், கஷ்டங்களையும் எடுத்துச் சொல்லி அனைவருக்கும் சமமான கல்வி என்பது எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லும்போது அது ஒரு சமூகப் பார்வையோடு இருக்க வேண்டும் என்று சொன்னார். அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும், அந்தத் திருத்தங்கள் காலதாமதம் ஆகாமல், உடனடியாக தமிழகத்திலே அமல்படுத்தக்கூடிய முறையில் வர வேண்டும் என்று சொல்லி இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது, ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டது 1 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை என்று குறிப்பிட்டார். ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டது 1 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை அல்ல. 1 ஆம் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்பு மட்டும்தான். ஆகவே, முழுமையாக மறுபரிசீலனை செய்து முழுமையான சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவதுதான் எங்களுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சமச்சீர் பள்ளிக்

கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் முழு மனதோடு ஆதரிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமச்சீர் கல்வி என்பது என்ன என்பதே தெரியாத அளவிற்கு கடந்த ஆட்சிக் காலத்தில் அதுவொரு ஏமாற்று வித்தையாக ஆக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நடைமுறையில் சமத்துவமும் இல்லை, சீர்மையும் இல்லை. பெயர்தான் சமச்சீர் கல்வியே தவிர, நடைமுறையில் இரண்டுமே இல்லை.

“கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர் அல்லாருமில்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லைமாதோ!”

என்று 800 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலே பிறந்த பெரும் புலவர் கம்பர் கூறுகிறார். அவர் சொல்கிறார், தான் காண விரும்புகிற நாட்டில் பார்க்கிறார்; படித்தவர்களும் இல்லை, படிக்காதவர்களும் இல்லை. என்ன காரணம் என்றால், எல்லோரும் சமமாகப் படித்திருக்கிறார்கள். எல்லோரும் 10 ஆம் வகுப்புதான் படித்திருக்கிறோம் என்றால் அதிலே படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற வேறுபாடு கிடையாது.

‘கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர் அல்லாருமில்லை’

என்று சொல்கிறார். அதுதான் சமத்துவக் கல்வி. சமத்துவம், சீர்மை என்று சொல்கிறபோது சம வாய்ப்பு அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும்.

*முற்பகல் 10-35*

எங்கேயோ தாழ்த்தப்பட்ட குடியிலே பிறந்த அண்ணல் டாக்டர் அம்பேத்கர், வாய்ப்பு கிடைத்ததனால்தான் இந்தியாவினுடைய அரசமைப்புச் சட்டத்தையே உருவாக்கக்கூடிய அரும் திறமையாளராக ஆனார் என்பதை நாம் அறிவோம். அதேபோல, இராமேஸ்வரத்திலே மீனவர் குடும்பத்திலே பிறந்த டாக்டர் அப்துல் கலாம், வாய்ப்பு கிடைத்ததனாலேதான் மிகச் சிறந்த விஞ்ஞானியாக ஆனார் என்பதை நாம் அறிவோம். ஆகவே, சம வாய்ப்புகள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதுதான் சமச்சீர் கல்வியினுடைய நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய வாய்ப்புகள் இல்லை. வெறும் பாடத் திட்டத்தை மட்டும் ஒன்றாக ஆக்கிவிட்டு இதுதான் சமச்சீர் கல்வி என்று சொல்வதைப்போல ஒரு மோசடி வேலை நிச்சயமாக எதுவும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தி, உண்மையிலேயே இந்த மண்ணிலே பிறந்த அனைவருக்கும் சம வாய்ப்பு கொடுத்து அவரவர்களுடைய திறமையைப் பரிணமிக்கச் செய்வோமேயானால், சிறந்த விஞ்ஞானிகளை, சிறந்த நிபுணர்களை, சிறந்த டாக்டர்களை எதிர்காலத்திலே உருவாக்க முடியும். படிப்பிலே அரசாங்கம் தலையிடுவது என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால், கல்வி மிகவும் இன்றியமையாதது. மாணவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய வருங்காலம், எதிர்காலமே கல்வியிலேதான் இருக்கிறது. அத்தகைய சிறந்த துறையிலே அரசு தலையிடுகிறபோது அரசு எவ்வளவு எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டுமென்பதை உணராமல் ஏற்படுத்திய சிக்கலின் விளைவாகத்தான், சில பாடத் திட்டங்களை மட்டும் கொண்டு வந்து இதுதான் சமச்சீர் கல்வி என்று சொல்கின்ற போக்கு இருக்கிறது. அந்த வளைந்த செங்கோலை நிமிர்த்துகின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தச் சட்டமன்றத்திற்கு மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கச் செய்து, பள்ளிக் கல்வித் துறையினுடைய அமைச்சராக என்னை நியமித்த இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதத்தைத் தொட்டு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்து முதலிலே ஒரு கருத்தைத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அம்மாவினுடைய தலைமையில் இருக்கின்ற இந்த ஆட்சி, ஏதோ சமச்சீர் கல்விக்கு எதிராகச்

செயல்படுகின்றது, சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கைவிடுகின்ற நோக்கத்திலே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பது போன்ற ஒரு செய்தியைப் பரப்ப முயற்சிக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சமச்சீர் கல்விக்கு இந்த அரசு எதிரானதல்ல. சமச்சீர் கல்வியை இந்த அரசு கொண்டு வருவதிலே எந்தவித கருத்து வேறுபாடும் இல்லையென்பதை மிகத் தெளிவாக முதல்வர் அம்மா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நானே, இந்தச் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்றபோது, அன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகின்றபோதே, மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். "சமச்சீர் கல்வியை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் ஆட்சியில் இருக்கின்ற நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவில் இருக்கின்ற தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்; அவசரக் கோலத்திலே நீங்கள் இதைச் செயல்படுத்துகின்றீர்கள். ஆகவே, இதை நிதானமாக செயல்படுத்துங்கள்" என்றுதான் அன்றைக்கும் சொன்னோம். இன்றைக்கும் சொல்கின்றோம். அந்தத் தவறுகளைக் களைவதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கின்றோம். நீங்கள் சொல்வதுபோல, ஏதோ அரசியல் காரணத்திற்காக கடந்த ஆட்சியில் முதலமைச்சராக இருந்தவர் எழுதிய கவிதைகளை நீக்குவதற்காக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருப்பதாக நீங்கள் நினைத்திருந்தால் அது தவறு. ஒரே உதாரணம், நாங்கள் நினைத்திருந்தால் அந்தப் பகுதியை மட்டும் எடுத்துவிட்டு இந்தப் பாடப் புத்தகத்தை வைத்திருக்கலாம். ஆனால், எங்களுடைய நோக்கம் அது அல்ல. அரசியல் செய்வது எங்கள் நோக்கமல்ல. கடந்த ஆட்சியாளர்கள் கொண்டு வந்ததற்காக அந்தத் திட்டத்தையே நாங்கள் கைவிட வேண்டுமென்றால், நீங்கள் கொண்டு வந்து, உங்களாலே நடைமுறைப்படுத்த முடியவில்லையென்று கைவிடப்பட்ட வீராணம் (மேசையைத் தட்டும் ஒலி) திட்டத்தை புதிய வீராணம் திட்டம் என்று சொல்லி சென்னைக்கு ஒரு குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து காட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, இன்றைக்கு இந்த சமச்சீர் கல்வித் திட்டத்திலே இருக்கின்ற குறைபாடுகளை நீக்கி உண்மையிலேயே தமிழகத்திலே





இருக்கிற, கிராமத்திலே இருக்கின்ற ஏழை மாணவர்கள், கடைக்கோடியிலே இருக்கின்ற அந்த மாணவர்களுக்கும் நகர்ப்புறத்திலே இருக்கின்ற மாணவர்களுக்கும் கிடைக்கின்ற அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும், படிக்கின்ற வாய்ப்புகள் அனைத்தையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்த சமச்சீர் கல்வித் திட்டத்தைத் தள்ளி வைக்கிறோமே தவிர, இதைக் கைவிடவில்லை.

*முற்பகல் 10-40*

அந்தச் சட்டத்தில் பிரிவு 3-இலே என்ன சொல்லப்பட்டிருந்தது என்றால், இந்த ஆண்டு, 2011-2012-இலே, இரண்டாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை மற்றும் ஏழாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை சமச்சீர் கல்வி அமல்படுத்தப்படவேண்டும். ஏற்கெனவே ஒன்றாம் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளில் சமச்சீர் கல்வி அமல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டப் பிரிவு 3-க்கு மட்டும்தான் இன்றைக்கு திருத்தம் கொண்டுவந்து நிறுத்தி வைக்கப்படவிருக்கிறதே தவிர, சமச்சீர் கல்வி கைவிடப்படவில்லை என்பதை மிகத் தெளிவாக உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, கடந்த ஆட்சியாளர்கள் மக்களை மட்டும் ஏமாற்றவில்லை, நீதிமன்றத்தையே எந்த அளவுக்கு ஏமாற்றி இருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. கடந்த ஆட்சியிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு பல்வேறு தரப்பினர் இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தபோது, நீதிமன்றத்திலே அன்றைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பிலே கொள்கை அளவிலே சமச்சீர் கல்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், அதிலே பிரிவு வாரியாக பல்வேறு பிரிவுகள் செல்லத்தக்கவையல்ல என்று அன்றைக்கு நீதிமன்றத்தால் சொல்லப்பட்டது. பிரிவுகள் 11, 12 மற்றும் 14 ஆகிய மூன்று பிரிவுகளும் செல்லத்தக்கவையல்ல என்று சொல்லப்பட்டது. ஆனால், அந்த அரசு அவசர கோலத்திலே, சமச்சீர் கல்வியைக் கொண்டுவரவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, நீதிமன்றத்தையே அவமதிக்கின்ற விதமாக, அந்தப் பிரிவுகளில் திருத்தத்தைக் கொண்டுவராமல் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதுமட்டுமல்ல, அந்தப் பிரிவிலே மிக

[திரு. சி.வி. சண்முகம்] [2011 ஜுன் 7

முக்கியமானதொன்று சொல்லப்பட்டிருக்கிறது. State Advisory Council அமைக்கப்படவேண்டும், Competitive Authority அமைக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள், அந்த Competitive Authority-ஐ Notify செய்திருக்கிறீர்களே தவிர, சட்டத்திலே சட்டத் திருத்தம் செய்து, அந்தச் சட்டத்திலே கொண்டுவரவில்லை. அதைப்போன்று, State Advisory Council-ஐ இந்தச் சட்டத் திருத்தத்திலே கொண்டு வராமல் சமச்சீர் கல்வியை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆகவே, நீதிமன்றத்தையும் நீங்கள் மதிக்கவில்லை. பொது மக்களுக்கு, மாணவர்களுக்கு உண்மையிலேயே சேவை செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லை. தேர்தல் அறிக்கையில் சொல்லிவிட்டோம், அதனால் சமச்சீர் கல்விக் கொள்கை என்ற பள்ளிக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலே, அந்த நீதிமன்றத் தீர்ப்பில் "Uniform System of School Education வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அது என்ன? உண்மையிலே சமச்சீர் கல்விக் கொள்கை என்பதற்கு அர்த்தம் வரவில்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சமச்சீர் கல்விக் கொள்கை என்றால் ஏதோ பாடத் திட்டங்களில் மாற்றத்தைக் கொடுப்பது மட்டுமல்ல, தரமான கல்வியும் கொடுக்கப்படவேண்டும் என்றுதான் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. ஆகவே, இந்த சமச்சீர் கல்வியிலே சொல்லப்பட்டிருக்கிற அந்தக் குறைபாடுகளெல்லாம் நீக்கப்படவேண்டும். அவற்றையெல்லாம் நீக்குவதற்கு ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும்.

மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சர் 'நாங்கள் வல்லுநர் குழுவை அமைத்து மற்ற மாநிலங்களுக்கெல்லாம் சென்று ஆராய்ந்து பார்த்து இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தோம்' என்று சொன்னார்கள். ஆனால், உண்மையிலேயே அந்த வல்லுநர் குழுவிலே யார் இருந்தார்கள்? கல்வியாளர்கள் இருந்தார்களா? திரு. முத்துக்குமரன் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு, 109 பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தது. ஆனால், அந்த 109 பரிந்துரைகளிலே அரசு ஏற்றுக்கொண்டது நான்கே நான்குதான். மற்ற அனைத்து பரிந்துரைகளையும் கடந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அவற்றை ஆராய்வதற்கு முன்னாள் அரசு அதிகாரி திரு. விஜயகுமார் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர் ஒரு கல்வியாளர் கிடையாது. அவருடன் மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள். அந்த மூன்று



2011 ஜுன் 7] [திரு. சி.வி. சண்முகம்]

உறுப்பினர்களில் ஒரேயொரு உறுப்பினர் மட்டும்தான், Santhome High School-ல் இருக்கின்ற தலைமையாசிரியர் மட்டும்தான் கல்வியாளர். மற்ற இருவரும் கல்வி அதிகாரிகள். ஆகவே, கல்விக் குழுவைச் சேர்ந்தவர்களோ, கல்வியாளர்களோ எவரும் அந்தக் குழுவிலே நியமிக்கப்படவில்லை. உண்மையிலேயே கல்வியாளர்கள் நியமிக்கப்பட்டு, ஆராய்ந்து, சீர்தூக்கி இந்தச் சட்டம் கொண்டு வருவதாகச் சொல்லப்பட்டது, மிக மோசடியான சட்டம். ஆகவே, உண்மையாகவே ஒரு வல்லுநர் குழு, அதுவும் கல்வியாளர்களைக் கொண்டு நியமித்து இந்தச் சட்டத்திலே இருக்கிற குறைபாடுகளையெல்லாம் நீக்கி, உண்மையிலேயே அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வி, தரமான கல்வி கொடுக்கப்படவேண்டும் என்ற நோக்கத்திலே, இன்றைக்கு அம்மா அவர்களால் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கம் சொல்லிவிட்டார். அதற்கு மேல் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கைமீது நீங்கள் பேசுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 7

*பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் கல்வி முறை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*



2011 ஜூன் 7]

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (ஆ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். பேரவை விதி 13(2)-ன்கீழ் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"இன்று நடைபெற இருக்கும் ஆளுநர் உரைமீதான விவாதத்தை, பேரவை விதி 13 (2)-ன்கீழ் தள்ளிவைத்து, இன்று முன்மொழியப்பெறும் அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 6. அரசினர் தனித் தீர்மானம்

### சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கும் முடிவைத் திரும்பப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 7

ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவினைத் திரும்பப்பெறவேண்டும் என்கிற தீர்மானத்தினை நான் முன்மொழிகின்றேன்.

**தீர்மானம்**

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவு இச்சட்டப் பேரவையால் திரும்பப் பெறப்படவேண்டும் என்றும், இந்த முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், நாடாளுமன்றம் தேவையெனக் கருதும் அளவிற்கு, இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களிலும் திருத்தம் கொண்டுவருவதற்கு உரிய அவசியமான விதிக்கூறுகளை உள்ளடக்கிய தேவையான சட்டத்தினை இயற்ற வேண்டும் என்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது."

இந்தத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளைத் தெரிவித்ததற்குப் பிறகு எனது பதிலுரையைத் தருகிறேன் என்பதைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தின்மீது விவாதம். கருத்துத் தெரிவிக்க விரும்பும் உறுப்பினர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே மீண்டும் தமிழகத்திலே மேலவையை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றியிருந்தார்கள். மீண்டும் தமிழகத்திலே மேலவை அவசியம் இல்லை என்கிற வகையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர், போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு தீர்மானத்தை இன்றைக்கு முன்மொழிந்திருக்கிறார்கள். இதை வரவேற்பதிலே நான் மிக, மிக மகிழ்ச்சியடைகிறேன்.

வரலாறு திரும்புகிறது என்று சொல்வார்கள். 1986 ஆம் ஆண்டு அன்றைக்கு நீண்டகாலமாகத் தமிழகத்திலே செயல்பட்டுவந்த மேலவை இனி இருக்கக்கூடாது, மேலவையை ஒழித்துவிட வேண்டுமென்ற தீர்மானத்தை அன்றைக்கு இந்த அவையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அன்றைக்கு



2011 ஜூன் 7] [முனைவர் செ.கு. தமிழரசன்]

அவை முன்னவராக இருந்த நாவலர் அவர்கள் முன்மொழிந்தார்கள். அன்றைக்கு அந்தக் கருத்தினை வழிமொழிந்த நான், 25 ஆண்டு காலத்திற்குப் பிறகு மீண்டும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசியல் வாரிசாக இருக்கக்கூடிய அம்மா அவர்கள் அந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்றபோது, கால் நூற்றாண்டு காலத்திற்குப் பிறகு மீண்டும் வழிமொழிகின்ற அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறதே என்று நினைக்கின்றபோது நான் உண்மையிலேயே இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

*முற்பகல் 10-50*

இந்தியாவிலே இருக்கிற 28 மாநிலங்களிலே, 6 மாநிலங்களிலேதான் மேலவை இருக்கிறது. மீதி 22 மாநிலங்களிலே மேலவை இல்லை. ஏழு யூனியன் பிரதேசங்களிலே கூட மேலவை இல்லை. ஆறே ஆறு மாநிலங்களில் இருக்கிற மேலவை என்ன மிகப் பெரிய அளவிலே பயன்பட்டிருக்கிறது என்றால், அப்படிப்பட்ட ஒரு பயன்பாடு இன்றைய அளவிலே இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்டுக்கு தாடி தேவையில்லை என்று குறிப்பிட்டதைப்போல, மேலவை என்பது சட்டமன்றத்துக்குத் தேவையில்லாத ஒரு தாடியாக இருக்கிறதே தவிர, அதற்கு பெரிய அவசியம் ஒன்றும் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்களே மேலவையைப் பற்றிச் சொல்கிறபோது, சட்டமன்றம் ஒரு தேநீர் குவளையானால், தேநீர் கோப்பையாக வேண்டுமானால் மேலவை இருக்கும், ஆற்றிக்கொள்வதற்கு என்று சொன்னார். அது அந்தக் காலம். அன்றைக்கு வேண்டுமானால் அப்படிப்பட்ட ஒரு பழமொழி, ஒரு மரபு அவசியமாக, இருந்தது. ஆனால், இந்தக் காலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு மிகச் சிறந்த வல்லுநர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குவளையிலேயே எந்த அளவுக்கு சூடு இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு சூடாகத் தயாரித்துத் தருகிற அளவிற்கு ஒரு சமூக விற்பன்னர்.

அரசமைப்புச் சட்டத்தை எழுதுகிறபோது, அரசமைப்புச் சட்ட நிர்ணய சபையிலே மேலவை வேண்டுமா, வேண்டாமா என்று விவாதம் எழுந்தபோதே, ஒரு சாரார் எல்லா மாநிலங்களிலும் மேலவை வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். ஒரு சாரார் மேலவை தேவையில்லையென்று சொன்னார்கள். அன்றைக்கு அரசமைப்புச் சட்டக் குழுவின் தலைவராக இருந்த

வணக்கத்துக்குரிய பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள், சட்டமன்றங்கள் தேவைப்பட்டால் மேலவையை வைத்துக்கொள்ளலாம், தேவைப்படாவிட்டால் எடுத்துவிடலாம். சட்டமன்றத்துக்கே இந்த அதிகாரத்தைத் தரலாம்; பாராளுமன்றத்துக்கே இந்த அதிகாரத்தைத் தரலாம் என்றார். தேவைப்பட்டால் வைத்துக்கொள்கிற அதிகாரமும், தேவை இல்லாவிட்டால் நீக்குகிற அதிகாரமும் இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு இருக்கிறபோது, எதற்கு தேவையில்லாத ஒரு மேலவை? எதற்காக இந்த மேலவை? ஒரு காலத்திலே மேலவையிலே ஆசிரியர்களுக்கு இடம் இல்லை, விஞ்ஞானிகளுக்கு இடம் இல்லை, வழக்கறிஞர்களுக்கு இடம் இல்லை, மருத்துவர்களுக்கு இடம் இல்லை, உள்ளாட்சித் துறை பிரதிநிதிகளுக்கு இடம் இல்லை; அவர்கள் எல்லாம் இடம்பெறும் வகையிலே மேலவை இருக்க வேண்டும் என்றெல்லாம் பரவலாகப் பேசினார்கள். ஆனால், இன்றைக்கு அப்படியா? இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அமைந்துள்ள இந்தச் சட்டப் பேரவையிலே பெரும்பாலும் வழக்கறிஞர்கள் நிரம்பியிருக்கிறார்கள், ஆசிரியர்கள் நிரம்பியிருக்கிறார்கள், பேராசிரியர்கள் இருக்கிறார்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், 80 சதவீதத்துக்கும் மேலே படித்தவர்கள்தான் இந்தப் பேரவையிலே இருக்கிறார்கள் என்கிறபோது அந்தக் காரணமும் அவசியமற்றது.

எந்த திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத்திலே மேலவை வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்ததோ, அதே திராவிட முன்னேற்றக் கழகம், 1969-லே மேற்கு வங்காள சட்டமன்ற மேலவையை ஒழிக்கிற தீர்மானம் பாராளுமன்றத்திலே கொண்டு வரப்பட்டபோது, மேலவையே கூடாது, இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறது. ஆனால், இங்கே அவசரமாக மேலவையைக் கொண்டு வருவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிற நிர்ப்பந்தம், காரணம் என்னவென்றால் வயதானவர்களுக்கு, ஓய்வு பெற்றவர்களுக்கு இடம் தரவேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அப்படிப்பட்ட ஒரு நிர்ப்பந்தம் இருந்ததனாலே, அவசரமாக இதைக் கொண்டு வந்தார்களே தவிர, இதிலேயும் அவசரம் காட்டினார்களே தவிர, அதை நிறைவேற்றுவதற்குக்கூட உண்மையாகவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே ஒரு முழு உணர்வு இருந்திருக்காது,





திராவிட முன்னேற்றக் கழக தலைமைக்கே இருந்திருக்காது என்று கருதுகிறேன். இது ஒழிக்கப்பட்டது 1986-லே, அதற்குப் பிறகு 1989-லே ஒரு முறை ஆட்சிக்கு வந்தார்கள், 1996-லே ஒரு முறை வந்தார்கள், 2006-லே ஒரு முறை வந்தார்கள். மூன்று முறை அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது, மத்தியிலே அவர்கள் கூட்டாக ஆட்சியிலே இருந்தபோதுகூட, இதை நிறைவேற்ற வேண்டும் என்ற உண்மையான எண்ணம் இருந்திருந்தால் நிறைவேற்றி இருக்கலாம். அவர்களுக்கேகூட அவர்கள் ஆட்சியிலே இடம் பெறாதவர்களுக்கு எனக் கூறி தட்டிக் கழிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இதைக் காட்டிக் கொண்டு இருந்தார்களே தவிர, உண்மையாகவே அவர்களுக்கே அந்த எண்ணம் இல்லை என்பதுதான் என்னைப் போன்றவர்களுடைய குற்றச்சாட்டு. அப்படிப்பட்ட நிலைமையிலே பல கோடி ரூபாய் வீண் செலவை உருவாக்கக்கூடிய மேலவை நம்முடைய சட்டமன்றத்துக்கு அவசியம் இல்லை. இத்தீர்மானத்தை மிகத் துணிவோடு கொண்டு வந்து இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஆதரிக்கிறேன், ஏனென்றால், நாடாளுமன்ற மேலவையில் தலித்துகளுக்கே இட ஒதுக்கீடு கிடையாது. தலித்துகளுக்கே இட ஒதுக்கீடு இல்லாத ஒரு சட்டமன்ற மேலவையும், பாராளுமன்ற மேலவையும் இருக்கக்கூடாது என்பதுதான் எங்களைப்போன்ற அடித்தளத்து மக்களுடைய உணர்வு. அந்த உணர்வை இன்றைக்குச் செயலாக்கி இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை அடித்தளத்து மக்களின் சார்பில் நெஞ்சார, மனமாரப் பாராட்டி, வாழ்த்தி, வரவேற்று அமைகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவு இச்சட்டப் பேரவையால் திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். மேலவை என்பது நாம் அனைவரும் அறிந்தது. House of Commons, House of Lords என்று ஆங்கிலேயர் காலத்திலேயே அங்கு ஓர் மேலவை கொண்டுவரப்பட்டது மன்னர் ஆட்சியின் அடிப்படையிலேயே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு ஏற்கெனவே

[திரு. ரா. சரத்குமார்] [2011 ஜூன் 7

பேசியிருக்கிறார், House of Lords, House of Commons பற்றி. அது இருந்ததற்குக் காரணம் அங்கு மன்னர் ஆட்சி இருந்த காலத்திலே அங்கு அவருக்கு எடுத்துரைக்க ஓர் ஆலோசனைக் குழு தேவைப்பட்டதன் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட ஒன்றுதான். அதை ஆங்கிலேயர் காலத்திலிருந்து இதுவரை கடைப்பிடித்து வந்தார்கள். இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர், சொல்ல வேண்டிய கருத்துகளை எல்லாம் சொன்ன காரணத்தினால், இங்கு சுருக்கமாகப் பேசி அமர ஆசைப்படுகின்றேன். இந்த மேலவை எதற்காகத் தேவைப்படுகிறது என்பதை நாம் ஆலோசித்துப் பார்க்கையிலே அவர் சொல்வது போல தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வரமாட்டோம் என்று உறுதி செய்யப்பட்ட பிறகு பதவி ஆசை இருந்த காரணத்தினால், கடந்த ஆட்சியாளர்கள் உடனடியாக இதை அமல்படுத்திவிட்டால் தாங்கள் தொடர்ந்து பதவியிலே இருக்கலாம் என்ற ஆசையில்; அல்ல, பேராசையின் காரணத்தினால்தான் இந்த மேலவையை வரவேற்கின்ற எண்ணத்தில் இருந்தார்கள் என்பது தெள்ளத் தெளிவாகிறது. ஆனால், ஒரு வருத்தம். அவர்கள் வெளிநடப்புச் செய்ததனால் இதைப் புரிய வைக்க முடியாமல் போய்விட்டது. அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், 1861 ஆம் ஆண்டே, இதற்கான சட்டமியற்றப்பட்டிருந்தாலும் ஆங்கிலேயர் காலத்திலேயே இது சரிவரச் செயல்படாமல் போனது என்பது உண்மை என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஒரு வருடத்தில் 9 நாட்கள் மட்டும்தான் மேலவை இயங்கி இருக்கிறது. சில சமயங்களில் ஊட்டியிலே மேலவைக் கூட்டம் நடத்தி அங்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு ஒரு மணி நேரமும், 2 மணி நேரமும் மேலவை நடந்த காலங்களும் உண்டு. உலகிற்கே ஒளி தரக்கூடிய, வெளிச்சத்தைத் தரக்கூடிய சூரியன் அஸ்தமனம் ஆகாது என்றும், நிருவாகத் திறமை உள்ள ஆட்சியாளர்கள் என்றும் பாராட்டப்பட்ட அந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களாலேயே மேலவையை சிறப்பாக நடத்த முடியவில்லை என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது இந்த மேலவை வேண்டும் என்றால் ஆட்சியில் இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான் விருப்பப்பட வேண்டும். காரணம், பெரும்பான்மை மக்கள் ஆதரவோடு பெரும்பான்மை மன்ற உறுப்பினர்களைக்



2011 ஜூன் 7] [திரு. ரா. சரத்குமார்]

கொண்ட இவர்களுக்குத்தான் அந்த உரிமை இருக்கிறதே தவிர, மைனாரிட்டி அரசை வைத்துக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தாம் பதவியில் நீடிக்க வேண்டும் என்று நினைத்தவர்களுக்கல்ல. ஆங்கிலேயர் காலத்திலேயே அவர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களையும், நிலச்சுவான்தார்களையும், ஜமீன்தார்களையும், யார் அவர்களுக்கு 'ஆம்' என்று சொல்வார்களோ, யார் அவர்களுக்கு உடந்தையாகப் போவார்களோ, அவர்களை மட்டும் மேலவைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அதேபோல, பதவி நிச்சயமாக மீண்டும் வராது என்ற அடிப்படையிலே, மேலவையில் அமர்ந்து விட்டால் அது கலைக்கப்படாது, 6 வருட காலம் நிம்மதியாக மீண்டும் பதவியிலே அமர்ந்துகொள்ளலாம் என்ற அடிப்படையில், அவர்களுக்கு நெருக்கமானவர்களை, அவர்களுக்கு மிக, மிக நெருக்கமானவர்களை அருகில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசையினால், அவர்களுக்கு மேலவை வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அது தேவையில்லை என்பது உறுதியாக எங்களால் சொல்ல முடிகிறது. மேலவை கலைக்கப்பட்டு 12 ஆண்டு காலம் தி.மு.க. ஆட்சி இருந்தபோது, மேலவையை முன்கூட்டியே கொண்டு வர ஏன் முடிவுசெய்யவில்லை என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இன்றைக்குத் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் மக்களின் பேராதரவோடு இப்போது வருகை தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ஆலோசனைக் குழு என்பது நிச்சயமாகத் தேவையில்லை—because she is a lady of great administration. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வகையில் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து இந்தச் சட்டமன்றத்திற்கு அவர்கள் அழைத்து வந்திருக்கிறார்கள். அந்த நல்லவர்கள், திறமையானவர்கள், ஆற்றல்மிக்கவர்கள், நேர்மையானவர்கள். அப்படிப்பட்டவர்களின் கருத்துகளே போதும் என்ற அளவிலே, மேலவைக்கு அவசியம் இல்லை என்பதை உறுதியாகச் சொல்லும் வகையிலே, மேலவையைக் கொண்டு வரும் முடிவைத் திரும்பப் பெற வேண்டும் என்று அவர்கள் சொன்ன கருத்தை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

[2011 ஜூன் 7

முற்பகல் 11-00

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவு இச்சட்டப் பேரவையால் திரும்பப் பெறவேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் மனதார வரவேற்கிறேன்.

கடந்த ஆட்சியாளர்களால் மேலவை கொண்டுவரப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபொழுது, இதை எதிர்த்து நீதிமன்றம் சென்றவர்களில் நானும் ஒருவன். சட்டமன்ற மேலவையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை, பெண்களுக்கு இல்லை, அதைப்போலவே உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் இல்லை என்ற குறைகளையெல்லாம் சுட்டிக்காட்டி, அப்படிப்பட்ட குறைகளோடு அமைகின்ற மேலவை தமிழகத்திற்குத் தேவையில்லை என்று நாங்கள் வாதிட்டோம்.

எனவே, இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் ஒரு மகத்தான ஆட்சி அமையப்பெற்று, இன்று அந்த மேலவை வேண்டுமென்ற முடிவை இரத்து செய்யக்கூடிய இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுகின்றபொழுது, அதை நான் மனதார வரவேற்கிறேன்.

மேலும், இந்திய ஜனநாயகத்தில், இந்திய அரசமைப்பில் ஏழை எளியவர், படித்தவர், படிக்காதவர் என்று அனைவருக்கும் சமமான வாக்குரிமை அளிக்கப்பெற்று, அந்த வாக்குகளின் அடிப்படையில் மக்கள் மன்றம் ஒன்று வந்தபிறகு, மறைமுகமாகத் தேர்ந்தெடுப்பதற்கு ஓர் அமைப்பு தேவையில்லை. எனவே, இங்கே வழக்கறிஞர்களாக, மருத்துவர்களாக, பொறியியல் வல்லுநர்களாக, ஆசிரியர்களாக, பேராசிரியர்களாக 234 பேர்கள், ஏழு கோடி தமிழ் மக்களுடைய வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கக்கூடிய சக்தி பெற்றவர்கள் உள்ளார்கள். எனவே, இதற்கு இணையான இன்னோர் அமைப்பு தேவையில்லை.

மேலும், அந்த மேலவையின் காரணமாக, இந்த அரசுக்கு இன்னும் கூடுதலாகச் செலவு ஏற்படுவதும் ஏற்புடையதல்ல. ஏற்கெனவே, கடந்த ஆட்சியாளர்கள் ஒரு இலட்சம் கோடி ரூபாயைக் கடனாக நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். இதைச்



2011 ஜூன் 7] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

சமாளிப்பதற்கே நமக்கு இன்னும் சில காலம் தேவைப்படும். எனவே, இப்படிப்பட்ட ஒரு சூழலில் கூடுதல் சுமையை உருவாக்கக்கூடிய மேலவை வேண்டாமென தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்படுகின்ற இந்தத் தீர்மானத்தை முழுமையாக வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கலாம் என்ற முடிவை இப்பேரவை திரும்பப் பெறவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது.

மேலவை அமைக்கப்பட்டால் பயனற்ற செலவு மற்றும் நேர விரயம், நிதிச் சுமை போன்றவை ஏற்படும். முந்தைய தி.மு.க. ஆட்சியில் மேலவையைக் கொண்டுவந்து தமது கட்சிக்காரர்களுக்குப் புதிய பதவிகளை வழங்க முயன்று, அவசர, அவசரமாக அதை நிறைவேற்றினார்கள். அவசர கதியில் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம் பழுது நிறைந்திருந்ததால் அது நடைமுறைக்கு வரத் தாமதமானது. சட்டமன்றத் தேர்தல் வந்ததும் அது தொடர்பான பணிகளும் நின்றுவிட்டன.

தற்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி மக்களின் அமோக ஆதரவைப் பெற்று வென்ற நிலையில், மேலவை அமைக்கப்பட்டால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் மேலவையில் அதிக எண்ணிக்கையில் எம்.எல்.சி.-க்களைப் பெறமுடியும். இருப்பினும், அ.தி.மு.க. தனது கொள்கையில் பின்வாங்காமல் மேல்சபையை அமைப்பதில்லை என்ற முடிவை எடுத்திருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அ.தி.மு.க. அரசு, மாண்புமிகு முதல்வர் தலைமையிலான இந்த அரசு, தன்னலம் பாராமல் நாட்டு நலனை முன்வைத்தே இயங்குகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. மேல்சபை தேவையில்லை என்று அ.தி.மு.க. அரசு எடுத்துள்ள இந்த நல்ல முடிவு தமிழகத்தின் நலனைக் கருதி, அக்கறையுடன் எடுக்கப்பட்ட முடிவாக மனிதநேய மக்கள் கட்சி கருதுகிறது.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2011 ஜூன் 7

கனவான்கள் சங்கமிக்கும் இடம் என்று வர்ணிக்கப்பட்ட மேலவை, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான பின்வாசலாகி, மக்களைச் சந்தித்து வெற்றிபெற இயலாதவர்கள் பதவிக்கு வருவதற்கான கொல்லைப்புறமாகவும் விளங்கியது என்பதையும் நாம் மறுக்க முடியாது.

முற்பகல் 11-05

இந்தியாவில் உள்ள மாநிலங்களில், உத்தரப்பிரதேசம், பீஹார், கர்நாடகம், மகாராஷ்டிரம், ஜம்மு-காஷ்மீர் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களில் மட்டுமே மேலவைகள் உள்ளன. எஞ்சிய 22 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் மேலவை இல்லை. மேலவை உள்ள 6 மாநிலங்களில் இயற்றப்படும் சட்டங்கள், விவாதங்கள் மேலவை இல்லாத மாநிலங்களிலிருந்து எந்த வகையிலும் மேம்பட்டவையாக இல்லை. மேலவை இல்லாத மாநிலங்கள் என்பதற்காகத் தமிழகம் உட்பட 22 மாநிலங்களின் தரம் தாழ்ந்துவிடவும் இல்லை. 1986 முதல் மேலவை இல்லாமல்தான் தமிழக சட்டமன்றம் இயங்குகிறது. இதன்காரணமாக 1986-க்குப் பிறகு தமிழகம் அதலபாதாளத்தில் வீழ்ந்துவிடவும் இல்லை. தமிழகத்தில் மேலவை இல்லாததால் ஏற்பட்ட பாதிப்புகள் என்று ஒரு பாதிப்பைக்கூட மேலவை தேவை என்று இந்த அவையிலே தீர்மானம் நிறைவேற்றிய முன்னாள் தி.மு.க. ஆட்சியாளர்களால் சொல்லிக்காட்டவும் முடியவில்லை. எவ்வளவோ சாதனைகளைச் செய்து விட்டதாக கடந்த முறை ஆட்சியில் இருந்தவர்கள் மார்தட்டிக் கொண்டார்கள். அது உண்மை என்றால், அவை மேலவை இல்லாமல்தானே செய்யப்பட்டன? கடந்த காலத்தில் மேலவை செயல்பட்ட காலத்தில் அதற்கு ஆகிய செலவு 30 லட்சம் ரூபாய்தான் என்று மேலவை தேவை என்று தீர்மானம் நிறைவேற்றியவர்கள் கூறி, மேலவை அமைப்பதால் பெரிய அளவில் அரசுக்கு செலவாகப்போவதில்லை என்று சொன்னார்கள். ஆனால், இது உண்மைக்குப் புறம்பான கருத்தாகும்.

ஆரம்பத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம் 250 ரூபாயாக இருந்தது. இன்று 50,000 ரூபாயாக ஆகிவிட்டது. மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்படுகிறது. மேலவை உறுப்பினர்களும் ஓய்வு பெறும்போது அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள்



2011 ஜூன் 7] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

இறந்துவிட்டால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு 5,000 ரூபாய் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. இதுபோல் மேலவை உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும் வழங்க வேண்டும். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இலவச சிகிச்சை அளிப்பதுபோல இவர்களுக்கும் அளிக்க வேண்டும். இப்படி, பல கோடி ரூபாய்கள் ஆண்டுதோறும் செலவாகும் பயனற்ற திட்டத்தைத்தான் கடந்த தி.மு.க. ஆட்சியாளர்கள் கொண்டு வந்தார்கள். நீதிமன்றங்கள் தீர்ப்பு அளிப்பதில் காட்டும் அநியாய தாமதம் காரணமாக மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை. பெரும் அல்லலை மக்கள் அனுபவிக்கிறார்கள். எனவே, எளிதில் வழக்குகளை விசாரித்து முடிப்பதற்காக எல்லா ஊர்களிலும் நியாயாலயா அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்தியது. இதற்கு தமிழகத்தில் நீதி இல்லையென்று—நிதி இல்லையென்று, (குறுக்கீடு) நீதியும் இல்லைதான்—மத்திய அரசுக்கு அன்றைய ஆட்சியாளர்கள் கடிதம் எழுதினார்கள். மக்களுக்குப் பெரிதும் பயன் தரும் ஒரு திட்டத்தை செயல்படுத்த நிதி இல்லையென்று கூறிய சென்ற ஆட்சியாளர்கள், மக்களுக்கு கடுகளவும் பயன் தராத மேலவையை உருவாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்து, மக்கள் பணத்தைப் பாழாக்க முயன்றது எப்படி நியாயம் ஆகும்? மாநிலத்தின் ஓராண்டு, மொத்த வருவாயைவிட மாநில அரசின் கடன் சுமை அதிகம் என்ற நிலையில் ஆட்சியை நடத்தியவர்கள், பயனற்ற வழிகளில் பணத்தைப் பாழாக்க முயன்றதால்தான், நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் தமிழக மக்கள் இத்தகைய ஊதாரிச் செலவை சகித்துக்கொள்ள முடியாமல் அவர்களுக்கு தேர்தலிலே படுதோல்வியை அளித்தார்கள். எனவே, மேலவை தேவையென்ற சென்ற ஆட்சியாளர்களின் முடிவைத் திருத்தி, தமிழகத்திற்கு மேல் சபை தேவையில்லையென்ற, தமிழக மக்களின் அமோக ஆதரவை சட்டமன்றத் தேர்தலிலே பெற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வரின் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சி ஆதரிக்கின்றது, வரவேற்கின்றது, பாராட்டுகின்றது என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** தமிழ்நாடு சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவு

[திரு. ஜெ. குரு என்கின்ற குருநாதன்] [2011 ஜுன் 7

இச்சட்டமன்றப் பேரவையால் திரும்பப்பெற வேண்டுமென்ற இந்த முடிவை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் எதிர்க்கிறோம். கடந்த ஆட்சியில் மேலவை பற்றிய தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது பாட்டாளி மக்கள் கட்சி ஆதரவு கொடுத்து, அந்த மேலவை கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் செயல்பட்டிருக்கின்றோம். அந்த வகையில், மீண்டும் மேலவை கொண்டு வர வேண்டுமென்பதை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்தாக இங்கு சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவு, இச்சட்டமன்றப் பேரவையால் திரும்பப் பெறப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரால் முன்மொழியப் பெற்றிருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நூற்றுக்கு இரு நூறு மடங்கு அல்ல, ஆயிரம் மடங்கு வரவேற்று ஆதரிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

ஏனென்று சொன்னால், ஒவ்வொரு முறையும் சட்டமன்ற மேலவை வேண்டுமென்ற தீர்மானங்கள் வந்திருக்கிறபொழுதெல்லாம் இந்திய கம்யூனிஸ்டு கட்சி அதைக் கடுமையாக எதிர்த்திருக்கிறது. மக்கள் ஜனநாயகத்தின்மீது நம்பிக்கையற்றவர்கள், மேலவையைக் கொண்டு வரவேண்டுமென்று ஒவ்வொரு நிலையிலும் முயன்று கொண்டிருக்கிறார்கள். உலகத்திற்கே பாராளுமன்ற ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தியதாகச் சொல்லிக் கொண்டிருக்கிற பிரிட்டிஷ் நாட்டில் இன்றைக்கும் மன்னராட்சி முறை என்ற அந்த முறை மறைமுகமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்குதான் இந்த பிரபுக்கள் கவுன்சில் கொண்டுவரப்பட்டது. எனவே, இங்கே மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டு, படிப்படியாக சட்டமன்ற மேலவைகள் அகற்றப்பட்டு, பாராளுமன்ற ஜனநாயக முறையில் சட்டமன்ற நடைமுறைகளை வலுப்படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில், மக்களுக்கே எல்லா அதிகாரமும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற சட்டமன்றமே எல்லா அதிகாரத்தையும் பெற்று சிறப்பாகச் செயலாற்ற வேண்டுமென்ற ஜனநாயகக் கருத்து



2011 ஜுன் 7] [திரு. சு. குணசேகரன்]

வலுப்பெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், இப்படிப்பட்ட மேலவை அமைப்பு முறை என்பது தேவையில்லை என்பது இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அழுத்தமான கருத்தாகும். பணச் செலவு என்பது மட்டுமல்ல, இன்றைக்கு உலகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பல்வேறு மாற்றங்கள், விரைவாகச் செயல்படுகிற தன்மைகள் என்று எடுத்துக் கொண்டிருக்கிற நேரத்தில், சட்டமன்ற மேலவை போன்ற அமைப்புகள் எல்லாம் நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் தடை போட்டுத் தடை போட்டு, நமது வளர்ச்சியை பின்னுக்குத் தள்ளுகிற அமைப்புகளாக மாறிவிடும். எனவேதான், இன்றைக்கு அந்த மேலவையை அகற்றி சட்டமன்ற ஜனநாயக முறைகளை, சட்டமன்ற நடவடிக்கைகளை அல்லது சட்டமன்றத்தில் நமது எதிர்காலக் கடமைகளை வலுப்படுத்துகிற விதமாக சட்டமன்ற நடைமுறைகளில் பல்வேறுவிதமான மாற்றங்களைக் கொண்டு வந்து ஜனநாயகத்தை சீரமைக்க வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட சட்டமன்ற மேலவைகளை உருவாக்கக் கூடாது என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலப் பிரபுத்துவ சிந்தனையும், மன்னர்களைப் பற்றிய மிகப் பெரிய பெருமைகளையும் உடையவர்களுடைய கருத்துகளாகத்தான் இந்த சட்டமன்ற மேலவை கொண்டுவருபவர்களுடைய கருத்துகளைப் பார்க்க முடியும். அந்த அடிப்படையில், திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் இந்த சட்டமன்ற மேலவையைக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு உதித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, பதவியைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு காரணம் இருக்கலாம் என்றுதான் பரவலாகப் பேசப்படுகிறதே தவிர, இதற்கு வேறு எந்த அடிப்படையும், எந்த நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அந்த அடிப்படையில் சட்டமன்ற மேலவையை அமைக்கும் முடிவை இந்த சட்டமன்றப் பேரவையில் திரும்பப் பெறுவது மட்டுமல்ல, இனிமேல் எதிர்காலத்தில் மேலவையே கொண்டு வராமல் இருப்பதற்கு ஏதாவது ஒரு வழியில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர முடியும் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதைத் தீவிரமாக சிந்தித்து சட்ட வல்லுநர்களை அணுகி இனிமேல் எந்தக் காலத்திலும்,

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜூன் 7

யார் ஆட்சிக்கு வந்தாலும், இப்படிப்பட்ட ஒரு பின்னோக்கிய சிந்தனை எழாதவண்ணம் தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவையைத் திரும்பப் பெற வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கின்றது. இதே மாமன்றத்தில் கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை கடுமையாக எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வாக்களித்திருக்கிறது. இங்கு பேசிய மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதுபோல நில பிரபுத்துவ ஆட்சி, மன்னர் ஆட்சிபோல கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் அத்தகைய அம்சங்களைக் கடைப்பிடிக்க வேண்டும், அமலாக்கப்பட வேண்டுமென்ற சிந்தனையோடு இருந்ததனால்தான் 25 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திலே இப்பேர்ப்பட்ட மன்னர் ஆட்சி முறையை மறைமுகமாகக் கொண்டு வருவதற்கு, மேலவையைத் தோற்றுவிப்பதற்காக அஸ்திரத்தைக் கையாண்டு இருக்கிறார்கள் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மிகப் பெரும்பான்மையான ஜனநாயக முறை என்று சொல்லக்கூடிய, மிகச் சிறந்த ஜனநாயக முறையிலே பல இலட்சோப இலட்சம் மக்களால் வாக்களிக்கப்பட்டு, பல அரசியல் கட்சிகளால், அக்கட்சிகளினுடைய கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆட்சி புரிந்து வரும் நிலைமை 25 ஆண்டு காலம் மிகச் சிறப்பாகவே நடைபெற்று வருகிறது. இப்பேர்ப்பட்ட நிலையில் தேவையற்ற அல்லது மன்னர் ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்டதைப்போன்ற ‘சமிதி சபா’ என்ற ஒரு சபையை தனக்காக, தனது தேவைக்காக, தனக்கு வேண்டியவர்களுக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய



2011 ஜூன் 7] [திரு. ப. டில்லி பாபு]

அம்சத்தை, இப்பேர்ப்பட்ட மேலவையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதுமே அமல்படுத்தக்கூடாது என்று வலுவாக, ஆழமாக நாங்கள் எங்கள் கட்சியின் தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறோம். நடைபெறுகின்ற ஆட்சி, நிருவாகம், திட்டங்கள் இவை அத்தனையையும் முழுமையான வடிவில் கொண்டு வருகின்ற பலவகைப்பட்ட சட்டத் திருத்தங்கள் உட்பட, அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு, மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இத்தகைய சட்டமன்ற ஜனநாயக முறையே மிகச் சிறந்தது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது. அந்த வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை, சட்டமன்ற மேலவையைத் திரும்பப் பெறுகின்ற இத்தீர்மானத்தை, மீண்டும் ஒரு முறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வரவேற்று, ஆதரிப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன். தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற வாய்ப்பைப் பெற்றதைப் பெருமையாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாக, இந்திய குடியரசுக் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர், அருமை நண்பர், முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, முதன்முதலாக இந்த மேலவை நீக்கப்பட வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முடிவு எடுத்தபொழுது அவரோடு இருந்து டில்லி வரை சென்று அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்து அவர்களிடமும் பேசி, அதற்குப் பிறகு மேலவையை அன்று ஒழித்த பெருமையிலே எனக்கு ஒரு சிறப்புப் பங்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பத் திரும்ப இந்த மேலவை மறுபடியும் வந்துகொண்டே இருக்கிறது. இதை உறுதியாகத் தீர்த்துக்கட்ட வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்று உயிரோடு இருந்தால் என்ன செய்திருப்பாரோ அதையே நம்முடைய மாண்புமிகு முதல்வர்

[திரு. ச. இராமச்சந்திரன்] [2011 ஜூன் 7

புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) செய்வதைக் காணுகிறபொழுது, அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று இதயமார நன்றி தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலவை திரும்ப வராமல் இருக்கவேண்டுமானால், மேலவை திரும்ப வரவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் வராமல் இருப்பதிலேதான் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அது நம் கையிலேதான் இருக்கிறது, அதற்கு சட்டம் தேவை இல்லை. நாட்டு மக்கள் நம்மோடு இருக்கின்றார்கள். அவர்களுடைய நல்லுணர்வோடு நல்லாட்சியைத் தந்து கொண்டேயிருக்கின்ற நாம், நிச்சயமாக மீண்டும் மேலவை வேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கு வாய்ப்பே இனி வருங்காலத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலவை என்று சொல்கிறபொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அறிஞர் அண்ணாவை அடிக்கடி இழுக்கிறார்கள். ஆனால், அன்று நடந்தது என்னவென்றால், 1967 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா நாடாளுமன்றத்திற்கு நின்று வெற்றி பெற்றார். அப்பொழுது ஆட்சிக்கு வருவோம் என்கிற எண்ணம் இல்லை. ஆட்சிக்கு வந்தவுடன், யாராவது சட்டமன்ற உறுப்பினரை விலகச் செய்து அந்த இடத்திலே அறிஞர் அண்ணா அவர்களை நிறுத்தி வெற்றி பெற வைக்கலாம் என்று அப்பொழுதும் சொல்லப்பட்டது. அது தேவையற்றது என்று அந்த நேரத்திலே கருதியதனால் அப்போது இருந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின்மூலம் அவரை M.L.C. ஆக்கி, முதலமைச்சராக ஆக்கினோமே தவிர, அவர் ஏதோ மேலவைக்கு வக்காலத்து வாங்குவதைப்போல ஒரு சாரார் இன்னும் பேசிக்கொண்டிருப்பது அறிஞர் அண்ணா அவர்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும். ஏனென்றால், அவர் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பெற்று பதவிக்கும், பொறுப்புக்கும் வந்தவரே தவிர, மக்களைக் கண்டு ஓடி ஒளிந்தவர் அல்ல. சட்டமன்றம் என்கிறபொழுது அனைத்துத் தரப்பு மக்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகிற மன்றம். அப்படி இருக்கிறபொழுது தனித் தனிப் பிரிவுகளால் தேர்ந்தெடுக்கப்பெறுகின்ற சட்டமன்ற மேலவை எதற்கு என்பதுதான் ஜனநாயகத்தின் கேள்வி. ஆசிரியர்களுக்கோ, பட்டதாரிகளுக்கோ, உடமையாளர்களுக்கோ என்று தனித் தனி பிரிவாகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.



2011 ஜூன் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

*முற்பகல் 11-20*

மேலவை எங்கு தேவைப்படுகிறது என்றால் பல தேசிய இனங்களைக் கொண்ட கூட்டாட்சி அமைப்பிலே மேலவை தேவைப்படுகிறது. ஒருமைச் சமுதாயத்திற்குத் தேவையில்லை, பன்மைச் சமுதாயத்தில் தேவை. பல மாநிலங்கள் சேர்ந்து, பல தேசிய இனங்கள் சேர்ந்து கூட்டாட்சி அமைப்பு இருக்குமேயானால் இப்பொழுது இந்தியாவை எடுத்துக்கொண்டால், இந்தியாவிலே Council of States - Rajya Sabha தேவை. ஆனால், ஒரே மொழி பேசுகிற, ஒரே நிலப்பகுதியிலே வாழ்கின்ற மக்களாகிய நாம் அனைவரும் நம்முடைய பிரதிநிதிகளாக இங்கே சட்டமன்றத்திலே உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது, மேலவை என்கின்ற ஒன்று தேவையில்லை. ஒருவேளை மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலபேர் சொன்னதைப்போல, எங்கே மக்களால் நிராகரிக்கப்பட்ட பிறகு நாம் மறக்கப்பட்டு விடுவோமோ என்கின்ற காரணத்தினால், பிள்ளைகளால் கைவிடப்பெற்ற பெற்றோர்களுக்கு, முதியோர் இல்லம் தேவை என்று கருதுகிற இக்காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கும் ஒரு முதியோர் இல்லம் தேவை என்று கருதியோ என்னவோ சட்டமன்ற மேலவை வேண்டும் என்ற ஒரு நிலையைக் கொண்டு வந்தார்கள். நம்மைப் பொறுத்தவரையிலே அத்தகைய முதியோர்களுக்கு, இத்தகைய இல்லம் தேவையில்லை. நிச்சயமாக மக்களுடைய வரிப் பணத்திலே அது தேவையில்லை.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்புகிறபொழுது, டெல்லியிலே இருக்கின்ற மத்திய அரசும் அதற்குச் செவிகூர்ந்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து, இந்த மேலவை இங்கே வராமல் இருப்பதற்கான நடவடிக்கையை நாடாளுமன்றத்திலேயும் அவர்கள் நிறைவேற்றித் தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி செல்கிறபொழுது அதற்கான ஏற்பாடுகளை நிச்சயம் செய்வார் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2011 ஜூன் 7

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தவரும், முன்னாள் முதலமைச்சருமான இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது அரசால் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக சட்டமன்ற மேலவையை நீக்கும் தீர்மானம் 1986 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. பின்னர், இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இத்தீர்மானம் ஏற்கப்பட்டு, தமிழ்நாடு சட்மன்ற மேலவையை நீக்கும் சட்டம் 30-8-1986 அன்று அங்கீகரிக்கப்பட்டு, 1-11-1986 முதல் அமல்படுத்தப்பட்டது.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்திற்கு எதிராக, 1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு சட்டமன்ற மேலவையை மீண்டும் தோற்றுவிப்பதற்கான தீர்மானத்தினை 20-2-1989 அன்று இந்த அவையில் நிறைவேற்றியது.

1991 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிக்கு வந்தவுடன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஏற்கெனவே நீக்கம் செய்யப்பட்ட சட்டமன்ற மேலவையை மீண்டும் தோற்றுவிக்க வேண்டாம் என முடிவெடுத்து அதற்கான தீர்மானத்தினை 4-10-1991 அன்று இதே சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றியது. 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தி.மு.க. அரசு, சட்டமன்ற மேலவையை உருவாக்க வேண்டும் என்ற அளவில் மீண்டும் ஒரு தீர்மானத்தினை 26-7-1996 அன்று நிறைவேற்றியது. மீண்டும் 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, சட்டமன்ற மேலவை தேவையில்லை என்ற அளவில் ஒரு தீர்மானத்தை 12-9-2001 அன்று இயற்றியது.

இதனையடுத்து, 2006 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற மைனாரிட்டி தி.மு.க. அரசு, 4 ஆண்டுக் காலம் கழித்து, 12-4-2010 அன்று சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், மத்தியில் தனக்கு உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, இதற்கான சட்டத்தினையும் இயற்றியது. இருப்பினும் சட்டமன்ற மேலவைக்கான தொகுதி வரையறைகள் இந்திய அரசமைப்புச்



2011 ஜூன் 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

சட்டத்திற்கு முரணாக உள்ளது என்று தெரிவித்து தொடுக்கப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் தடையாணை பிறப்பித்துள்ளதால் சட்டமன்ற மேலவைக்கான தேர்தல்கள் நடைபெறாத சூழ்நிலை தற்போது உள்ளது.

முற்பகல் 11-25

சட்டமன்ற மேலவை தேவை என்று 2010 ஆம் ஆண்டு தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, அரசியல் அறிஞர்கள், சான்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், அலுவலர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், இத்தகைய அமைப்புகளைச் சார்ந்தவர்களின் பிரதிநிதிகள் இடம் பெற்று, அரிய ஆலோசனைகளைக் கூறத்தக்க வகையில் சட்டமன்ற மேலவையை விரைவில் கொண்டு வருவோம் என்ற அளவில் பேசியிருக்கிறார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலேயே வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள், மருத்துவர்கள் இருக்கிறார்கள், பொறியாளர்கள் இருக்கிறார்கள், பேராசிரியர்கள் இருக்கிறார்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதிகளாக இருந்தவர்களும் இருக்கிறார்கள், கல்வியாளர்கள் இருக்கிறார்கள், சமூக எண்ணம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். சாமானியர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக ஆக்குகின்ற ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி இருக்கும்போது, சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் திரு. மு. கருணாநிதி. அவருடைய மகன் திரு. மு.க. ஸ்டாலினுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டுவிட்டது. மற்றொரு மகன் திரு. மு.க. அழகிரி மற்றும் பேரன் திரு. தயாநிதி மாறன் ஆகியோருக்கு மத்திய அமைச்சர் பதவிகள் அளிக்கப்பட்டுவிட்டன. மகள் திருமதி கனிமொழிக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி கொடுக்கப்பட்டுவிட்டது. குடும்பத்தில் எஞ்சியிருப்பவர்களுக்கும்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 7

தன் துதி பாடுகிறவர்களுக்கும் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டமன்ற மேலவை அமைப்பதற்கான தீர்மானத்தை தி.மு.க. கொண்டு வந்ததே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) பலதரப்பட்டவர்களின் கருத்துகளை, சான்றோர்களின் கருத்துகளைப் பெறுவதற்காக அல்ல என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2010 ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை அமைப்பது குறித்து நடைபெற்ற விவாதத்தில் பேசிய திரு. கே.ஏ. செங்கோட்டையன் "... இறுதிக் காலத்தில், கடைசி நேரத்தில், ஓராண்டிற்கு முன்னாலே இதைக் கொண்டு வரவேண்டியதன் அவசியம் வேறு என்ன?" என்று கேட்டதற்கு பதில் அளித்த அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதி, "இது யாருக்குக் கடைசி காலம் என்பது இந்த நாட்டு மக்கள், வாக்காளப் பெருமக்கள் தீர்மானிக்க வேண்டிய ஒன்று" என்ற அளவிலே கூறியிருக்கிறார். இன்று தீர்ப்பும் வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்ப்பின்மூலம் சட்டமன்ற மேலவை தேவையில்லை என்பதை மக்களும் ஆமோதித்து இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்தியாவிலே இருக்கின்ற 28 மாநிலங்களில், கர்நாடகா, மஹாராஷ்டிரா, பீகார், உத்திரப்பிரதேஷ், ஆந்திரப்பிரதேஷ் மற்றும் ஜம்மு-காஷ்மீர் மாநிலங்களில் மட்டும்தான் சட்டமன்ற மேலவை மற்றும் சட்டமன்றப் பேரவை ஆகிய இரு அமைப்புகளும் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற பெரும்பாலான மாநிலங்களில் சட்டமன்ற மேலவை இல்லை. இதிலிருந்தே மேலவை வேண்டும் என்ற கருத்து எவ்வளவு வலுவிழந்து காணப்படுகிறது என்பதை எளிதில் எவரும் தெரிந்துகொள்ளலாம்.

அந்நியர் நம்மை ஆண்டபோது, 1919 ஆம் ஆண்டு மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு அரசியல் சீர்திருத்தக் குழு கொடுத்த அறிக்கை ஒன்றினால் உருவானவைதான் சட்டமன்ற மேலவைகள். ஆங்கிலேயருக்கு நாம் அடிமைப்பட்டிருந்த காலத்தில், ஜனநாயக ரீதியாக அமையும் சட்டமன்றப் பேரவைகளுக்குப் போட்டியான அமைப்புகளாக உருவாக்கப்பட்டவைதான் சட்டமன்ற மேலவைகள் என நற்சிந்தனையாளர்கள் பலரும் கருதி வந்தனர்.



2011 ஜூன் 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

1932 ஆம் ஆண்டு இது பற்றிய விவாதம் இதே மன்றத்தில் நடைபெற்றபோது, "It is resolved that in the conditions of this province, the constitution of Second Chamber is unnecessary and undesirable" என்ற அளவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முற்பகல் 11-30

முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள் அனைவரும் ஜனநாயக அமைப்பில் இரண்டாம் அவை எனக் கருதப்படும் மேலவை தேவையற்றது என்பதையே மிகத் திட்டவட்டமாகக் கூறி வந்துள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முதுபெரும் தலைவர்களில் ஒருவரான மறைந்த திரு. கல்யாணசுந்தரம் அவர்கள், "சிக்கனம் தேவையென்று சொன்னால், மிகச் சரியான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமானால், தேவையற்ற மேலவையைக் கலைத்துவிடலாம் என்பது என் அபிப்பிராயம்" என்று தெரிவித்திருக்கிறார்கள்.

சட்ட மேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள், "மேலவை எனப்படும் இந்த இரண்டாம் அவை எப்போதும் நிலைத்திருக்க வேண்டிய ஒன்று அல்ல; தற்காலிகமான ஏற்பாடுதான். இதனை என்றைக்கு வேண்டுமானாலும் ஒதுக்கிக் கொள்ளலாம், நீக்கி விடலாம், கலைத்து விடலாம்" என தெளிவுபடக் கூறியுள்ளார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நிறைவேற்றிட சபதமேற்று, அதற்கான பொறுப்பினை ஏற்றுள்ள நாங்கள், அவருடைய கொள்கைகளின்படியும், சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் மேலான கருத்துகளின்படியும், அனைத்து முற்போக்குச் சிந்தனையுள்ளம் கொண்டவர்கள் கூறியுள்ள ஆலோசனைகளின்படியும், தமிழகத்திற்கு மேலவை தேவையில்லை என முடிவெடுத்து இத்தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்களின் முன்னர் வைத்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் "திரும்பத் திரும்ப அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு வரும்போது இந்த மேலவை வராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 7

திரும்பத் திரும்ப தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது மேலவையைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கிறார்கள். இனிமேல் எந்தக் காலத்திலும் மீண்டும் ஆட்சிக்கு வருபவர்கள் மேலவையைக் கொண்டுவருவதற்கு வழியில்லாமல் செய்திட ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்" என்று இங்கே கேட்டுக்கொண்டார்.

எனக்குத் தெரிந்தவரை மேலவை வேண்டுமென்று நினைக்கின்ற ஒரே கட்சி தி.மு.க. தான். ஆகவே, மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்து மேலவையைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பேயில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "அஸ்தமனம் ஆகிய சூரியன் அஸ்தமனம் ஆகியதுதான்". இந்தச் சூரியன் திரும்பவும் உதயமாகாது என்பதைத் தெரிவித்து, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை தேவையென எடுக்கப்பட்ட முடிவினை நீக்கிக் கொள்வது என்ற தீர்மானத்தினை நிறைவேற்றித் தருமாறு இந்த மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. தீர்மானம் அவையின் முடிவிற்கு வைக்கப்பெற வேண்டும். அரசமைப்பு சட்டப் பிரிவு 169 (1)-ன்படி இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்பதை அறிய வாக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். பேரவையின் முடிவை அறிய எண்ணிக் கணிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும். எனவே, பேரவைச் செயலாளர் அவர்கள் அழைப்பு மணியை, அதாவது Quorum Bell-ஐ அடிப்பார்கள். உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கையிலே அமர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(அழைப்பு மணி இரண்டு மணித்துளிகள் ஒலிக்கப்பெற்றது.)

பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி உத்தரவிடுகிறேன்.

(பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த கீழ்க்கண்ட தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விடுகிறேன்:



2011 ஜூன் 7] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11-35

## பேரவை முன்னுள்ள கேள்வி

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவு இச்சட்டப் பேரவையால் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும், இந்த முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்கும்வகையில் நாடாளுமன்றம் தேவையெனக் கருதும் அளவிற்கு, இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களிலும் திருத்தம் கொண்டுவருவதற்கு உரிய அவசியமான விதிக்கூறுகளை உள்ளடக்கிய தேவையான சட்டத்தினை இயற்ற வேண்டும் என்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது".

நம்முடைய பேரவை 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். ஒவ்வொரு பிரிவாக நான் அறிவித்த பிறகு பேரவைச் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களின் பெயர்களைப் படிப்பார்கள்.

## பகுதி–1

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா
2. மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்
3. மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி
4. மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா
5. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்
6. மாண்புமிகு திரு. ப. தனபால்
7. மாண்புமிகு திரு. ப. மோகன்
8. திரு. எம்கே. அசோக்
9. திரு. எஸ். அப்துல் ரஹீம்
10. திரு. ஆ.க. அரங்கநாதன்
11. திரு. மு.சு.மு. ஆனந்தன்

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 7

12. திரு. கே.பி. அன்பழகன்

13. திரு. வி.சி. ஆறுக்குட்டி

14. திருமதி எஸ். கணிதா சம்பத்

15. திருமதி த. இந்திராகாந்தி

16. திருமதி மனோரஞ்சிதம்

17. திருமதி க. அழகுவேலு

18. திரு. இரா. இராஜேந்திரன்

19. திரு. வி.எஸ். இராஜி

20. திரு. கடம்பூர் ராஜு

21. திரு. ப. கணேசன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

**பகுதி – 2**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

22. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்

23. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்

24. மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்

25. மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி

26. மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு

27. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்

28. மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி

29. மாண்புமிகு திரு. பி. தங்கமணி

30. மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்



2011 ஜூன் 7] [பேரவைத் தலைவர்]

31. மாண்புமிகு திரு. பி.வி. ரமணா

32. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்

33. மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்

34. மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா

35. மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்

36. திரு. கே.பி. கந்தன்

37. திரு. ஏ.ஏ. கருப்பசாமி

38. திரு. பழ. கருப்பையா

39. திரு. மு.வீ. கருப்பையா

40. திரு. வி.பி. கலைராஜன்

41. திரு. இரா. காமராஜ்

42. திரு. செ. காமராஜ்

43. திரு. என்.வி. காமராஜ்

44. திரு. ஆர்.என். கிட்டுசாமி

45. திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி

46. திரு. கு.ப. கிருஷ்ணன்

47. திரு. சி. கிருஷ்ணன்

48. திரு. வே. குணசீலன்

49. திரு. ம. குணசேகரன்

50. திரு. கே. குப்பன்

51. திரு. இரா. குமரகுரு

52. திருமதி ம. சக்தி

53. திரு. க. கோபால்சாமி

54. திரு. ஆர். சந்திரசேகர்

[பேரவைத் தலைவர்] [2011 ஜுன் 7

55. திரு. கோவி. சம்பத்குமார்

56. திரு. ஆர். சாமி

57. திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்

58. திரு. ஆர். சின்னசாமி

59. திரு. ஓ.கே. சின்னராஜ்

60. திரு. ஆர். சீனிவாசன்

61. டாக்டர் ச. சுந்தரராஜ்

62. திரு. ந. சுப்பிரமணியன்

63. திரு. பூ. செந்தூர்பாண்டியன்

64. திரு. எஸ்.கே. செல்வம்

65. திரு. எம்.கே. செல்வராஜு

66. திரு. வி. சோமசுந்தரம்

67. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

முற்பகல் 11-40

**பகுதி – 3**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

68. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி

69. மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்

70. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்

71. மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு

72. மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்



2011 ஜுன் 7] [பேரவைத் தலைவர்]

73. மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி

74. மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்

75. மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி

76. மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்

77. மாண்புமிகு திரு. இ. சுப்பையா

78. மாண்புமிகு திரு. புத்திசந்திரன்

79. மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்

80. மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்

81. மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி

82. திரு. கா. தமிழரசன்

83. திரு. இரா. தமிழ்ச்செல்வன்

84. திரு. ப. தன்சிங்

85. திரு. செ. தாமோதரன்

86. திரு. இரா. துரைக்கண்ணு

87. திரு. ரா. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை

88. டாக்டர் ச. துரையப்பா

89. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

90. திரு. நயினார் நாகேந்திரன்

91. திரு. கே.பி. நாகராஜன்

92. திரு. அ. நாஞ்சில் முருகேசன்

93. திரு. பி.ஜி. நாராயணன்

94. திரு. வ. நீலகண்டன்

95. திரு. கே.பி. பரமசிவம்

96. திரு. சு. பவுன்ராஜ்

97. திரு. ச. பழனிச்சாமி

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 7

98. திரு. சோழன் சித. பழனிச்சாமி

99. திரு. அ. பாப்பா சுந்தரம்

100. திரு. கே.பி.பி. பாஸ்கர்

101. திரு. ஜே.சி.டி. பிரபாகர்

102. திரு. தோ.பெ. பூனாட்சி

103. திரு. இரா. பெருமாள்

104. திரு. செ. பெருமாள்

105. திரு. என்.எஸ்.என். நடராஜ்

106. திரு. கே. பொன்னுசாமி

107. திரு. ஏ.கே. போஸ்

108. திரு. இரா. மணிமாறன்

109. திரு. துரை. மணிவேல்

110. திரு. தா. மலரவன்

111. திரு. க. மனோகரன்

112. திரு. ஆர். மனோகரன்

113. திரு. சு. மாதேஸ்வரன்

114. திரு. கு.வ. மார்க்கண்டேயன்

115. திரு. அ. முஹம்மத் ஜான்

116. திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி

117. திரு. ம. முத்துராமலிங்கம்

118. திரு. மு. முருகன்

119. திரு. என். முருகுமாறன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -



2011 ஜூன் 7] [பேரவைத் தலைவர்]

**பகுதி – 4**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

120. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

121. டாக்டர் க. கிருஷ்ணசாமி

122. திரு. ரா. சரத்குமார்

123. திரு. பி.வி. கதிரவன்

124. திரு. உ. தனியரசு

125. முனைவர் செ.கு. தமிழரசன்

126. திரு. அ. அஸ்லம் பாஷா

127. திரு. ஆ. ராமசாமி

128. திரு. ஆ. நாராயணன்

129. திரு. வி. மூர்த்தி

130. திரு. எஸ்.எஸ். ரமணீதரன்

131. திரு. கா.கோ. ரமேஷ்

132. திரு. சு. ரவி

133. திரு. மு. ரெத்தினசாமி

134. திரு. மு. ராஜநாயகம்

135. திரு. பொன். ராஜா

136. திரு. பி.ஜி. இராஜேந்திரன்

137. திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி

138. திருமதி ஆர். ராஜலெட்சுமி

139. திருமதி பா. வளர்மதி

140. திருமதி எல். ஜெயசுதா

[பேரவைத் தலைவர்] [2011 ஜுன் 7

141. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

142. திரு. எம். ரெங்கசாமி

143. டாக்டர் சி. விஜயபாஸ்கர்

144. திரு. கே.சி. வீரமணி

145. திரு. என்.டி. வெங்கடாச்சலம்

146. திரு. கோ. வெங்கடாஜலம்

147. திரு. பு. வெற்றிவேல்

148. திரு. கே.எஸ்.என். வேணுகோபாலு

149. திரு. எஸ். வேதாச்சலம்

150. திரு. ப. முத்துக்குமரன்

151. டாக்டர் வைகைச்செல்வன்

152. திரு. பி.கே. வைரமுத்து

153. திரு. ஐ. ஜானகிராமன்

154. டாக்டர் த. ஹரிதாஸ்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்

2. திரு. ம. கலை அரசு

3. திரு. அ. கணேஷ்குமார்

*முற்பகல் 11-45*

## பகுதி – 5

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

155. திரு. அ. சவுந்தரராசன்

156. செல்வி கே. பாலபாரதி



2011 ஜுன் 7] [பேரவைத் தலைவர்]

157. திரு. எம். ஆறுமுகம்

158. திரு. சு. குணசேகரன்

159. திரு. க. பாலகிருஷ்ணன்

160. திரு. இரா. அண்ணாதுரை

161. திரு. கே. உலகநாதன்

162. திரு. கு. லிங்கமுத்து

163. திரு. அ. பாஸ்கர்

164. திரு. பி.ஆர். மனோகர்

165. திரு. ப. டில்லி பாபு

166. திரு. கே. தங்கவேல்

167. திரு. டி. இராமச்சந்திரன்

168. திரு. வி. முத்துக்குமார்

169. திரு. து. முருகேசன்

170. திரு. க. பீம்ராவ்

171. திரு. பெ. மகாலிங்கம்

172. திரு. பி.எல். சுந்தரம்

173. திரு. சி. மைக்கேல் ராயப்பன்

174. திரு. ஏ.கே.டி. ராஜா

175. திரு. எல். வெங்கடேசன்

176. திரு. ஆர். ராமமூர்த்தி

177. திரு. ந. நஞ்சப்பன்

178. திரு. ஏ. லாசர்

179. திரு. வெ. பொன்னுப்பாண்டி

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 7

**பகுதி – 6**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

180. திரு. ச. இராமச்சந்திரன்

181. திரு. மு. அருண் சுப்பிரமணியன்

182. திரு. செ. அருண்பாண்டியன்

183. திரு. ஆர். அருள்செல்வன்

184. திரு. வி.சி. சந்திரகுமார்

185. திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்

186. திரு. ப. சம்பத்குமார்

187. திரு. ஆர். சுந்தர்ராஜன்

188. திரு. ப. சிவக்கொழுந்து

189. திருமதி ஆர். சாந்தி

190. திருமதி ர. சுபா

191. திரு. டி. சுரேஷ்குமார்

192. திரு. எஸ். செந்தில்குமார்

193. திரு. சி.எச். சேகர்

194. திரு. க. தமிழழகன்

195. திரு. க. தினகரன்

196. திரு. கு. நல்லதம்பி

197. திரு. க. பாண்டியராஜன்

198. திரு. ர.ம. பாபுமுருகவேல்

199. திரு. ப. பார்த்தசாரதி

200. திரு. எஸ்.ஆர். பார்த்திபன்



2011 ஜூன் 7] [பேரவைத் தலைவர்]

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

பேரவையில் ஒட்டுமொத்தமாக நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

(வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன.)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப்பெற்றன:

| | | |
|---|---|---|
| ஆதரித்தோர் | - | 200 (மேசையைத் தட்டும் ஒலி) |
| எதிர்த்தோர் | - | 3 |
| நடுநிலை வகித்தோர் | - | எவருமில்லை |

அவையின் மொத்த உறுப்பினர்களில் பாதிக்கு மேல் இந்த அவையில் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு அதிகமானவர்கள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்ததால் தனித் தீர்மானம் அவையால் நிறைவேற்றப்பெற்றது என்று அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய பணிவான உரையினைத் தொடங்குகிறேன்.

கொங்கு மண்டலத்திலே கோவை மாவட்டத்தில் திப்பம்பட்டி என்னும் சாதாரண குக்கிராமத்தில், சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை மூன்று முறை பொள்ளாச்சி சட்டமன்ற வேட்பாளராக்கி, இரண்டு முறை வெற்றி பெற வைத்து, அமைச்சராக, கழகத்தின் மாவட்டச் செயலாளராக, கழகத்தின் தேர்தல் பிரிவுச் செயலாளராக, தொகுதி மறுசீரமைப்புக்குப் பின் கடையேழு வள்ளல்களில் ஒருவரும், தன்னை யாசிக்க வந்த தமிழ்ப் புலவருக்கு தன்னிடம் தருவதற்கு ஒன்றுமில்லாத நிலையில், தன் தலையைக் கொண்டு சென்று தன் தம்பி, அமணனிடம் கொடுத்தால் ஆயிரம் பொற்காசுகள் கிடைக்கும் என்றும், அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தன் தலையையே கொடுக்க வந்த வள்ளல் குமணன் ஆண்ட மண்ணும், திராவிட இயக்கத்தின் முதல் கவிஞர் என்று பேரறிஞர் அண்ணாவால் போற்றப்பெற்றவரும், திராவிட இயக்கத்தின் சீர்திருத்தப் பாடல்களால் பாமர மக்களைத் தட்டியெழுப்பிய புரட்சிக் கவிஞர் என போற்றப்பட்ட உடுமலை நாராயண கவிராயர் பிறந்த புண்ணிய பூமியில் திருமூர்த்தி மலை மண் என்று அழைக்கப்படுகிற உடுமலைப்பேட்டை தொகுதியின் வேட்பாளராக என்னை அறிவித்து, 44,560 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை மீண்டும் ஒரு முறை தொட்டு வணங்கி நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் எளிய தொண்டனான என்னை உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவோடு காணிக்கையாக்குகிறேன்.

தமிழ்நாட்டின் 14-வது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து, முன்மொழிந்து பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன் பெரியாரை 'தந்தை பெரியார்' என்பார்கள். காஞ்சி தந்த கருவூலம், பெருந்தகை அண்ணா அவர்களை குடும்பத்தின் மூத்த சகோதரராக 'அண்ணா' என்று அன்போடு அழைப்பார்கள். அவர் வழிவந்த மனிதப் புனிதர், மாணிக்கத் தலைவர் பொன்மனச் செம்மல், பூவுக்கும் புன்னகையைக் கற்றுக் கொடுத்து, புன்னகையால் புவி ஆண்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை அனைவரும் 'அண்ணன்' என்று அழைப்போம்.



ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்தபின் வாராது வந்த மாமணி போல, ஏழரை கோடி தமிழ்ச் சமுதாயத்தின் இதய சிம்மாசனத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் நமது ஒப்பாரும், மிக்காரும் இல்லாத உத்தமத் தலைவி, மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் தங்களை உலகம் முழுவதும் வாழும் தமிழினம் தங்கள் சொந்தத் தாயாக எண்ணி அம்மா, அம்மா, அம்மா என்று அன்போடு அழைக்கின்றோம்.

எல்லா ஜீவராசிகளும் ஒரு தாயின் வயிற்றிலிருந்துதான் பிறக்கின்றன. தாயின் அன்புதான் மகத்தானது, விலைமதிப்பற்றது. தாயிற்சிறந்த கோயிலும் இல்லை. எனவேதான், அந்த அன்பை நாடித்தான் அனைத்து இளைஞர்களும், இளம் பெண்களும், ஒட்டுமொத்தமாகத் தங்களை அம்மா என்று அழைக்கின்றார்கள்.

முந்தைய ஆட்சியில் முன்னாள் முதலமைச்சரின் குடும்ப வாரிசுகள் என்று கூறி நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஆட்சியிலும், அதிகாரத்திலும் பங்கேற்று, தமிழகத்தை சீர்குலைத்து சின்னாபின்னப்படுத்தினார்கள்.

14-வது சட்டமன்றத் தேர்தல் முடிவு என்பது தமிழகத்தில் யாருடைய ஆட்சி வரக்கூடாது என்பதற்காக அளிக்கப்பட்ட தீர்ப்பு அல்ல, தமிழகத்தில் அம்மாவின் ஆட்சிதான் வரவேண்டும் என்பதற்காக, ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை கொண்ட நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக வழங்கிய நல்ல தீர்ப்பு (Positive Mandate).

ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்கள் மக்கள். 2006-ல் தமிழக மக்கள் ஒரு தெளிவான தீர்ப்பை வழங்காததன் காரணமாக, அம்மாவின் ஆட்சி அமையாமல் போனது. ஒரு மைனாரிட்டி சர்க்கார் அமைந்தது. குடும்ப ஆதிக்கம், அதிகார துஷ்பிரயோகம், அத்துமீறல்கள், அன்றைய அமைச்சர்களின்மீதே நீதிமன்றத்தில் வழக்குகள், கந்து வட்டி, கட்டப் பஞ்சாயத்து, கஞ்சா, கள்ளச் சாராயம், கொலை, கொள்ளை, மணல் திருட்டு, கற்பழிப்பு என

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

தமிழகம் முழுதும் சந்தி சிரித்துக் கொண்டிருந்தது சட்டம்-ஒழுங்குச் சீர்கேடு.

கடந்த ஆட்சிக்காலத்தில் இதே சட்டமன்றத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 60 சட்டமன்ற உறுப்பினர்களை பலவந்தமாக அவையிலிருந்து வெளியேற்றிவிட்டு, எதேச்சையாக சட்டமன்றத்தை நடத்தத் துணிந்தபோது, தனி ஒரு பெண்ணாக, பெண் சிங்கமாக சட்டமன்றத்தில் நுழைந்து அன்றைய ஆட்சியாளர்கள்மீது கேள்விக் கணைகளைத் தொடுத்து, வீர முழக்கமிட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வீரத்தை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலே சட்டத்தைப் பாதுகாப்பவர்களுக்கும், சட்டத்தை வழிநடத்துபவர்களுக்கும் இடையே இந்திய வரலாற்றில் எந்த மாநிலத்திலும் முன் எப்போதும் நடைபெறாத அளவில் போர்க்களத்தைவிட மிக மோசமான அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றுள்ள நிலைமை; சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் - காவல் துறையின் கண்ணெதிரிலேயே மாணவர்கள் அடி தடி சம்பவங்கள் அரங்கேற்றியது அனைத்து தொலைக்காட்சிகளிலும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது; உயர் நீதிமன்ற வளாகத்திலே இருக்கின்ற காவல் நிலையமே தீ வைத்துக் கொளுத்தப்பட்ட கொடுமை; நீதி அரசரின் மண்டை நீதிமன்ற வளாகத்திலேயே உடைக்கப்பட்டு ஒரு மாத காலம் உயர் நீதிமன்றமே செயல்பட முடியாமல் பூட்டிக் கிடந்த கொடுமை; ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்கும் அராஜகங்கள் கடந்த கால ஆட்சியில் நடைபெற்றன.

மதுரையிலே தா. கிருட்டிணன் கொலை வழக்கின் முதல் குற்றவாளி அழகிரி, பிறழ் சாட்சிகள்மூலம் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பியுள்ளார். இந்த வழக்கில் மேல்முறையீடு செய்து குற்றவாளிகள் தண்டனை பெற தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இந்த அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

“குடும்பத்தில் யாருக்கு அதிக செல்வாக்கு?” என்று ‘தினகரன்’ நாளிதழ் கருத்துக் கணிப்பு வெளியிட்டது. அதன் தொடர்ச்சியாக



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

மதுரையில் ‘தினகரன்’ பத்திரிகை அலுவலகம் பட்டப்பகலில் மதுரை மேயர், துணை மேயர் மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. அதில் இரண்டு இளம் பொறியாளர்கள், ஒரு காவலர் உட்பட மூன்று அப்பாவி உயிர்கள் பலியாகின. அந்தக் கொடிய காட்சி அன்றையதினம் “சன் டிவி” மூலம் உலகம் முழுவதும் ஒளிபரப்பானது. புகார் கொடுத்த காவல் துறை அதிகாரியே, பிறழ் சாட்சியாக மாறியதன் காரணமாக, சட்டத்தின் பிடியிலிருந்து குற்றவாளிகள் தப்பி விட்டனர். இந்த வழக்கில் உரிய முறையில் மேல்முறையீடு செய்து குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டுமென்று பணிவோடு இந்த அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

“பனையூர் இரட்டைக் கொலை வழக்கில் துப்பாக்கியால் சுட்ட கொலைகாரன், காவல் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்டான்” என்று சொல்வதும், துப்பாக்கிக் குண்டால் காயம்பட்ட பெண்மணி தன் உயிரையே காப்பாற்றிக்கொள்ள குற்றுயிரும், குலையுயிருமாக விமானம் பிடித்து வெளிநாடு சென்றது ஏன்? சொந்த நாட்டில் வாழ முடியாமல், வாழச் சென்ற நாட்டிற்காவது சென்று உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று ஓடியது எதனால்? இதன் மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்பட வேண்டும்.

திருநெல்வேலியில் அன்றைய அமைச்சர்களின் கண்ணெதிரிலேயே சட்டம்-ஒழுங்கைக் கட்டிக் காக்கும் காவல் துறை ஆய்வாளர் வெற்றிவேல் என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார். உடுமலைப்பேட்டையிலே ஒரு D.S.P.-ஐ அவரது அலுவலகத்திலேயே, அன்றைய ஆளுங்கட்சியைச் சார்ந்த ஒரு நகர மன்றத் தலைவர் அடித்து, மூக்கை உடைத்து, அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சாலை மறியல், கடையடைப்பு, கண்டன ஊர்வலம், சட்டமன்றத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் வெளிநடப்பு என்று மக்கள் மன்றமே கொதித்தெழுந்தும், அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத கொடுமை. இவ்வாறான கொடிய சம்பவங்களைக் கண்ட மக்கள் கொதித்தெழுந்து, தாயின் அரவணைப்புதான் தங்களுக்குப் பாதுகாப்பு என்று மாண்புமிகு அம்மா அவர்களே வரவேண்டுமென்பதற்காக வழங்கப்பட்ட தெளிவான தீர்ப்புதான், 14-வது சட்டமன்றத் தேர்தலிலே வழங்கப்பட்ட தீர்ப்பு.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

இந்திய ஜனாதிபதிக்கும், சாலையோரத்தில் குடியிருக்கும் சாதாரண குப்பனுக்கும், சுப்பனுக்கும் வழங்கப்பட்டிருக்கும் வாக்குரிமை என்பது சரிசமமானது. Tirumangalam formula என்று சொல்லி, Money power, Muscle power, Media power - பண பலம், படை பலம், ஊடகங்களின் பலம் ஆகியவற்றால் ஜனநாயகத்தின் குரல் வளையை நசுக்கி, ஆட்சி அதிகாரத்தை ஆறாவது முறையாக அடைந்துவிடலாம் என்று மமதையாக எக்காளமிட்டவர்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, தமிழக மக்கள் மரண அடி கொடுத்திருக்கிறார்கள்.

"ஆடு நனைகிறதே!" என்று ஓநாய் அழுத கதையைப்போல, "2011-க்குப் பிறகு அண்ணா தி.மு.க. என்ற கட்சியே இருக்காது" என்று மதுரையிலேயிருந்து எள்ளி நகையாடி, எக்காளமிட்ட ஒருவர், "எம்.ஜி.ஆர். ஆரம்பித்த கட்சிக்கே இந்த நிலையா?" என்று நீலிக் கண்ணீர் வடித்த அந்த வீராதி வீரர், சூராதி சூரர் இன்றைக்கு எங்கே இருக்கிறார்?

ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுமுறையில் எடுத்து, சென்னை மாநகராட்சி, மதுரை மேற்கு, திருமங்கலம் ஆகிய இடைத் தேர்தல்களில் தேர்தல் பணியாற்றச் சென்ற கழகத் தொண்டர்கள்மீது ஏவி, பல்வேறு உண்மைக்கு மாறான வழக்குகளைத் தொடுத்தார்கள். அண்ணா தி.மு.க. தொண்டர்களுடைய முட்டிகள் உடைக்கப்பட்டன; மண்டை பிளக்கப்பட்டது; பயணம் செய்த வாகனங்கள் சுக்கு நூறாக்கப்பட்டன. வாக்காளர்கள் கையிலே ஒரு ஓட்டுக்கு ரூபாய் 3 ஆயிரம், 5 ஆயிரம் என்று திணிக்கப்பட்டு, அவர்களின் கட்சிக்கு ஓட்டளிக்க குண்டர்களை வைத்து மிரட்டப்பட்டார்கள். மதுரை மேற்கு தொகுதி இடைத்தேர்தலின்போது, தீபாவளிக்குக்கூட பட்டாசு வெடித்துப் பழக்கப்படாத என்மீது, மதுரை முன்னாள் மேயர் குழந்தைவேலுவின் வீட்டின்மீது வெடிகுண்டு போட்டதாகவும், அவருடைய காருக்குத் தீ வைத்ததாகவும் வழக்கு பதியப்பட்டு, அதில் என்னை முதல் குற்றவாளியாகச் சேர்த்தார்கள். இவ்வாறெல்லாம் செய்து இடைத்தேர்தலிலே மாய வெற்றி பெற்றுவிட்டு, இது "Tirumangalam formula" என்று எக்காளமிட்டார்கள்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே, அன்றைய அமைச்சருடைய தொகுதியில் 10 ஆயிரம் தாழ்த்தப்பட்ட வாக்காளர்களுக்கு T.V.S. 50 வழங்க டோக்கன் வழங்கப்பட்டதில், அதில் 8 நபர்கள் மட்டுமே T.V.S. 50 எடுத்துச் சென்றார்கள். மற்றவர்கள் டோக்கனை அந்த இடத்திலே கிழித்துப் போட்டு விட்டு, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிதான் வரவேண்டுமென்று வாக்களித்துள்ளார்கள்.



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

"நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் முறையாக பண விநியோகம் செய்திருப்பதாலும், எங்கள் இலவசத் திட்டங்கள் சென்றடையாத வீடுகளே இல்லை என்பதாலும், நாங்கள் உறுதியாக வெற்றி பெற்று விடுவோம்" என்று முந்தைய ஆட்சியாளர்கள் அகம்பாவத்துடனும், ஆணவத்துடனும் பேசினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யோசித்துப் பாருங்கள். இந்தத் தேர்தலிலே தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றிருந்தால், திருமங்கலம் தேர்தல் formula இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும், அந்தந்த ஆளுங்கட்சியினரால் அரங்கேற்றப்பட்டிருக்காதா? மக்களின் நியாயமான உணர்வுகள் தேர்தலில் பிரதிபலிக்காமல் போனால், வாக்குகள் விலைக்கு வாங்கும் அவலம் இந்தியா முழுவதும் அரங்கேறினால், அதன் தொடர் விளைவு என்னவாகி இருக்கும் என்று ஒரு கணம் யோசித்துப் பாருங்கள். அதன்பிறகு, இந்தியாவில் ஜனநாயகம் காஷ்மீரைப்போல, அஸ்ஸாமைப்போல சீர்குலைந்து இந்தியாவினுடைய இறையாண்மையே கேள்விக்குறியாகி இருக்கும்.

நண்பகல் 12-00

அதன்பிறகு இலட்சக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொள்ளையடித்து, அதில் சில ஆயிரம் கோடிகளை வாக்காளர்களுக்கு இனாமாகக் கொடுத்து, ஐந்தாண்டுக் காலம் ஆட்சி அதிகாரத்தை குத்தகைக்கு எடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கும். அவ்வாறு இல்லாமல் மாண்புமிகு அம்மா அவர்களையே தேர்ந்தெடுத்து தமிழகத்தில் நல்லாட்சி நிலவ வேண்டும் என ஜனநாயகத்தை நிலைநாட்டிய தமிழக வாக்காளப் பெருமக்களை இந்தியா மட்டுமல்லாது உலகமே பெருமையுடன் திரும்பிப் பார்க்கிறது.

முன்னாள் முதலமைச்சர் முதன்முதலில் சினிமாவில் கதை, வசனம் எழுதிய பராசக்தி என்ற திரைப்படத்தில் வரும் பாடலின் சில வரிகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே - காசுக்
காரியத்தில் கண்வையடா தாண்டவக்கோனே
உள்ளே பகைவையடா தாண்டவக்கோனே - காசுக்கு
உதட்டில் உறவாடடா தாண்டவக்கோனே,
முட்டா பயலையெல்லாம் தாண்டவக்கோனே - காசு
முதலியாளியாக்குதடா தாண்டவக்கோனே,
கட்டி அழும்போதும் தாண்டவக்கோனே - பிணத்தைக்
கட்டி அழும்போதும் தாண்டவக்கோனே - பணப்
பெட்டிமேலே கைவையடா தாண்டவக்கோனே,

இதை எழுதியவர் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள். அவருடைய முதல் படம் 'பராசக்தி'. அவர் முதன்முதலில் எழுதிய சினிமா பாடலையே பின்பற்றி கடந்த 60 ஆண்டுகாலம் அரசியலில் அதையே பின்பற்றி வந்தார். எனவேதான், நாட்டு மக்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே அவரது இயக்கத்தைப் படுதோல்வி அடையச் செய்தார்கள்.

ஆனால், அதையே 14-வது சட்டமன்றப் பேரவைத் தேர்தலின் முடிவு குறித்து அவர் கூறும்போது மக்கள் எனக்கு ஓய்வு கொடுத்துள்ளார்கள், நன்றி எனக் கூறியுள்ளார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அப்படியல்ல. அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது விருப்ப ஓய்வு அல்ல. கட்டாய ஓய்வு. அதனால்தான் எதிர்க்கட்சி வரிசையில்கூட அமர முடியாமல் அவரும், அவருடைய கட்சியும் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இது மக்கள் தீர்ப்பு. மகேசன் தீர்ப்பு.

இத்தேர்தல் முடிவு ஊழலுக்கு, குடும்ப ஆட்சிக்கு, நிர்வாகச் சீர்கேட்டிற்கு, அராஜகத்திற்கு, அநியாயத்திற்கு, அடுத்தவர்கள் சொத்தினை அபகரிப்பதற்கு, அக்கிரமத்திற்கு மக்கள் கொடுத்திருக்கிற மரண அடி.

தமிழ்நாட்டு மக்கள் மக்களாட்சியின் மகத்துவத்தை, மாண்பை, வலிமையை தேர்தல் முடிவுகள்மூலம் மீண்டும் இம்முறை நிரூபித்துள்ளார்கள். தங்களுக்கு நன்மை செய்த, மீண்டும் செய்யக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களையே ஆட்சி பீடத்தில் அமர்த்தியிருக்கிறார்கள். இந்த முடிவு மக்கள் ஒரு நாளில் எடுத்த முடிவு அல்ல.



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

விழுப்புரத்தில் தனி ஒரு பெண்மணியாக மாண்புமிகு அம்மா அவர்கள் கரும்பு விவசாயிகளின் அவல நிலையைப் போக்க 13-2-2010 இல் குரல் கொடுத்தார்கள்.

நெய்வேலியில் 18-4-2010 இல் வரலாறு காணாத மின்வெட்டைக் கண்டித்து போர்க் குரல் எழுப்பினார்கள்.

கோவையில் 13-7-2010 இல் விலைவாசி உயர்வு, நிர்வாகச் சீர்கேடு மற்றும் பொதுமக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காக கண்டன ஆர்ப்பாட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

"All roads lead to Rome" என்பார்கள். இத்தாலி நாட்டின் அனைத்து சாலைகளும், ரோமாபுரியை நோக்கிச் செல்லும் என்பது அதன் பொருள். அதேபோல மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், கொங்குச் சீமையிலே இந்தியாவின் சுதந்திரத்திற்காக செக்கிழுத்த சிதம்பரம் பிள்ளை பெயரால் அமைந்திருக்கும் கோவை வ.உ. சிதம்பரம் பிள்ளை மைதானத்தில் முழங்குகிறார் என்றவுடன் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அணி அணியாய், அலை, அலையாய் ஆர்ப்பரித்து, முக்கடலும் கூடியதுபோல, இலட்சக்கணக்கான பொதுமக்கள் சங்கமித்தார்கள். கோவை குலுங்கியது. அனைத்துப் பத்திரிகைகளும் அதைப் பாராட்டி எழுதின. முந்தைய ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டப் பொறி மக்கள் மனதிலே பெரு நெருப்பாக உருவெடுத்தது. கோவையில்தான் தமிழகத்தை மீட்கும் இரண்டாம் சுதந்திரப் போரை இதய தெய்வம் அம்மா அவர்கள் தொடங்கினார்கள். சேர மண்டலமான கோவையில் மக்கள் மனதிலே பற்றிய அந்நெருப்பு, சோழ மண்டலமான திருச்சி பொன்மலை இரயில்வே மைதானத்தில் 24-8-2010 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் வீர முழக்கத்தால் பெரும் நெருப்பாக கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. பாண்டி மண்டலத்திற்குள் அம்மா வர முடியாது என்று கொக்கரித்தார்கள். அவ்வாறு வந்தால் உயிரோடு திரும்பிப் போக முடியாது என நூற்றுக்கணக்கான மிரட்டல்கள் விட்டார்கள். போராட்டக் களத்திற்கு இடம் கொடுக்க முன்வந்தவர்கள்கூட மிரட்டப்பட்டார்கள். தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக தன் உயிரே போனாலும், பாண்டி மண்டலத்தின் தலைநகரமான மதுரைக்கு வந்தே தீருவேன் என்று 18-10-2010 அன்று வருகை தந்து புரட்சிக் குரல் கொடுத்து, மக்களைத் தட்டி எழுப்பினார்கள்.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

அறியாமை, தெளியாமை, புரியாமை, விளங்காமையில் சிக்கித் தவித்த மக்களைத் தன் பேச்சால் சிந்திக்க வைத்தார்கள்.

யார் அடிமை, யாருக்கு அடிமை, ஏன் அடிமை, எதற்கு அடிமை, எத்தனை நாள் அடிமைகளாய் இருப்பீர்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கேள்விக் கணை தொடுத்தார்கள்.

பிற்பகல் 12-05

திண்ணைப் பேச்சிலே விண்ணைப் பிளந்து, மண்ணை வார்த்து, மெய் பொத்தி, கை பொத்தி, வாய் பொத்தி, ஆமைகளாய், ஊமைகளாய், பொட்டுப் பூச்சியாய், பொம்மைத் தேரையாய், பள்ளம் பார்த்து விழும் பிள்ளைப் பூச்சியாய், தொங்கும் நரம்பின் தூளாய், கண்ணங்கருத்த இருட்டின் கரையாய், உண்ண உணவில்லாமல், உடுக்க உடையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த மக்களைக் காப்பாற்ற தாயாக நான் இருக்கிறேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அன்றுதான் அம்மா அவர்கள் மண்ணுக்கும் விண்ணுக்கும் விஸ்வரூபம் எடுத்தார். அன்று தோன்றியதுதான் இந்த மாபெரும் யுகப் புரட்சி. அன்று வெடித்ததுதான் தமிழகத்தின் முழுப் புரட்சி. கூடல் மாநகராம் மதுரையிலே அம்மாவின் வீர முழக்கம் கேட்டு, வெகுண்டு எழுந்தார்கள் தமிழ்நாட்டு மக்கள். அதன் வெளிப்பாடுதான் கடந்த 2011 ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘அரசாங்கம் ஒரு வீடு. அதை ஆளுங்கட்சி வாடகைக்கு எடுத்திருக்கிறது. மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம். அதன் கணக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பார்க்கப்படுகிறது. மக்களைப் பார்த்து ஆள்பவர்கள் அஞ்சவேண்டும் என்றார். ஆனால், கடந்த ஆட்சியில் ஆள்பவர்களைப் பார்த்து மக்கள் அஞ்சி நடுங்கினார்கள். எனவே, தேர்தல்மூலம்தான் கணக்கைத் தீர்க்க வேண்டும் என்று முடிவெடுத்த மக்கள் அறிவும், ஆற்றலும், திறமும், தெளிவும், வரலாற்று நுண்ணறிவும், பொருளாதாரப் புரிதலும், பொதுமை உணர்வும் கொண்ட இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் தங்களை ஆளவேண்டும் என்று ஒரு மௌனப் புரட்சி (Silent Revolution) மூலம் தமிழகத்தை சுயநலவாதிகளின் பிடியிலிருந்து மீட்டு எடுத்தார்கள்.



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

பல கிராமத்து ஏழைத் தமிழர்களின் வாக்குகளை விலைபேச வந்தவர்களைப் பொது மக்களே விரட்டியடித்துள்ளார்கள். எனது தொகுதியில் நரிக்குறவர் காலனிக்கு வாக்களிக்க பணம் கொடுக்கச் சென்றவர்களை விரட்டியடித்த சம்பவம் அரங்கேறியது. கிழிந்த ஆடைகள், அழுக்குப் படிந்தவைகள், எளிய உருவங்கள், கரிய வடிவங்கள், கஞ்சிக் கலயங்கள், கீற்றுக் குடிசைகள், கல்லாமைத் துறைமுகங்கள், இல்லாமையின் உறைவிடங்கள், காலமும் உழைத்தே உண்ணுகின்ற அன்றாடங்காய்ச்சிகள், ஆலைப் பணியாளர்கள், பாரம் சுமப்போர், வண்டி இழுப்போர், வறுகடலை விற்போர், மொத்தத்திலே, வறுமையின் சின்னங்கள், வசந்தங்கள் காணாத எளிமைகள் இவர்களுக்கான மக்கள் நலத் திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருப்பதாக மேதகு ஆளுநர் உரையில் கூறியிருப்பதற்காக நாங்கள் ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் அரசியல்வாதி, அடுத்த தலைமுறையைப் பற்றி யோசிப்பவர் அரசியல் ஞானி (Political Statesman). மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொலைநோக்குப் பார்வையுடன், வளர்ச்சித் திட்டங்களுக்கும் infrastructure என்னும் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கும் திட்டங்களுக்கும், அதே முக்கியத்துவத்தை அளித்து தமிழகத்தை வளமான வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுசெல்லும் என்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் இதயதெய்வம் அம்மா அவர்களையும், அவர்களது அரசையும் பாராட்டியதற்கு இந்த அவையின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

வரலாறு காணாத மின்வெட்டு, விண்ணோடும், முகிலோடும் விளையாடிய விலைவாசி உயர்வு, மணல் கொள்ளை என தமிழகமே இருண்டு போயிருந்த சூழ்நிலையினை மாற்றிட, இருண்ட தமிழகத்தில் ஒளியேற்ற வாருங்கள் அம்மா என்று தமிழ்நாட்டினுடைய 7 கோடி மக்களும் ஏங்கித் தவித்து தங்களிடத்திலே ஆட்சியை ஒப்படைத்திருக்கிறார்கள். இப்போதுதான் மக்களின் நம்பிக்கையிலே, புத்தொளியும், மகிழ்ச்சியும் பிறந்திருக்கிறது தாயே!

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

கடந்த ஆட்சியில் மின்சாரம் இல்லை, சட்டம் ஒழுங்கு சரியில்லை, திரைப்படங்கள் எடுக்க முடியவில்லை; அப்படியே எடுத்தாலும் திரையரங்குகளில் திரையிட முடியவில்லை. சொத்து வாங்க, விற்க முடியவில்லை. பத்திரப் பதிவு செய்ய முடியவில்லை. ஜனநாயகத்தின் ஐந்தாவது தூண் எனப்படும் பத்திரிகைகள் சுயமாகச் செய்தி வெளியிட முடியவில்லை. வயதான முதியவர்கள் தனியாகக் குடியிருக்க முடியவில்லை. பள்ளிக் குழந்தைகளை நிம்மதியாக பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை. காவல் துறை உயர் அதிகாரி முதல் கீழ்மட்ட காவலர்கள் வரை கடமையினைச் சரிவர கவனிக்க முடியவில்லை. அனைத்து அரசுத் துறைகளிலும் உயர் அதிகாரிகள் முதல் கீழ்மட்டப் பணியாளர்கள் வரை கடந்த ஆட்சியில் பணியை நிம்மதியாகச் செய்ய முடியவில்லை. கடந்த ஆட்சியே மொத்தத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதியுடைய கட்டுப்பாட்டில் இல்லை. எனவே மக்கள் ஓட்டும் இல்லை, இல்லை என்று சொல்லி அடித்து விரட்டியிருக்கிறார்கள்.

14-வது சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த மக்கள் நலன் காக்கும் திட்டங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே 7 நல்ல திட்டங்களுக்குக் கையொப்பமிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரிசி பெறத் தகுதியுடைய அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ மற்றும் 35 கிலோ அரிசி இலவசமாக வழங்குதல், படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.25,000-த்துடன் 4 கிராம் தங்கம் இலவசம். ஏழைப் பெண்களுக்கு தங்கம் என்ற பெயர் மட்டும் இருந்த நிலையை மாற்றி பட்டம் அல்லது பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகை ரூ.50,000/-த்துடன் தாலிக்கு 4 கிராம், அரை பவுன் தங்கம் இலவசம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

முதியோர் உதவித் தொகை, கைம்பெண் உதவித் தொகை பெறும் அனைவருக்கும் 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கினார் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மீன்பிடித் தடைக் காலங்களில் உதவித் தொகையை ஆயிரம் ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக இரட்டிப்பாக்கினார் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு கால விடுப்பு மூன்று மாதத்திலிருந்து 6 மாதமாக உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையை அம்மா அவர்கள் தொடங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேதகு ஆளுநர் உரையில் சட்ட விரோதமான முறையில் வலுக்கட்டாயமாக பயமுறுத்தி பலருடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டதை, அவர்களிடமிருந்து மீட்டு உரிய நபர்களுக்கு மீண்டும் தர புதிய சட்டம் இயற்றப்படும் என்ற அறிவிப்பு அனைத்து மக்களாலும் உன்னதமாக வரவேற்கப்படுகிறது.

செம்மொழி மாநாடு என்கிற பெயரில் கோவையில் கனிமொழியின் கவிதைகளை ஆராய்ச்சி செய்வதற்கும், முன்னாள் முதல்வருடைய பேத்தி வீணை வாசிப்பதை ரசிப்பதற்கும், கொங்கு மண்டலத்திலே சரிந்த செல்வாக்கை சரி செய்வதற்கும், அரசு கஜானாவிலிருந்து ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வீணடித்து மாநாடு என்கிற பெயரில் நடந்த அந்தக் கேலிக் கூத்தை அனைவரும் அறிவோம். ஆனால், இதய தெய்வம் அம்மா அவர்களினுடைய அரசு திருக்குறள், பாரதியார் மற்றும் பாரதிதாசன் கவிதைகளை ஆங்கிலம், சீனம், அரேபிய மற்றும் உலகில் அதிகம் பேசப்படும் மற்ற மொழிகளில் மொழிபெயர்த்து இணைய தளத்தில் இடம்பெறச் செய்வது, சீர்கெட்டிருக்கும் தமிழ் பல்கலைக்கழகத்தை மீட்டெடுத்து, தமிழ் மொழியை இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குவது, நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்துவது ஆகியவற்றிற்காக மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இடைவிடாது வலியுறுத்தும் என்ற அறிவிப்பை உண்மையான தமிழ் உணர்வாளர்கள் போற்றிப் பாராட்டுகிறார்கள்.

இதய தெய்வம் அம்மா அவர்களே, செம்மொழி மாநாடு என்ற பெயரில் கோவை மாவட்டம் முழுவதும் ஓராண்டு காலம் எந்த அரசுப் பணியும் நடைபெறவில்லை. அப்போது கோவையில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் இதர பணிகள் எதுவுமே சரிவரச் செய்யாமலே, செய்ததாகக் கணக்கிட்டு கோடிக் கணக்கில் முறைகேடு செய்துள்ளார்கள். யார் அந்த ஒப்பந்ததாரர்கள், எவ்வளவு

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

முறைகேடுகள் நடந்துள்ளன என்பதெல்லாம் குறித்து இதய தெய்வம் அம்மா அவர்கள் விசாரணைக் குழு அமைத்து உண்மையான நிலையினை மக்கள் மன்றத்தில் வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய தலைமைச் செயலகம் என்கிற பெயரில் மக்களின் வரிப் பணத்தில் ரூபாய் ஆயிரம் கோடிக்கு மேல் வீணடித்து, சர்க்கஸ் கூடாரம்போல், தோட்டா தரணியை வைத்து சினிமா செட்டிங்போல அமைத்ததற்கு, பாண்டிச்சேரி மாநிலத்தின் போலீஸ்காரர்களுடைய தொப்பி போன்று கட்டடம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றே கடுமையான கண்டனம் தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கால்வாசிகூட கட்டி முடிக்காத சூழ்நிலையில் பணி முடிந்ததாகச் சொல்லி, மாண்புமிகு பிரதமரை அழைத்து வந்து திறப்பு விழா செய்தது—சாதாரணமாக ஒரு அரசு விழாவிற்கு மேடை அமைத்தால்கூட பொதுப் பணித் துறையின்மூலம் Stability Certificate பெற வேண்டும் என்று விதி இருக்கும்போது, இவ்வளவு பெரிய முக்கியத்துவம் வாய்ந்த தலைமைச் செயலகக் கட்டடத்தை அரசு விதிகளுக்குப் புறம்பாக அவசர கதியில் அள்ளித் தெளித்த கோலத்தில் கட்டியதற்கும், இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு Stability Certificate வாங்கப்பட்டிருக்கிறதா என்பது குறித்தும், நல்ல முறையில் அம்மா அவர்கள் விசாரணையைத் தொடங்க வேண்டும். நடைபெற்ற மெகா ஊழல் குறித்து ஒரு விசாரணைக் குழு அமைக்க அம்மாவின் அரசு எடுத்த முடிவை அனைத்து நடுநிலையாளர்களும் வரவேற்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தக் கட்டடம் கட்டும்போது ஏராளமான அப்பாவித் தொழிலாளர்களின் விலை மதிக்க முடியாத உயிர்கள் பலியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. அது குறித்து மனித உரிமை கமிஷன்மூலம் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்தவும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், பதுக்கல் மற்றும் கள்ள மார்க்கெட்டில் ஈடுபடுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்க இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு உறுதி பூண்டுள்ளதோடு, ரூபாய் 50 கோடி ஒதுக்கீட்டில் 'விலைக் கட்டுப்பாட்டு நிதியம்' ஏற்படுத்தியதை அனைவரும் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள்.



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

'தமிழ்நாடு 2025 தொலைநோக்குப் பார்வைத் திட்டம்' ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாரித்து வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து களைவதற்கும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், முக்கிய கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிந்து செயல்படுத்திட, மாண்புமிகு அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் தொழில் துறையில் தமிழகம் வகித்த சிறப்பான இடத்தை மீட்டெடுக்கவும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் முயற்சியைத் தமிழகம் இன்றைக்கு நெஞ்சாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

'பண்ணைசார் சிறப்புத் திட்டம்' மூலம் முதன்மைத் துறைகளான விவசாயம், கால்நடைத் துறை, மீனளம் போன்றவற்றின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்திடவும், விவசாய உற்பத்தியைப் பெருக்கி சிறு, குறு விவசாயிகளின் நலம் பேணவும் மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்புக் கவனம் செலுத்த உள்ளதை விவசாயிகள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

வேளாண் உற்பத்தித் திறனைப் பெருக்க நெல், பயறு, கரும்பு, பருத்தி போன்றவற்றின் உற்பத்தி வழிமுறைகள் குறித்துத் திட்டமிடப்பட்டு வேளாண் துறைக்கு புத்துயிர் அளித்தல், துல்லிய பண்ணை முறை, நுண்ணீர் பாசனத் திட்டங்கள் போன்றவற்றிற்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்தல், விவசாயிகளுக்கு அதிகம் வருவாய் ஈட்டித் தரும் பயிர்களைப் பயிரிட நடவடிக்கை எடுத்தல், வேளாண் கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் விவசாயிகளின் பங்களிப்புடன் விவசாயப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், சந்தை வசதி, சேமிப்புக் கிடங்குகள் மற்றும் குளிர்சாதன வசதிகளை உருவாக்குதல் போன்றவற்றால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை உண்மையான விவசாயிகளின் நலன் பேணும் அரசு என அனைவரும் பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 12-15

மாநில நதிகளை இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி பாசன ஆதாரத்தைப் பெருக்குதல் மிக உன்னதமான திட்டமாகும். காவிரி டெல்டா விவசாயிகளின் பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 ஆம் தேதிதான் தண்ணீர் திறக்கப்படும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களே, உங்கள் கை பட்டது துலங்கும் என்பதன் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி நேற்றையதினம் ஜூன் 6 ஆம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்ததற்கு அனைத்து விவசாயிகளும் இன்றைக்கு ஏகோபித்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, காவிரியின் catchment பகுதி என்கிற நீர்ப் பிடிப்புப் பகுதியிலே கடந்த ஒரு வாரமாக மழை பெய்து இன்றைக்கு கர்நாடக மாநிலத்தில் இருக்கின்ற அணைகள் எல்லாம் நிரம்பி, வெகு விரைவில் மேட்டூர் அணைக்கு புதிய நீர் வேகமாக உங்கள் கை பட்டதனால், உங்கள் ஆட்சி அமைந்ததனால் வர இருக்கிறது தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

பரம்பிக்குளம்-ஆழியாறு, முல்லைப் பெரியாறு, பாம்பாறு, பாலாறு ஆகிய நதிநீர்ப் பிரச்சினைகளில் பிற மாநில அரசுகளுடன் கலந்து பேசி சுமுகமாகத் தீர்க்கவும், சட்டப்படி தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி பூண்டுள்ளதை அனைவரும் மனதாரப் பாராட்டுகிறோம்.

கடந்த ஆட்சியில் வரலாறு காணாத மின்வெட்டு, அடிப்படைக் கட்டமைப்புகளில் உள்ள குறைபாடு, மனித வளப் பற்றாக்குறை ஆகியவை தொழில் வளர்ச்சியை வெகுவாகப் பாதித்தன. தமிழகத்திற்கு வரவேண்டிய தொழில் முதலீடுகள், வேறு மாநிலங்களுக்குச் செல்லும் அவல நிலை ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மோட்டார் வாகன உற்பத்தி, மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், தகவல் தொழில்நுட்பம், ஜவுளித் துறை, தோல் பொருட்கள் சார்ந்த தொழில் துறை, பொறியியல் உபகரணங்கள், ஆகியவற்றில் பெரும் தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் என்ற அறிவிப்பு தமிழக மக்களின் வயிற்றில் பால் வார்ப்பதாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை அல்லது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும், தொழில் வளர்ச்சியைப் பரவலாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்துவரும் பெரும் முயற்சி, கப்பல் கட்டும் தொழில்களுக்கான முதலீடுகளை ஈர்த்தல், பயோ டெக்னாலஜி, நானோ டெக்னாலஜி மற்றும் பார்மச்சூட்டிகல்ஸ் (Pharmaceuticals) போன்ற துறைகளைத் துவக்கிவைத்தல் ஆகியவை பாராட்டுக்குரிய அம்சங்களாகும் என்று நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

கடந்த ஆட்சியில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகிறோம் என்ற பெயரில் தங்கள் குடும்ப வியாபாரத்தைப் பெருக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட அத்திட்டம் “மானாட மயிலாட”, “மிட்நைட் மசாலா” போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் எதிர்காலத்தைச் சீரழித்தது. இந்தியாவிலேயே முதன் முதலில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச பாடப் புத்தகம் வழங்கும் திட்டத்தை நீங்கள்தான் தொடங்கி வைத்தீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் +1, +2 பயிலும் மாணவ மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தையும் இந்தியாவில் முதன்முறையாக நீங்கள்தான் தொடங்கி வைத்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் இந்தத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றன. அதேபோன்று இன்றைக்கு பள்ளி மாணவ, மாணவியருக்கு லேப்-டாப் வழங்கும் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) உலக நாடுகளுக்கே வழிகாட்டும் திட்டமாக, உலகமே வியக்கும் திட்டமாக, உன்னதத் திட்டமாக, உலகம் போற்றும் திட்டமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. இத்திட்டம், கல்வி பயிலும் மாணவ மாணவியர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும். இந்தியாவில் மட்டுமல்ல, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், சிங்கப்பூர் போன்ற அனைத்து மேலை நாடுகளிலும் தமிழன் வெற்றிக் கொடி நாட்டுவான். இத்திட்டம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய உன்னதமான திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தை அமல்படுத்தி தனிப்பட்ட ஒரு குடும்பம் கேபிள் டி.வி. இணைப்பின்மூலம் ஆண்டிற்கு ஆயிரம் கோடி ரூபாயினைக் கொள்ளையடிப்பதைத் தடுத்து நிறுத்திட, அரசு கேபிள் டி.வி.-யை புதுப்பித்தல், உள்ளூர் கேபிள் டி.வி. இயக்குபவர்களைப் பாதிக்காத வகையில் தனியார் கேபிள் டி.வி. சேவையை அரசுடைமையாக்கும் திட்டம், புரட்சிகரமான திட்டமாகும். கடந்த ஆட்சியில் அரசு கேபிள் டி.வி-க்கு எவ்வளவு மூலதனம் போடப்பட்டது, வாங்கிய விலை மதிப்பு மிக்க உபகரணங்கள் என்ன ஆயின? நஷ்டத்திற்கு யார் பொறுப்பு?

"கண்கள் பனித்தன", "இதயம் இனித்தது" என்று கூறி அரசு கேபிள் டி.வி.-க்கு மூடுவிழா நடத்திவிட்டார்கள். இது குறித்து விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மிகை மின் மாநிலமாக இருந்த தமிழகம், கடந்த தி.மு.க. ஆட்சியில் வரலாறு காணாத மின்வெட்டு மாநிலமாக மாறியது. அதற்குக் காரணம், ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடு ஆகும். எதிர்கால கூடுதல் மின் தேவையைக் கணக்கிட்டு, நீண்டகால மின் செயல்முறைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, தொழில் துறைகள் மற்றும் பிற துறைகளுக்கு தங்குதடையின்றி மின்சாரம் கிடைக்க வழிவகை செய்தல், மின் திருட்டைத் தடுத்து மின் இழப்பைக் குறைத்தல், சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், காற்றாலை மின் உற்பத்தியை முழுமையாகப் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் நல்ல வளர்ச்சிக்கு அறிகுறியாகும். ஒரு நம்பகத் தன்மையுள்ள மாற்று எரிபொருள் ஆதாரமாக, மரபுசாரா எரிசக்தியான காற்று, சூரிய ஒளி மற்றும் உயிரி எரிபொருள்மூலம் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அரசு முன்னுரிமை வழங்கும் என்ற வைர வரிகள் பாராட்டத்தக்கவையாகும்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் ரூபாய் 75,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட கவைக்குதவாத வீட்டு வசதித் திட்டத்தைக் கைகழுவிவிட்டு, ஏழையெளிய மக்களின் வண்ணக் கனவான சொந்த வீடு கட்ட சூரிய மின்சக்தியுடன்கூடிய ரூ.1,80,000 மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) பசுமை வீடு கட்டும் திட்டம் ஓர் அற்புதமான திட்டம்; அம்மா அவர்கள் ஆட்சியிலே கொண்டு வரப்பட்டிருக்கிற திட்டங்களிலேயே சிறப்பான திட்டமாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வண்ணக் கனவான Women's Reservation Bill, நாடாளுமன்றத்தில் உடனடியாகக் கொண்டு வர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இடைவிடாது போராடும் என்ற அறிவிப்பு (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் மத்தியிலே நல்ல ஒரு நம்பிக்கையை உண்டாக்கி இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அம்மா அவர்களுடைய



ஆட்சிக் காலத்திலேதான் மகளிருக்காக சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அப்போது மகளிர் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்த போதுமான அளவில் சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் கிடைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பாடுபட்டது மகளிர் மனங்களில் நீங்கா இடம் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த தேர்தல் வாக்குறுதிகளான இலவச கிரைண்டர், மிக்சி மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டத்தை வரும் செப்டம்பர் 15 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் முதல் தமிழக மக்களுக்கு வழங்குவதாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இது ஏழையெளிய மக்களின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நகர்ப்புறங்களுக்கு இணையான வசதிகள் கிராமப்புறங்களுக்கும் ஏற்படுத்த பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதி, 24 மணி நேர மருத்துவ வசதி, தரமான கல்வி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் போற்றுதலுக்குரியவையாகும்.

தற்போதுள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைக் கைவிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த முடிவு ஒரு நல்ல முடிவாகும். தனிப்பட்ட ஒரு குடும்பம் கோடிகளை கொள்ளையடிப்பதற்காகத் தொடங்கப்பட்ட அந்தத் திட்டத்தை மூடிவிட்டு, அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை வழங்கும் நோக்கத்தை எட்டக்கூடிய வகையில் ஒரு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அறிமுகப்படுத்துவதை அனைத்துத் தரப்பு மக்களும் வரவேற்கிறார்கள். ஆரம்ப சுகாதார மையங்களில் 24 மணி நேரமும் மருத்துவ சேவை அளிப்பதோடு மருத்துவ சுற்றுலாவைப் பெரிய அளவில் ஊக்குவிக்க ஆராய்ச்சி வசதிகளுடன்கூடிய மருத்துவ நகரங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கும் திட்டம் ஓர் உன்னதமான திட்டமாகும்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தை மீண்டும் பழைய நிலைக்கே கொண்டுவந்து கல்வித் தரத்தை வலுவாக்குதல் சிறந்த முடிவாகும்.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தனிக் கவனம் செலுத்துவது மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்களின் நலம் பேண சிறப்பு நிதி அளிக்க முன்வந்துள்ளது ஆகியவை மாணவர்களிடையே பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த கால அம்மா அவர்களின் ஆட்சி 2001-2006-ல் முன் எப்போதும் இல்லாத வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆதி திராவிட பழங்குடியினர் மாணவ, மாணவியர் விடுதிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள் அனைத்தும் கூரை மற்றும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த நிலையினை மாற்றி, முழுமையாக மாடிக் கட்டடங்களாக நவீனமயமாக்கப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களால் கட்டப்பட்டவை என்பதற்காக கடந்த 5 ஆண்டுக் காலம் மேற்காணும் விடுதிகள் பராமரிப்பின்றி பழுதடைந்து கிடக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையில் மேற்கண்ட விடுதிகள் அனைத்தும் ஓராண்டு காலத்திற்குள் பழுதுபார்த்துத் தரப்படும் என்று குறிப்பிட்டிருப்பது இந்த அரசு ஏழை மக்களின்மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தொலைத் தொடர்புத் துறையில் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக உள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் 46 தனித் தொகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வெற்றிக் கூட்டணி 44 தொகுதிகளைக் கைப்பற்றியிருக்கின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்களைச் சீரமைத்தல், அங்கு அடிப்படை வசதிகள் செய்து தருதல், கல்வி, வேலைவாய்ப்பில் பயிற்சிகள் அளித்தல், அனைத்து நலத் திட்ட உதவிகளும் வழங்குதல் ஆகியவை நல்ல திட்டங்களாகும்.

தேர்தல் அறிக்கையில் கூறியபடி படிப்பு முடிந்து வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று பதிவு செய்யும் முறையினை மாற்றி, அவரவர் பயிலும் கல்வி நிலையங்களிலிருந்தே ஆன்லைன் மூலம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யும்



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

முறையினை நடைமுறைப்படுத்தியது மாணவ, மாணவியரிடத்திலே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-25*

கடந்த 1996-2001-ல் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் சீர்குலைந்த நிதி நிலையினை 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றது முதல் கடுமையாக உழைத்து, சிக்கனத்தைக் கடைப்பிடித்து அரசுக்கு வருவாய் ஏற்படுத்தி பல்வேறு வகையிலும் அரசு கஜானாவை நிரப்பினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் 2001 முதல் 2006 வரை ஐந்தாண்டு கால பொற்கால ஆட்சியில் அரசின் வருவாயைப் பெருக்கி கஜானாவை நிரப்பி வைத்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி வந்தவுடன் முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் தவறான வழியில் நிதியினைச் செலவு செய்து அரசு கஜானாவை காலி செய்து விட்டதால் 2011-ல் தி.மு.க. ஆட்சிக்கு மக்கள் முற்றுப்புள்ளி வைத்த நிலையில் தற்போது நிதி நிலைமை எவ்வாறு உள்ளது? கடந்த தி.மு.க. அரசு நிதி ஆதாரங்களை எவ்வாறு சீர்கெடுத்தது என்ற விவரங்களை சாதாரண மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில் வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்தகால ஆட்சியில் மின் உற்பத்தியில் மிகை மாநிலமாகத் திகழ்ந்த தமிழகம், கடந்த தி.மு.க. ஆட்சியில் அனல் மின் நிலையங்கள் மற்றும் நீர் மின் நிலையங்கள் பராமரிப்பு இல்லாததால் மின் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டு இருண்ட தமிழகமாக மாறியது. ஆனால், அனல் மின் நிலையங்களுக்கு இந்தோனேசியாவிலிருந்து தரமற்ற நிலக்கரியினை வாங்கி பெருமளவில் ஊழல் நடைபெற்றுள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில், விசாரணைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று மிகவும் சிரம் தாழ்த்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா, தமிழகத்தின் தலைநகர் சென்னையாக இருக்கலாம். ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைநகரம் கொங்கு மண்டலம் கோவை. இங்குதான் உங்களுடைய இரண்டாம் சுதந்திரப் போரைத் தொடங்கினீர்கள். எப்போதும் உங்களுக்கு வெற்றியையே பரிசாகக் கொடுக்கும் மண் கொங்குச் சீமை. மலை வளம், மண் வளம், நீர் வளம் அனைத்தும் நிறைந்த

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7

மாவட்டம் கொங்கு மாவட்டம். கடந்த ஐந்தாண்டுகளில் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி கோவை, திருப்பூர் பகுதிகளை முற்றிலும் புறக்கணித்துவிட்டது. ஏலக்காய், பட்டை, கிராம்பு, சந்தனம் போன்ற வாசனைத் திரவியங்கள் எங்கள் ஆனைமலை குன்றுகளில் விளைகின்றன. உலகத்தரம் வாய்ந்த தேயிலையும், காபியும் வால்பாறையில் விளைகின்றன. புகழ்வாய்ந்த வன விலங்கு சரணாலயம் எங்களுடைய கொங்குச் சீமையிலே உண்டு. முப்போகம் விளைகின்ற நெல் வயல்கள் உண்டு. வானுயர விளைகின்ற கரும்பு விவசாயம் உண்டு. மஞ்சள் விவசாயம் உண்டு. வானம் பார்த்து விளைகின்ற பூமியும் உண்டு. இந்தியாவில் உற்பத்தியாகும் தேங்காயில் பெரும் பகுதி எங்கள் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதிகளில்தான் விளைகிறது. இங்கு உற்பத்தியாகும் தென்னை நார் சீனா மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் திருப்பூரைப்போல தென்னை நார் தொழிலில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டாரங்கள் புகழ் பெறப் போகின்றன. ஆண்டிற்கு 12,000 கோடி அன்னியச் செலாவணியை ஈட்டும் திருப்பூர் கடந்த ஆட்சியாளர்களின் நிர்வாகச் சீர்கேட்டால் இன்று நிலைகுலைந்து போயுள்ளது.

Foundry தொழில்மூலம் கோவையில் Oil Engine-கள் உற்பத்தி செய்யப்பட்டு வங்க தேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மின் மோட்டார் பம்ப் செட் உற்பத்தியிலும் கோவை முதலிடம் வகிக்கிறது. பழமைவாய்ந்த நூற்பாலைகள், நெசவாலைகள் இங்கு உண்டு. கோழிப் பண்ணைத் தொழிலும் இங்கு உண்டு. பட்டுப்பூச்சி வளர்ப்பது, பால் பண்ணைத் தொழில் ஆக அனைத்துத் தொழில்களும் இங்கே செழித்து வளர்கின்றன. கோவை, திருப்பூர் மாவட்டங்களை தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று வர்ணிப்பார்கள். புகழ்பெற்ற வேளாண் பல்கலைக்கழகம் இங்கே உண்டு. இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட சி. சுப்பிரமணியம் பிறந்த மண் இந்த மண். இந்தியாவின் முதல் நிதியமைச்சர் பொருளாதார மேதை ஆர்.கே. சண்முகம் செட்டியார் தோன்றியது இங்குதான். படிக்காத மேதை ஜி.டி. நாயுடு தோன்றியது இந்த மாவட்டத்தில்தான். உலகம் போற்றும் கல்வி நிலையங்கள் இங்கு உண்டு. இவை அனைத்தும் கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் கவனிப்பாரற்ற நிலையின் காரணமாக பொய்யாய், பழங்கதையாய் போனதம்மா! நீங்கள் கொங்குச் சீமைக்கு தாய். உடனடியாக சாயப்பட்டறைக் கழிவு



2011 ஜூன் 7] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

நீரை வெளியேற்றி கடலில் கலக்கும் திட்டத்தை உங்களால் மட்டும் தான் செயல்படுத்த முடியும் அம்மா. இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி பனியன் தொழிலையும் காக்க முடியும். நொய்யலாற்று கரை விவசாயிகளையும் காக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதிகளை உள்ளடக்கிய ஒன்றுபட்ட கோவை மாவட்டம் தொழில் துறையில் ஒரு குட்டி ஜப்பான். விவசாயத்தில் ஒரு இஸ்ரேல், வியாபாரத்தில் ஒரு சிங்கப்பூர் என்று சொல்வார்கள். கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட விவசாயிகளின் நீண்ட காலக் கனவு ஆனைமலை ஆறு-நல்லாறு திட்டம் உருவாக்க வேண்டும் என்பது. அம்மா அவர்களும் தேர்தல் வாக்குறுதியாக பொள்ளாச்சி கூட்டத்தில் கூறியிருக்கிறீர்கள். எனவே, ஆனைமலை ஆறு-நல்லாறு திட்டத்தை எங்கள் கோவை மாவட்ட கொங்கு மண்டல மக்களுக்குப் பரிசாக நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று தாழ்மையோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

அம்மா, கடந்த ஆட்சியாளர்கள் பஞ்ச பூதங்களிலும் சாகசம் புரிந்தவர்கள். நிலமென்றால் நாடு முழுவதும் உள்ள ஆறுகளில் மணல் கொள்ளை என்று சொல்வார்கள். நீர் என்றால் சேது சமுத்திரத் திட்டக் கொள்ளை. நெருப்பென்றால் அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி வாங்கியதில் ஊழல். காற்று என்றால் 2ஜி ஸ்பெக்ட்ரம் மூலம் அடித்த இலட்சக்கணக்கான கோடி ஊழல். ஆகாயம் என்றால் Spice Jet விமானம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் நடைபெற்ற அவலங்களை, மக்கள் படும் இன்னல்களைப் போக்க, வெற்றிக் கூட்டணி ஏற்படுத்தி, தன் உடல் நலனைப் பொருட்படுத்தாமல், இரவு, பகலென்று பாராது, தமிழகம் முழுவதும் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டு, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் அவலங்களை மக்களிடம் தெரிவித்து, அசைக்க முடியாத தன்னம்பிக்கையோடு செயல்பட்டு, அண்ணா தி.மு.க கூட்டணிக்கு 203 தொகுதிகளிலும் அதிக வாக்கு வித்தியாசத்திலே அமோக வெற்றிப்பெறச் செய்தீர்கள். இந்த நேரத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2011 ஜூன் 7 பிற்பகல் 12-30

'அம்மா' உங்களின் இறைவழிபாட்டாலும், உங்களின் ஓய்வறியா, கடுமையான உழைப்பாலும், விடா முயற்சியாலும், வெற்றித் தேவதையின் மாளிகைக் கதவுகள் திறந்து இருக்கின்றன. இப்படி ஒரு பொன்னான வாய்ப்பை, தமிழ்நாட்டு மக்கள் உங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். விரைவில் இந்தியத் துணைக் கண்ட மக்களும் இந்த வாய்ப்பை உங்களுக்கு வழங்குவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தலைவர்கள் வரிசையில் நீங்கள் நிச்சயம் இடம் பிடிப்பீர்கள் என்று சொல்லி, எனக்கு இந்தப் பொன்னான வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அம்மா அவர்களுக்கும் நன்றியினைக் கூறி, அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்கி, என் உரையினை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரம் 25 நிமிடங்கள். அதற்குள்ளாகவே பேசி முடிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய முதல்வர் அவர்களே, கர்மவீரரைத் தரணிக்குத் தந்த விருதுநகர் வாக்காளர்களுக்கு நன்றிகூறி, எனக்கு ஒரு அடையாளம் தந்த எங்களின் இதய தெய்வம், புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை நெஞ்சில் நிறுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) எனது கன்னிப் பேச்சை துவங்குகிறேன்.

ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கொள்கை பாதைகளை, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பாக உளமார வரவேற்கிறோம். இடித்துக் கூறும் நண்பனாகவும், இடுக்கண் வருங்கால் உடுக்கை இழந்தவன் கைபோல் அங்கே வந்து தோள் கொடுக்கும் தோழனாகவும் இந்த அவையில் நாங்கள் செயல்படுவோம் என்று உறுதி கூறுகிறோம். சில பாராட்டுகள், சில கேள்விகள், சில எதிர்பார்ப்புகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். முதலில் இந்தப் புதிய அரசின் பொருளாதாரப் பார்வை, "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் - VISION 2025" தயாரிக்கப்படும்பொழுது, அது பொருளாதார



2011 ஜூன் 7] [திரு. க. பாண்டியராஜன்]

குறியீடுகளைமட்டும் உள்ளடக்காமல் நமது அமர்த்தியா சென் அவர்கள் உருவாக்கிய மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளையும் உள்ளிட்டு இருக்கவேண்டுமென்று இந்த அவையில் சமர்ப்பிக்கிறோம். Human Development Index-ஐ எடுத்துக்கொண்டால், நமது புரட்சித் தலைவர் அவர்கள், "என்ன வளம் இல்லை, இந்தத் திருநாட்டில்! ஏன் கையை ஏந்தவேண்டும் அயல்நாட்டில்?" என்று பாடினார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெரிய அளவிலே நமக்கு கனிம வளங்களோ, நீர் வளங்களோ, நில வளங்களோ—அண்ணன் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் நிறைய சொன்னார்கள்—அவையெல்லாம் இருந்தாலுங்கூட, அவற்றைவிட பெரிய வளம் மனித வளம்தான். அந்த மனித வளம் குறித்த குறியீடுகளை நமது தொலைநோக்குத் திட்டத்திலே நிறைய கொண்டுவர வேண்டும்.

மனித வள மேம்பாட்டை எடுத்துக்கொண்டோமானால், தமிழகத்தினுடைய வரலாறு கடந்த 60, 70 வருடங்களிலே, 1980-களில் மட்டும்தான் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே மட்டும்தான் 6-வது இடத்தில் இருந்த தமிழகம் 3-வது இடத்திற்கு உயர்ந்தது. அதற்கடுத்த பத்து வருடங்களிலே அதே 3-வது இடத்திலே, கேரளாவிற்கும், பஞ்சாபிற்கும் பின்னாலே தமிழகம் இருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில், குஜராத், மகாராஷ்டிரா, இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்கள்கூட நம்மைத் தாண்டிச் சென்று, இன்று 6-வது இடத்திற்குத் தள்ளப்பட்ட மாநிலமாகி நிற்கிறோம். அதேமாதிரி, பொருளாதார வளர்ச்சியிலே மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்கள் மட்டும் தமிழகத்தைவிட முன்னாலே இருந்த காலம் மாறி, இன்று கடந்த ஐந்து வருடங்களில் பீஹார்கூட நம்மைவிட அதிக பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்டும் இழிநிலையையும் கண்டோம்.

நமது கோவைத் தமிழர் திரு. சி.கே. பிரகலாத், உலகமெங்கும் போற்றப்படும் Management Guru சொல்வார், ஒரு தலைவனுக்கு, தலைவிக்கு தொலைநோக்குப் பார்வை-Vision மட்டும் போதாது. அவர்கள் எப்போதுமே ஒரு Compass ஒன்றும், Speedometer ஒன்றும் வைத்திருக்கவேண்டுமென்று சொல்வார். அவர் Compass என்று சொல்வது Planning Commission-ஐ. ஒரு அரசு சார்ந்த Compass என்று சொல்வது, எந்தத் திசையிலே போக வேண்டும் என்று சொல்லக்கூடிய திட்டக் குழு. Speedometer என்று சொல்வது திட்ட அமலாக்க அமைச்சகம். இந்த அரசாங்கம்

[திரு. க. பாண்டியராஜன்] [2011 ஜூன் 7

முதலிலே எடுத்த தீர்மானமான திட்ட அமலாக்க அமைச்சகம் கொண்டு வந்ததை நாங்கள் உள்ளார்ந்து, இதயபூர்வமாக வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதற்கு உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். கடந்த ஆட்சியிலே, Planning Commission என்பது ஏதோ ஒரு Data Centre மாதிரியாகப் போய்விட்டது. அப்படியில்லாமல் அந்த Planning Commission-க்கு உண்மையிலேயே நல்ல மதிப்பு கொடுத்து, அவர்களை ஒரு Compass மாதிரியும், இவர்களை Speedometer மாதிரியும் உபயோகித்தால், தொலைநோக்குப் பார்வை, வெறும் பார்வையாக மட்டும் இல்லாமல் அது குறிக்கோளாக மாறிவிடும். Vision மட்டும் இல்லாமல் Mission ஆக மாறவேண்டும். Mission ஆக மட்டும் இல்லாமல் திட்டங்களாக மாறவேண்டும். Projectise பண்ணவேண்டும்.

பிற்பகல் 12-35

Projectise பண்ணுவதற்கு சென்ற அ.தி.மு.க. ஆட்சியில், 2001-2006-ல் ஒரு அழகான system கொண்டுவந்தீர்கள். 'Equitable Growth Initiative', அதாவது, சமச்சீர் வளர்ச்சிக் குழுமம் என்று கொண்டுவந்தீர்கள். அதை அடுத்த ஆட்சியில் தூக்கிவிட்டார்கள். ஆனால், அதில் நல்லதொரு விஷயம் என்னவென்றால், தனியார் துறையிலிருந்து முக்கியமானவர்கள், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் வங்கித் துறை அதிகாரிகள் இவர்கள் மூன்று பேரும் சேர்ந்து குழுமமாக வைத்து முதலமைச்சருடைய direct attention-ல் இருந்தது. அதனால் அந்த ஐந்து வருட காலத்தில் நிறைய திட்டங்கள் projectise பண்ண முடிந்தது. நாம் ஒரு project அரசாங்கத்திலே கொடுத்து 45 நாட்களுக்குள் உலக வங்கி லோன் எடுப்பதையோ அல்லது மற்றுமுள்ள Multi National Agency இடம் funding எடுப்பதையோ அழகாகப் பண்ணமுடிந்தது. இப்போது இருக்கின்ற மிகப்பெரிய சவால், தொலைநோக்குப் பார்வையோடு இன்று இவ்வளவு திட்டங்களை எப்படி நிறைவேற்றப்போகிறோம், நிதியாதாரம் எங்கிருந்து வரப்போகிறது என்பதுதான். ஏனென்றால், இன்றைக்கு நம் மாநில G.D.P.-இல் 2.53 சதவீதம் கடனாக எடுத்தாகிவிட்டது. இன்றைய தேதியில் 1,05,000 கோடி ரூபாய் கடனில் நிற்கிறோம். நாம் எடுக்கக்கூடிய கடன் இன்னும் 21 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே. 78,000 கோடி ரூபாய், 85,000 கோடி ரூபாய் பட்ஜெட் வருகிறது என்றால்கூட இந்த நிதியாதாரத்தைத் திரட்டுவதற்கு கடந்த



2011 ஜூன் 7] [திரு. க. பாண்டியராஜன்]

அ.தி.மு.க. அரசாங்கம் ஏற்படுத்திய 'Equitable Growth Initiative' மாதிரி ஒரு குழுமம் உருவாக்கவேண்டுமென்பதை நாங்கள் ஒரு கோரிக்கையாக வைக்கின்றோம்.

இந்தத் தொலைநோக்குப் பார்வைத் திட்டம் Visioning exercise முழுமையாக நிறைவேற gross root-ல் இருந்து செய்ய வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். அந்தத் திட்டம், தொலைநோக்குப் பார்வைத் திட்டம் முழுமையாக நிறைவேற எங்கள் இயக்கத்தின் இதயபூர்வமான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேமாதிரி, இன்றைக்கு தமிழகத்தில் நீங்கள் ஒரு பெரிய விஷயமாக சொல்லியிருக்கின்ற வேளாண்மைக்குப் புத்துயிர் அளிக்கும் திட்டங்கள்மூலம் இரண்டாம் விவசாயப் புரட்சியைக் கொண்டுவர முடியும் என்று நான் நம்புகிறேன். இப்போது குஜராத்தில் வேளாண்மைத் துறையிலே ஒரு வருடத்திற்கு 22 சதவீதம் வளர்ச்சி வீதம் காட்ட முடிகிறது என்று சொன்னால், தமிழகத்திலே நாம் கடந்த 5 வருடத்தில் மைனஸ் 1.8 சதவீதம் காட்டியிருக்கிறோம். நமக்கும் அவர்களுக்கும் இருக்கின்ற முக்கியமான விஷயம் அதுதான் என்று நினைக்கிறேன். அதனால் வேளாண்மைக்கு புத்துயிர் அளிக்கும் துல்லிய பண்ணை முறை-Precision Farming, நுண்ணுயிர் பாசனத் திட்டங்கள்—Micro Irrigation, நதி நீர் இணைப்புத் திட்டம் இந்த மூன்று முக்கியத் திட்டங்களையும் ரொம்ப அழகாக நிறைவேற்றிக்கொண்டுபோனால் இரண்டாவது விவசாயப் புரட்சியை உண்மையிலேயே மலர வைக்கமுடியும். ஆனால், இதற்கு புரட்சி என்று சொல்லிக்கொண்டுபோனால் எல்லா அமைச்சர்களுமே இதில் ஈடுபாடாக இருக்கவேண்டும். வேளாண்மைத் துறை மட்டும் இதைச் செய்ய முடியாது என்று நம்புகிறேன்.

அதே மாதிரி தென் தமிழகத்தில் தொழில் மறுமலர்ச்சிக்கு இந்த ஆளுநர் உரையில் முக்கியத்துவம் கொடுத்ததை நாங்கள் வரவேற்கிறோம். மதுரை, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி Corridor தன்னிறைவு கொண்ட தொழில் வளர்ச்சிப் பாதை என்கின்ற திட்டம் ரொம்ப நல்ல விஷயம். ஆனால், இதைப் பலரும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். 3 அரசாங்கங்களில் சொல்லப்பட்ட திட்டம் இது. இதற்கு செயல்வடிவம் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், இந்த continuity

வரவேண்டும். அதாவது, தொலைநோக்குப் பார்வை, திட்டங்களாக மாறவேண்டும், திட்டங்கள் செயல்பாடுகளாக மாறவேண்டும். அது இல்லாமல் இருந்தால் இது கனவாகத்தான் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். எத்தனையோ திட்டங்கள் இதுவரைக்கும் பேசப்பட்டு சும்மா கிடக்கின்றன. அவை எல்லாம் இந்த Corridor-ல் வரவேண்டுமென்று விரும்புகிறோம். விருதுநகர் I.T. Park சாத்தூர் சிறப்புப் பொருளாதார மையம், கள்ளிக்குடி Aero Park, எல்லிங்கநாயக்கன்பட்டி Agricultural Processing Zone மற்றும் சொல்லப்பட்டு நடத்தப்படாத Cluster தொழில் கொத்துக்கள், அது சிவகாசி பிரிண்டிங் Cluster-ஆக இருக்கட்டும், Pyro-Tech University-யாக இருக்கட்டும் எத்தனையோ திட்டங்கள் இந்த Corridor-உடன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் செயல்படுத்தப்படாமல் கிடக்கின்றன.

இந்த ஆளுநர் உரையில் சொல்லப்பட்ட கப்பல் கட்டும் துறை, கடலூர் சார்ந்தது என்று சொல்லியிருக்கிறீர்கள். அது நல்ல விஷயம். நமக்கு இருக்கின்ற மாதிரி நல்ல Coastal Belt குஜராத்தில் பாதிகூடக் கிடையாது. ஆனால், இன்றைக்கு அவர்கள் கப்பல் கட்டும் துறையில் உலக அளவில் பெயர் வாங்கும் அளவிற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். அதில் கப்பல் உடைக்கும் தொழிலுக்குப் போவதாக ஒரு கருத்து இருக்கிறது. அது தவறு என்று நாங்கள் முன்வைக்க விரும்புகிறோம். அதில் பெரிய environmental problem இருக்கிறது. கப்பல் கட்டும் துறையில் நாம் ஏற்கெனவே நிரம்ப தாமதமாக நுழைந்துள்ளோம். நாம் இன்னும் கொஞ்சம் முன் எடுத்துச் செய்தால் அதைச் செயல்படுத்த முடியும் என்று நினைக்கிறேன்.

அதே மாதிரி உயிரி தொழில்நுட்பம் (Bio-tech) Bio-tech Policy-ஐ இந்தியாவிலேயே முதலில் கொண்டுவந்த மாநிலம் தமிழகம். 1993-ல் கொண்டுவந்த திட்டம், இப்போது 100 கோடி ரூபாய் கூட turnover வராத அளவிற்கு இருக்கிறது. TICEL Park உருவான காலகட்டம் அது. ஆனால், இந்த உயிரி தொழில் நுட்பத்தில் 5,000 கோடி ரூபாய்க்கு turnover 5 வருடத்தில் செயல்படுத்த முடியும். அந்த அளவிற்கு அறிஞர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். கட்டமைப்புகள் இருக்கின்றன. அதற்கு ஒரு தொலைநோக்குத் திட்டம்தான் இல்லை. அதைக் கொண்டுவந்தால் கண்டிப்பாகச் செயல்படுத்த முடியும்.





பிற்பகல் 12-40

Nano Technology-ல் நாம் ரொம்ப தாமதமாக உள்ளோம். ஆனால் நல்ல நிறுவனங்கள் Nano Technology-லே research பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். பத்தாயிரம் பேருக்கு வேலை கிடைக்கக்கூடிய அளவுக்கு இந்தத் தொழில் துறையிலே வாய்ப்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். நமக்கு இருக்கிற போட்டித் திறன் சாதகங்களை—Competitive Advantages—முழுக்கப் பயன்படுத்த வேண்டும். அடுத்த 5 வருஷங்களில் இந்த 3 துறைகளிலும் Bio-tech, Nano Technology மற்றும் Ship Building இந்த மூன்றிலேயும் முன்னணி மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க உறுதி எடுத்திருக்கிறீர்கள். அதை நாங்கள் உளமாரப் பாராட்டுகிறோம்.

இவை எல்லாவற்றுக்கும் அடித்தளம் கல்விதான். சமச்சீர் கல்வியைப் பற்றி நிறையப் பேசி விட்டோம். அந்த உயர்ந்த கோட்பாடு, பாடத் திட்டங்களை சமன் செய்வது மட்டுமல்ல என்பது எங்களின் கொள்கை நிலைப்பாடு. ஐந்து விஷயங்கள் முக்கியம் என்று நாங்கள் நினைக்கிறோம். மாணவர்களின் படைப்புத் திறன் வளர்த்திடும் பயிற்சி முறை—Learning by Discovery—என்ற ஒரு சிறு முயற்சி சென்ற அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது. ஆனால், அதை இன்னும் ஆழமாகக் கொண்டுபோக வேண்டும். Learning by Discovery, School in the Box என்ற Rishi Valley திட்டத்தை எடுத்து அதை அப்படியே கொண்டு வந்து implement செய்துகொண்டிருக்கிறோம். இதை நன்றாகச் செயல்படுத்த வேண்டும். அதே மாதிரி தரமான ஆசிரியர்கள், குறைந்தபட்ச அடிப்படைக் கட்டமைப்பு, சரியான ஆசிரியர்-மாணவர் விகிதம், கல்விச் சாலையின் ஒழுக்கச் சூழ்நிலை இந்த ஐந்தும் மாநகரில் உள்ள மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் கடைக்கோடியில் இருக்கிற அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் கிடைக்கச் செய்வதுதான் உண்மையான சமச்சீர் கல்வி. முதலிலே இதைப் பற்றிப் பேசியது திரு. விஜயகாந்த் அவர்கள்தான். எங்களுக்கு மிகுந்த ஆழ்ந்த கொள்கை நிலைப்பாடு இருக்கிறது. இதற்கு சரியான நிதி ஒதுக்குவதுடன் Public-Private partnership, அரசு-தனியார் பங்களிப்புத் திட்டங்களுக்கு இந்த அரசு முறையான சூழ்நிலைகளை உருவாக்கினால் மட்டுமே சமச்சீர் கல்வி நனவாகும். தற்பொழுது பெயரளவில் அறிவித்து வைத்திருக்கிறார்கள். ஆனால், எந்த ஒரு follow up-ம் இல்லாமல்

இருக்கிறது. மிகப்பெரிய அளவில் இதற்கு நிதி திரட்ட முடியும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

இன்று பெருவாரியான பெற்றோர்களின் மனதில் நிறைந்திருக்கும் கவலை இந்த அரசினுடைய கல்விக் கொள்கை மாற்றத்தால் பள்ளிக் கட்டணம் ஏற்கெனவே நிர்ணயித்த நிலையிலிருந்து உயர்ந்துவிடுமோ என்ற பயம்தான். விதிகளை மீறும் பள்ளிகள்மீது பெற்றோர்கள் வந்து புகார்கள் கொடுக்கக் காத்திருக்காமல், அரசே தன் முயற்சியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். இப்போது முதல் கொள்கை அறிவிக்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சரி, முதல்வரும் சரி, அவர்கள் புகார் கொடுத்தால் நாங்கள் பார்ப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ரொம்ப ரொம்பக் கஷ்டம் என்று நாங்கள் நினைக்கிறோம். அரசு தன் முயற்சியில் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயம் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், மக்களுடைய பயம், கொந்தளிப்பாக மாறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது.

அதே மாதிரி மத்திய அரசு ஒரு வருடத்திற்கு முன்பு கொண்டுவந்துள்ள கட்டாயக் கல்விச் சட்டம், RTE. Right to Education Act-ஐத் தமிழ்நாட்டில் அமல்படுத்த உரிய விதிமுறைகளை இயற்றவேயில்லை. 1-1/2 வருடம் ஆகிவிட்டது. அதற்கான விதிகளை இயற்றாமல் இருப்பதால் ஒரு நல்ல சட்டம் கொஞ்சம்கூட அமலாக்கப்படாமல் இருக்கிறது. ஏழை-பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல், ஒரு பகுதியில் இருக்கிற அனைத்து மாணவர்களும் தங்கள் அருகில் இருக்கும் தரமான பள்ளிகளில்—neighbourhood schools—பயில படிப்படியாக வழிகோலும், இந்த உன்னதமான சட்டத்தை நடைமுறைப்படுத்த கல்வியாளர்கள் பங்குபெறும் கல்வி ஆணையம் ஒன்றை நாம் உருவாக்க வேண்டுமென்று நாங்கள் விண்ணப்பிக்கிறோம். இது ரொம்ப ஆழமாக செய்து கொடுத்த ஒரு நல்ல விஷயம் என்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கத்தில் Neighbourhood School Concept, 25 சதவிகிதம் ஒரு பள்ளியில் ஏழை பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும், aided schools-லும் என்பது ரொம்ப ரொம்ப நல்ல விஷயம். ஆனால், இதற்கு எந்த விதிகளும் இயற்றப்படாமல் இருக்கிறது. 6 மாநிலங்களில்தான் இன்னும் rules frame பண்ணவில்லை. அதில் தமிழகமும் ஒன்று. அதற்கு நாம் சீக்கிரம் விதிகளை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.





அதேமாதிரி உயர் கல்வியைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக செயற்கையாக ஒரு டிமாண்ட்-சப்ளை இடைவெளியை உருவாக்கி பெற்றோர்களிடம், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரி நிர்வாகங்கள் முறையற்ற விதத்தில் கல்விக் கொள்ளை அடிக்கும் போக்கை அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கவேண்டும். சும்மா ஒரு ரெய்டு, 4 ரெக்கார்டுகளை எடுத்துக்கொண்டு போக வேண்டியது, இரண்டு கல்லூரிகளை disqualify செய்ய வேண்டியது. அதையெல்லாம் செய்துவிட்டு, கடைசியாக மக்கள் ரூபாய் 1 இலட்சம், 2 இலட்சம், 12 இலட்சம், 15 இலட்சம் என்று வெள்ளைப் பணத்தை கருப்புப் பணமாக ஆக்குகிற ஒரு உருமாறும் நிலை இன்றைக்கு இருக்கிறது. இது மக்கள் மத்தியில் ரொம்ப கொந்தளிப்பாக இருக்கிறது. டாக்டர் அனந்தகிருஷ்ணன் மாதிரி அறிஞர்கள், Transparency International மாதிரி நிறுவனங்கள் செய்த ஆய்வில் தமிழகத்தில் மட்டும் அடுத்த ஒரு மாதத்தில் இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இந்த வெள்ளைப் பணம் கருப்புப் பணமாக மாற இருக்கிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். இதை உடைப்பதற்கு இரண்டு விஷயங்களைச் செய்ய வேண்டும். ஒன்று, கல்லூரிகளின் தர நிர்ணயப் பட்டியலை வெளிப்படையான முறையிலே அரசு இணையதளத்தில் வெளியிட வேண்டும். இன்றைக்கு இருக்கிற பொறியியல் கல்லூரிகளை re-integrate செய்வது இதற்கு வசதியாக இருக்கும். Anna University-ல் உள்ள எல்லா கல்லூரிகளையும் ஒன்றாகக் கொண்டு வருவது இதற்கு ரொம்ப உதவியாக இருக்கும். ஆனால், உண்மையான, ஊழலற்ற ஒரு கல்வி முறையைக் கொண்டுவர வேண்டுமென்றால், கல்லூரிகளின் தர நிர்ணயப் பட்டியலை பல காரணங்களுக்காக வெளியிடாமல் வைத்திருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-45

இன்றைக்கு எத்தனை பேர் arrears வைத்திருக்கிறார்கள், எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது ஒரு காலேஜிலே என்பதுகூட யாருக்கும் தெரியாது. இந்த விஷயங்களை நாம் வெளிப்படையாகச் செய்தால்தான், ஊழலற்ற, அரசியல் தலையீடு இல்லாத உயர் கல்வி மலர்ந்தாலொழிய, கல்வியில் நாம் இழந்த தலைமை நிலையை நம் தமிழகம் மீட்டெடுக்க முடியாது. கல்வித் துறையில் தலைமை நிலையில் இருந்தோம் நாம். அந்தத் தலைமை நிலையை விட்டுவிட்டோம். இதற்கு ஊழலற்ற அரசியல் தலையீடு இல்லாத உயர் கல்வித் துறை மலர வேண்டும்.

[திரு. க. பாண்டியராஜன்] [2011 ஜூன் 7

அதேமாதிரி வேலைவாய்ப்பு. வேலைவாய்ப்புக்கான திறன் வளர்க்கும் பயிற்சி பெரிய அளவில் மேற்கொள்ள அரசு எடுத்த முடிவினை வரவேற்கிறோம். திறன் வளர்த்தல் திட்டம்— Skill Development Mission—Central Government-லே போட்ட திட்டத்திலே பணத்தைச் செலவு செய்ய முடியாமல் திருப்பி அனுப்பிய மாநிலங்களில் ஒன்று தமிழகம். எவ்வளவோ இளைஞர்களுக்கு வேலை கிடைத்திருக்கக்கூடிய ஒரு விஷயம், ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்று அறிவித்தார்கள். அதிலே பெரிய அளவிலே ஊழல். பெரிய அளவில் முறைகேடுகள் நிகழ்ந்ததால் அரசாங்கம், Central Government கொடுத்த காசைக்கூட பயன்படுத்த முடியாமல் திருப்பி அனுப்பி இருக்கிறோம்.

இன்று நம் இளைஞர்களைப் பெரிதும் வாட்டி வரும் பிரச்சினை திறமைக்கும், தேவைக்கும் உள்ள இடைவெளி employability gap. இதுபற்றி Mckenzie சொல்லியிருக்கிறார்கள்; இன்றைக்கு இன்ஜினீயரிங் காலேஜிலே படித்து விட்டு வெளியே வருகிறவர்களில் 30 சதவிகிதம் பேருக்குக்கூட வேலை கொடுக்க முடியாது, அந்த அளவுக்குத் திறமை குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளில் பயின்று வெளியே வரும் மாணவர்களில் 40 சதவிகிதம் பேர் ஒரு வருடம் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். 2 வருடம் வேலை இல்லாமல் 22 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். 2 வருடம் வேலை இல்லாமல் இருக்கின்ற இந்த 22 சதவிகிதம் பேரில் பாதி பேருக்கு மேலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள். Pratham நிறுவனத்துடைய report சொல்கிறது; வேறு பல ரிப்போர்ட்டுகளும் சொல்கின்றன. Planning Commission-இன் ஆய்வில் இதைச் சொல்லியிருக்கிறார்கள். இது முறையாகப் பண்ண வேண்டும் என்பதுதான். Prahalad அவர்களுடைய inspiration-லே வந்த திட்டம் அது. சுதந்திர இந்தியாவிலே Golden Quadrilateral திட்டத்திற்குப் பிறகு வந்த பெரிய திட்டம், இந்தத் திறன் வளர்ப்புத் திட்டம்தான். இதை நாம் சரியாகப் பயன்படுத்த முடியாமல் பணத்தைத் திருப்பி அனுப்பினோம் என்பது மிகவும் கேவலமான விஷயம்.

வேலைவாய்ப்பு அலுவலகங்கள்—இன்றைக்கு குஜராத்தை பார்த்தீர்கள் என்றால் அது நமது மாநிலத்தில் பாதியளவுதான். அதிலே வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலமாக உருவான வேலைவாய்ப்பு, துறை சார்ந்த வேலைவாய்ப்பு ஒரு இலட்சத்து 37 ஆயிரம் வேலைவாய்ப்பு, கடந்த வருடம் மட்டும். நம் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலம் 39 ஆயிரம்தான் உருவாகி இருக்கிறது. நாம் அந்த proportion-லே பண்ணினோம் என்றால் 2 இலட்சம் பேருக்கு நாம் வேலை கொடுத்திருக்க வேண்டும். வேலைவாய்ப்பு நிறுவனங்கள் career centres-ஆக உருவெடுக்க திறன் வளர்ப்புத் திட்டத்திலே நிதி இருக்கிறது. ஆனால், இதை எடுத்துச் செய்வதற்கு மனம் இல்லை. நேரம் கிடையாது. இந்த உருமாற்றம் போல் 7 கூறுகள் அந்தத் திட்டத்திலே இருக்கின்றன. அந்தத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தினாலே, நமக்குக் கிடைக்கக்கூடிய 1,000 கோடி ரூபாயை கொடுத்தோம் என்றால் நம் இளைஞர் படை நமக்குச் சுமையாக இல்லாமல் சொத்தாக மாறும்.



2011 ஜூன் 7] [திரு. க. பாண்டியராஜன்]

இறுதியாக, என் தொகுதியைச் சார்ந்த சில விஷயங்களைப் பேச விரும்புகிறேன். அரசியல் காரணங்களுக்காகக் கட்டப்படாமல் இருக்கும், மக்களின் உயிரைக் குடித்துக் கொண்டிருக்கும் ஒரு திட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். ராமமூர்த்தி சாலை இரயில்வே மேம்பாலம். பல அரசியல் காரணங்களுக்காக தடைபட்டுக் கிடக்கிறது. 7 உயிர்கள் போய்விட்டன. அந்த மேம்பாலம் கட்டப்பட வேண்டும். பாதாளச் சாக்கடைத் திட்டம் விரைந்து முடிக்கப்பட வேண்டும். மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி விடுதி குடிநீர்த் திட்டம் இவை எல்லாம் முழுமை அடைய வேண்டும். சீர்கெட்டுக் கிடக்கும் சாலைகளைச் செப்பனிட வேண்டும்.

எல்லா எம்.எல்.ஏ.-க்களுக்கும் பொதுவான விஷயம் ஒன்றைப் பேச விரும்புகிறேன். வறுமைக் கோடு பட்டியல் என்பது மிகவும் மோசமாக இருக்கிறது. இன்றைக்கு நலத் திட்டங்கள் நிறைய அறிவித்திருக்கிறீர்கள். 500 ரூபாய் என்பதை 1,000 ரூபாய் ஆக்குவது. எல்லோரும் வந்து M.L.A. Office முன்பு நிற்கிறார்கள். இன்றைக்கு எல்லோரும் வரிசையிலே நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே beneficiaries-ல் 10 சதவிகிதம் பேருக்குக்கூட அந்த லிஸ்ட்டில் இடம் இல்லை இப்போது. அதை மாற்றாமல் நாம் காரியங்களைப் பண்ணினோம் என்றால் மிகப் பெரிய

[திரு. க. பாண்டியராஜன்] [2011 ஜுன் 7

வெறுப்பை நாம் சம்பாதிப்போம். Elected representatives எல்லோருமே மிகப் பெரிய வெறுப்பைச் சம்பாதிப்போம். மத்திய அரசாங்கத்திலே பெரிய குளறுபடி இருக்கிறது. வறுமைக் கோடு என்றால் என்ன என்று அர்ஜுன் சென் குப்தா சொன்னதிலிருந்து, அங்கிருக்கிற மந்திரிகள் சொன்னதிலிருந்து பெரிய குளறுபடிகள் இருப்பது தெரிகிறது, அதை அவசர காலத்திலே நாம் சரி செய்து கொடுத்தால்தான் மக்கள் மத்தியிலே இன்றைக்கு இருக்கிற எதிர்பார்ப்பு கொந்தளிப்பாக மாறாமல் இருக்கும். இந்த 7 திட்டங்களையும் அருள்கூர்ந்து முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுத்தால் எனது விருதுநகர் மக்கள் என்றென்றும் தங்களை நெஞ்சில் வைத்து பூஜிப்பார்கள்.

இங்கு பேச வாய்ப்புக் கொடுத்த எங்கள் இதயதெய்வம் புரட்சிக் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவைத் தலைவருக்கும் நன்றி கூறி, ஆறாத சோறு, கிழியாத ஆடை, ஒழுகாத கூரை இந்த மூன்றும் கிடைப்பதற்கு நலத் திட்டங்களையும், தரமான கல்வி, குன்றாத திறமை, நிலையான வேலை, வளமான வேளாண்மை, அழியாத தொழில் ஆகிய 5 வளர்ச்சித் திட்டங்களையும் அழகாகப் போட்டுக் கொடுத்திருக்கிற இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறி, தாழ்ந்து கிடக்கும் தமிழகத்தை முதலிடத்திற்கு உயர்த்துவதற்கு வாழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 25 நிமிடங்கள் ஒதுக்கியும் எனது வேண்டுகோளை ஏற்று குறைந்த காலத்திற்குள் முடித்த திரு. பாண்டியராஜனுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து பேச வேண்டிய தி.மு.க. உறுப்பினர் அவையில் இல்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள்.

***திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினான்காவது பேரவையின் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கவர்னர் உரை மீதான விவாதத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு



2011 ஜுன் 7] [திரு. நயினார் நாகேந்திரன்]

முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் காணிக்கையாக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

"ஊரிலேன் காணியில்லை, உறவுமற் றொருவரில்லை,
பாரில்நின் பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி,
காரொளி வண்ணனே, கண்ணனே கதறுகின்றேன்,
ஆருளர் களைகணம்மா, அரங்கமா நகருளானே!"

என ஸ்ரீரங்கனின் பெருமைகளைக் கொண்ட ஸ்ரீரங்கம் தொகுதியில் வென்ற பூந்தென்றலே, இலவச அரிசி தந்து, இரட்டை இலைவசம் நாடு கண்ட நாவுக்கரசியே, பார்வை பட்டதும் பட்டமரம் துளிர்க்கும், பசித்த வயிற்றில் பால் சுரக்கும், அருள் நிறைந்தால் மருள் நீங்கும், துன்பம் எத்தனை கோர முகங்கள் கொண்டாலும் அம்மா என்கின்ற தெய்வத்தின்முன் அவை அனைத்தும் தொலைதூரம் தொலைந்துபோகும்.

திருநெல்வேலி மாவட்டம், தண்டையார்குளம் கிராமத்தில் பிறந்த என்னை, திருநெல்வேலி தொகுதியில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, திருநெல்வேலிக்கு வந்து பிரச்சாரம் செய்து என்னை ஜெயிக்க வைத்து, மீண்டும் இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று வாக்களித்த திருநெல்வேலி தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், எனை ஈன்ற தாய், தந்தையருக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையென்று சொன்னால், ஜகத்தினை அழித்திடுவோம்' என்று சொன்னான் பாரதி. 'ஆற்றா மக்கள் அரும்பசி களைவோம், மேட்டு உலகின் மேல்நெறி வாழ்க்கை' என்பது money matters. வானோர் தலைவியாய், மண்ணோர் முதல்வியாய், ஏனோர் உற்ற இடர்களையும் தீர்க்க, தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இதயத்தில் உதித்த திட்டம்தான் அற்புதமான இலவச அரிசித் திட்டம். வயிறார உண்டு, வாயார வாழ்த்திக் கொண்டிருக்கும் ஏழை, எளிய தமிழ்நாட்டு மக்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சபையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

20 கிலோ அரிசியை அம்மா அவர்கள் சென்னையிலே வழங்கினார்கள். தமிழ்நாட்டிலுள்ள எல்லா பகுதிகளிலும் வழங்கினார்கள். எல்லா நியாய விலைக் கடைகளிலும், யாருடைய தடுத்தலும் இன்றி, கடந்த கால ஆட்சிபோலில்லாமல், கவுன்சிலர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் போய் நின்றுகொண்டு, அவர்களுக்குக் கொடு, இவர்களுக்குக் கொடு என்று சொல்லாமல், நியாயமாக டோக்கன் கொடுத்து, அமைதியான முறையில், யாரும் எதிர்பாராத வண்ணம், எல்லா கட்சித் தலைவர்களும் பாராட்டுகின்ற வண்ணம், அற்புதமான முறையில் (மேசையைத் தட்டும் ஒலி) அமைதியான முறையில் இந்தத் திட்டத்தை அமல்படுத்திக் கொடுத்தார்கள்.

இங்கே, எனக்கு முன்னால் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் அவர்கள் பேசினார்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் பேசினார்கள், தே.மு.தி.க. உறுப்பினர் அண்ணன் இராமச்சந்திரன் அவர்கள் பேசினார்கள்—மேலவை கொண்டுவரக் கூடாது, இதற்கு வாய்ப்பே இல்லையா, தொடர்ந்து ஒரு சட்டம் போட முடியாதா என்று பேசினார்கள். அதற்கு அம்மா அவர்களே பதிலளித்துப் பேசினார்கள்—இனிமேல் அதற்கு அவசியமே இல்லை என்று தீர்க்கதரிசனமாகப் பேசினார்கள். அவர்கள் பேசியது மட்டுமல்ல, இந்த கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு அற்புதமான திட்டத்தையும் எடுத்துப் பார்த்தாலும், இனி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பது திட்டவட்டமாக ஒவ்வொரு நிலையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த கால ஆட்சியில் இலவச டி.வி. வழங்கும் திட்டம் கொண்டுவந்தார்கள். ஒரு டி.வி.யின் விலை 2,500 ரூபாய்; இலவசமாகக் கொடுத்தார்கள். அதற்கு கேபிள் டி.வி. கட்டணம் மாதம் 150 ரூபாய் கட்ட வேண்டும். 150 ரூபாய் கேபிள் கட்டணம் கட்டவேண்டும் எனும்போது—ஒரு மாதத்திற்கு 150 ரூபாய்; ஒரு வருடத்திற்கு 1,800 ரூபாய். ஆக, ஒரு டி.வி.யின் விலை 2,500 ரூபாய். ஐந்து வருடங்களுக்குப் பார்த்தால் 9,000 ரூபாய் அந்தக் குடும்பம் கட்ட வேண்டிய சூழ்நிலை. இவையெல்லாம் இல்லாமல் ஆக்கி, அரசு கேபிள் டி.வி. திட்டத்தை அற்புதமான முறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குக் குறைந்த கட்டணத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும்





ஒலி) மக்களுக்குப் பலன் அளிக்கும் திட்டமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை அனைத்துத் தரப்பு மக்களும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு மேலவையைப் பற்றிச் சொன்னார்கள். வெட்டிச் செலவு, விரயச் செலவு விளைவிக்கும் சட்டமன்ற மேலவைக்கு இடமில்லை என்று திட்டவட்டமாக அறிவித்திருப்பதை நல்லோரும், நாட்டோரும், இன்றைக்கு எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-55

அம்மா அவர்களின் கடந்த பொற்கால ஆட்சியில் 12-7-2001 அன்று National Thermal Power Corporation மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் சேர்ந்து வட சென்னை பகுதியில் ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்காக 5,000 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு மிகப் பெரிய திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதேபோன்றுதான், 19-3-2001 அன்று நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனோடு தமிழ்நாடு மின்சார வாரியம் சேர்ந்து ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தித் திட்டத்திற்கு agreement-M.O.U. போட்டார்கள். இரண்டு திட்டங்களையுமே அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசோடு இருந்ததன் விளைவாக, அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்கின்ற காரணத்தினாலே தொடர்ந்து அந்தத் திட்டங்களை நிறுத்தி வைத்தார்கள். அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்த 2,000 மெகாவாட் திட்டங்களை அன்றைக்குக் கொண்டு வந்திருந்தால், இன்றைக்கு தமிழ்நாட்டில் மின்வெட்டே இல்லாத நிலைமை இருந்திருக்கும். அதற்கான திட்டங்களை அன்றைக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சார வாரியம் இன்றைக்கு 48,000 கோடி ரூபாய்க்கு மேலே நட்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம். அம்மா அவர்களுடைய ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் என்ற காரணத்தினால், அந்தத் திட்டங்களைக் கொண்டு வரக்கூடாது என்பதற்காக அன்றைக்கு அவர்கள் செய்திட்டதன் விளைவாகத்தான் இன்றைக்கு மின்வெட்டு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

கடந்த 2001-2006 ஆம் ஆண்டுகளிலே, ஒரு நாள் இதே சபையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்தில் ஒரு நிமிடம் மின்சாரம் போனது. அப்போது வேலூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. சி. ஞானசேகரன் உடனடியாக எழுந்து என்ன, ஏது என்று கேட்டார்கள். ஒரு நிமிடம் current போனதற்கே அன்றைக்கு எழுந்து சட்டமன்ற உறுப்பினர் கேட்டார். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் current இருந்ததா, இல்லையா? எப்பொழுதும் மின்வெட்டுத்தான் இருந்துகொண்டிருந்ததே தவிர, மின்சார வசதி என்பது மக்களுக்கு இல்லாத ஒன்றாக அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்தது. தொலைநோக்குப் பார்வையோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு முந்தைய ஐந்தாண்டு காலமும் அவர்களுடைய ஆட்சியிலே இருந்தார்கள் என்பதை யாரும் இன்றைக்கும் மறந்துவிட முடியாது.

அதுமட்டுமல்ல, அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய தேவைக்கு அதிகமாக மின்சாரத்தை வைத்துக்கொண்டு, அண்டை மாநிலங்களுக்கு அந்த மின்சாரத்தை விற்று வந்தது. ஆனால், இன்றைக்குக் குறுகிய கால அடிப்படையில் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவாகத்தான் இன்றைக்கு மின்சார வாரியம் தொடர்ந்து நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. தற்போது அம்மா அவர்கள் மின்வெட்டைப் போக்குவதற்காக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்ததோடு, மின் திருட்டு, மின் கசிவு, மின் இழப்பு இல்லாமல் வீடுகளுக்கும், தொழில் கூடங்களுக்கும், விவசாயிகளுக்கும் தனித் தனி மின்தாங்கி— feeder-கள்மூலம் இன்றைக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்திருப்பதை அனைவரும், சான்றோரும் வியந்து போற்றிக் கொண்டிருக்கின்றார்கள். சூரிய மின் விளக்கு, தனி மரபுசாரா எரிசக்திக் கொள்கைகளை வகுத்துள்ள ஆட்சிதான் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு +1, +2 படிக்கிற மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக மடிக் கணினி வழங்குவதன்மூலம் எதிர்காலத்தில் மிகப் பெரும் அறிவியல் புரட்சிக்கு இளம் தமிழர் சமுதாயத்தினை ஆயத்தப்படுத்தும் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிதான் இளைய சமுதாயத்தை வலுப்படுத்தும் ஆட்சி.



அதனால் இளைய சமுதாயம் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்றது.

செப்டம்பர் 15 முதல் இலவசமாக மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் ஆகியவற்றை வழங்குவதன்மூலம் தாய்மார்களின் பணிச் சுமையைக் குறைத்து, எதிர்காலம் பற்றிய புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் ஆட்சிதான் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி.

தாய்மார்களின் துன்பத்தைப் போக்க, ஏழையெளிய மக்கள் தங்கம் இல்லாமல் பெண்களின் திருமணம் நடக்குமா என்று ஏங்கிக்கொண்டிருக்கின்ற நிலைமையைப் போக்க திட்டம் கொண்டு வந்தார்கள். தங்கம் என்று சொன்னால் வீட்டிலே பிறக்கக்கூடிய பெண் பிள்ளைகளுக்கு ‘தங்கம்’ என்று வேண்டுமானால் பெயர் வைத்துக்கொள்ளலாமே தவிர, தங்கத்தைக் கடையிலே சென்று விலைக்கு வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த வாரம் ஒரு பிறந்த நாள் விழா நடந்த வீட்டிற்குப் போனேன். போனபோது அந்தப் பிறந்தநாள் வீட்டிலே ஒரு குழந்தைக்குப் பெயர் வைக்கச் சொன்னார்கள். அப்போது பக்கத்திலே நின்றிருந்த பக்கத்து வீட்டுப் பெரியவர் ஒருவர் சொன்னார், ‘தங்கம்’ என்று பெயர் வையுங்கள் என்று சொன்னார். ஆனால், பக்கத்திலே நின்றிருந்த மற்றொருவர் சொன்னார், தங்கத்தைவிட விலைகூடிய இன்னொன்று வந்திருக்கிறது என்று. அது என்ன என்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார், 2ஜி ஸ்பெக்ட்ரம் என்று. 2ஜி ஸ்பெக்ட்ரம் என்று பெயர் வைத்தால் டில்லி திஹார் சிறையிலே போய்தான் குழந்தையைப் பார்க்க வேண்டும்; அதனால் அந்த மாதிரி எல்லாம் பெயர் வைக்கக் கூடாது என்று மற்றொருவர் சொன்னார். இன்றைக்கு ஊழல்கள் நாட்டிலே அந்த அளவுக்குப் பெருத்துப் போயிருக்கிற ஒரு காலச் சூழ்நிலை இருக்கிறது.

தாய்மார்களின் துன்பத்தைப் போக்கி, ஏழையெளிய பெண்களின் திருமணம் தங்கம் இல்லாமல் நடக்குமா என்று ஏங்கியிருந்த காலத்தை இன்றைக்குப் போக்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்தில் பெண் குழந்தை பிறந்தாலே அதைக் கொன்றுவிடக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருந்ததைத் தவிர்த்து, பெண் சிசுக் கொலையைத் தடுத்து, தொட்டில் குழந்தைத் திட்டம் தந்ததுபோல அந்தக் குழந்தைகளைப்

[திரு. நயினார் நாகேந்திரன்] [2011 ஜூன் 7

படிக்க வைத்து, இன்று ஏழைப் பெண்களுக்கு திருமணத்திற்கு 25,000 ரூபாயும், 4 கிராம் தங்கமும், படித்த பட்டதாரிப் பெண்களுக்கு 50,000 ரூபாயும் 4 கிராம் தங்கமும் வழங்கி அவர்களைப் பெற்ற ஏழைத் தாய்மார்கள் வயிற்றில் இன்றைக்குப் பால் வார்த்திருக்கிறார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குத் தமிழ்நாடே அதை வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

"அன்ன சத்திர ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்;
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறி வித்தல்"

என்றான் பாரதி. புனிதமான தொழில் செய்யும் துணை வேந்தர் பதவிகளை கடைச் சரக்காக்கி, வியாபாரமாக்கி, புனிதம் நீக்கிக் கொச்சைப்படுத்தியது தி.மு.க. ஆட்சி. துணை வேந்தர்களையும் அடித்தார்கள், துணை தாசில்தார்களையும் அடித்தார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சட்டம்-ஒழுங்கே இல்லாமல் போனது.

பிற்பகல் 1-00

ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிக்க, பெருமைமிக்க, சிறப்புமிக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க நம் அண்ணா பல்கலைக்கழகம் மீண்டும் வலுவூட்டப்பெற்று, புதிய பொலிவுடன் தமிழகத்தின் கல்வித் தரத்தை உலகத்திற்கே பறைசாற்றும் வண்ணம் அதற்கு சர்வதேசத் தரம் தரப்படும் என்று நாட்டு மக்களுக்கு அறிவித்திருப்பதை, நாட்டு மக்களும், நல்லவர்களும், வல்லவர்களும், கல்வியாளர்களும், அறிவுசார் அறிஞர்களும், அனைத்துத் தரப்பு மாணவ, மாணவியர்களும், ஆசிரியர்களும், பேராசிரியர் பெருந்தகைகளும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

தி.மு.க. ஆட்சியில் அண்ணா பல்கலைக்கழகத்தை திருநெல்வேலி, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய எல்லா இடங்களிலும் ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு பல்கலைக்கழகமும், 12B status இருந்தால்தான் University Grants Commission-ன் நிதியை வாங்க முடியும். பல்கலைக்கழகங்களினுடைய மானியக் குழுவின் நிதியாதாரங்களைப் பெற வேண்டும் என்று சொன்னால் அதற்கு 12B status வேண்டும். ஆனால், தி.மு.க. ஆட்சி காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு 12B status கிடையாது. 12B status இல்லையென்று சொன்னால் நிதியாதாரங்களைக் கொடுக்கமாட்டார்கள். அப்படி நிதியாதாரங்கள் இல்லையென்று சொன்னால், அந்தக் கல்வி நிலையம்மூலம் தரமான கட்டடங்களைக் கட்ட முடியாது; தரமான கருவிகளை அங்கே வாங்க முடியாது; தரமான மாணவர்களை அங்கே உருவாக்க முடியாது. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் 12B status இல்லாத பல்கலைக்கழகங்களைக் கலைத்துவிட்டு மீண்டும் அண்ணா பல்கலைக்கழகத்தின் தரம் உயர்த்தப்படுமென்று சொல்லியிருப்பது இன்று நாட்டு மக்கள் மத்தியில், நல்லோர்கள் மத்தியில் வரவேற்கக்கூடிய ஒரு அம்சமாகக் கருதப்பட்டிருக்கிறது. All India Council of Technical Education ஒப்புதல் பெற்று ஒரு கல்லூரி உருவாக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு 10 ஏக்கர் நிலம் வேண்டும். 50,000 சதுர அடி கட்டடம் வேண்டும். குறைந்தபட்சம் 10 கோடி ரூபாயாவது வேண்டும். திருநெல்வேலிக்கு அண்ணா பல்கலைக்கழகத்தை அறிவித்து, அதற்கு ஒதுக்கியிருக்கிற பணம் வெறும் 50 இலட்சம் ரூபாய்தான். அதுமட்டுமல்ல, திருநெல்வேலியில் பாளையங்கோட்டை பஸ் ஸ்டாண்டு பக்கத்தில் சுந்தரி கம்ப்ளக்ஸ் என்கிற ஒரு இடத்தில்தான் இன்றைக்கு அந்தப் பல்கலைக்கழகம் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய தரம் எப்படி மேம்பட்டு இருக்க முடியும்? அந்தப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்படக்கூடிய மாணவர்கள் எப்படி ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய சிற்பிகளாக படைக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அற்புதமான திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இதையெல்லாம் இன்று நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முதியோர் உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இன்றைக்கு பல பேருடைய குடும்பங்களைப் பார்த்தால் வயது முதிர்ந்தவர்கள் எல்லோரும் அந்தப் பணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளை இல்லாதவர்கள், வயது முதிர்ந்தவர்களுக்கு 500-ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக இதை உயர்த்திக் கொடுத்திருப்பது புரட்சித் தலைவி



2011 ஜூன் 7] [திரு. நயினார் நாகேந்திரன்]

[திரு. நயினார் நாகேந்திரன்] [2011 ஜூன் 7

அம்மாவினுடைய தாயுள்ளத்தைக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாதிரி ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர சேவையை உறுதி செய்திருப்பதுடன், ஒரு தனி குடும்பம் பயனடைவதற்குக் கொண்டுவரப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தை இரத்து செய்து மக்கள் அனைவரும் உண்மையிலே நலம் பெறும் வகையில் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்திருப்பதை இந்த நாடே இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

அண்ணன் ஜெயராமன் அவர்கள் இங்கே பேசும்போது புதிய தலைமைச் செயலகம் கட்டியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது பாண்டிச்சேரி போலீஸ் தொப்பி மாதிரி இருக்கிறது என்றும் சொன்னார்கள். இன்னும் நன்கு சிந்தித்து பார்த்தால் தெரியும், Indian Oil Depot மாதிரி அது இருக்கும். Indian Oil Depot-வைத் பார்த்தீர்கள் என்றால் உருளை வடிவில் இருக்கும். அது டீசல் பிடிக்கத்தான் பயன்படும். அந்தக் கட்டடத்தில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்காக நீதிபதி தலைமையிலே விசாரணைக் கமிஷன் அமைத்திருக்கிறார்கள். கட்டடம் கட்டுவதில் ஊழல்கள் நடந்திருக்கின்றன. அவசர அவசரமாகக் கட்டி முடிக்கப்பட்ட தலைமைச் செயலகமாக அது உள்ளது. ஒரு பத்திரிகையில்கூட அதுபற்றி எழுதியிருந்தார்கள். அந்தப் பத்திரிகையில் என்ன எழுதியிருந்தார்கள் என்றால், அதில் உள்ள dome எல்லாம் சினிமாத் துறையைச் சார்ந்த தோட்டாதரணியைக் கொண்டு வந்து set போட்டு, அது பாதியிலேயே அப்படியே மாடியிலே இருக்கிறது என்று சொன்னார்கள். திறப்பு விழாவிற்கு பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களையும், திருமதி சோனியா காந்தி அவர்களையும் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்கள் கூப்பிட்டிருக்கிறார்கள். அவர்களும் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் இரண்டுபேரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அங்கு எல்லாமே பாதி dupe-ல் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் இரண்டு பேரும் போகவில்லையென்று சொன்னால், மன்மோகன் சிங் மாதிரியும், சோனியா காந்தி மாதிரியும் dupe போட்டு இரண்டு பேரையும் வைத்து திறக்க வைத்து விடுவார்கள் என்று. அப்படிப்பட்ட மோசமான ஆட்கள் அவர்கள். ஆகவே, அங்கு நாம் போய்விட்டு



2011 ஜூன் 7] [திரு. நயினார் நாகேந்திரன்]

வந்துவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களும், அவசர அவசரமாக அந்த விழாவில் கலந்துவிட்டு வந்ததாக பத்திரிகையில், துக்ளக் பத்திரிகையில் படித்ததாக எனக்கு ஞாபகம்.

சமச்சீர் கல்வியைப் பற்றியெல்லாம் பேசி, விவாதத்தை முடித்திருக்கிறார்கள். இந்த சமச்சீர் கல்வி என்பது ஒரு சாமச்சீர் கல்வி. சாமம் என்றால் ராத்திரி. ராத்திரி நேரத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்காக இந்த சமச்சீர் கல்வியைக் கொண்டுவந்து, இன்று விவாதம் எல்லாம் முடிவடைந்திருக்கிறது.

கடந்த ஆட்சியின் ஊழல் மிகக் கொடுமையானது, கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்திற்கு மணல் கடத்தலும் மிகப் பெரிய காரணம். மணல் கடத்தல், சிமெண்ட் விலை உயர்வு என்பன இதற்கு காரணங்கள் ஆகும். 75,000 ரூபாய்க்கு ஒரு வீடு கட்டுவது என்றால் எப்படிக் கட்ட முடியும்? இந்த 75,000 ரூபாய்க்கு வீடு கட்டும் ஒரு திட்டத்தை அறிவித்து, அதற்காக மக்களுக்குப் பணத்தைக் கொடுத்தது என்பது, உள்ள கண்ணையும் நொள்ளைக் கண்ணாக மாற்றியதுபோல் உள்ளது. அவர்கள் ஒழுங்காக வாடகை வீட்டில் இருந்திருப்பார்கள். இவர்கள் 75,000 ரூபாய் கொடுத்து அந்தப் பணத்தில் அவர்கள் வீட்டைக் கட்ட முடியாமல், கந்து வட்டிக்கு மேலும் பணத்தை வாங்கி அந்தக் குடும்பங்கள் எல்லாம் இன்றைக்கு தெருவுக்கு வந்து சீரழிந்து இருக்கின்றன என்ற அளவுக்கு, அவர்களின் நிலைமை மோசமாக இருப்பதை அம்மா அவர்கள் கண்டு, அதற்காக அம்மா அவர்கள் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

இன்றைக்கு 3 இலட்சம் ரூபாயில் 300 சதுர அடியில் சூரிய ஒளி மின் திட்டத்தோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி, அற்புதமான நவீன வீட்டைக் கட்டுவதற்கு அம்மா அவர்கள் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள்.

மின்வெட்டே இல்லாமல் இருப்பதற்கு அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ள நடைமுறைத் திட்டங்களை நாட்டு மக்கள், நல்லோர்கள், அறிஞர்கள் அத்தனை பேரும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்திருப்பது இன்னும் பாராட்டுக்குரியது. அதை எல்லோரும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

8 x 12 இன்ச் அளவுடைய, 60 மைக்ரான் தடிமனுள்ள மறு சுழற்சி பிளாஸ்டிக் பைகள் அறவே தடை செய்யப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதை இதிலிருந்தே நாம் தெரிந்துகொள்ளலாம். இம்முயற்சியை எல்லோரும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேமாதிரி 111 கிலோ மீட்டர் தூரம் சென்னையைச் சுற்றியுள்ள எல்லா பகுதிகளுக்கும் மோனோ இரயில் திட்டமாக, எல்லோருக்கும் பயன்படுகின்ற வகையில் தயாரித்து, மேலும் அதை கோவை, மதுரை மாநகரங்களுக்கு விரிவுபடுத்த இருப்பது இன்னும் பாராட்டத் தகுந்த வரவேற்கத் தகுந்த அம்சமாகும்.

அடுத்து, இலங்கைத் தமிழர்கள், மீனவர்கள் பிரச்சினை. இதுவரையிலும் 500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எண்ணிக்கை இல்லாதளவிற்கு, காணாமல் போனவர்கள் எத்தனையோ பேர். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசு, எதையும் கண்டுகொள்ளவில்லை. அம்மா அவர்கள் அவ்வப்பொழுது மீனவர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள். கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்கள் மத்திய அரசுக்கு. ஆனால், எதையும் கண்டுகொள்ளாத திராவிட முன்னேற்றக் கழக அரசில் முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு, தான் வாழ வேண்டும், தன்னுடைய பிள்ளைகள் வாழ வேண்டும், தன்னுடைய குடும்பம் வாழ வேண்டும் என்பதற்காக அவர்கள் ஒரு மைனாரிட்டி அரசாங்கமாக இருந்துகொண்டு 5 ஆண்டுக்காலம் ஆட்சி நடத்தினார்கள் என்பதுதான் உண்மை.

அம்மா அவர்கள் இங்கு குறிப்பிட்டுப் பேசியதுபோல திரு. கருணாநிதி-முதலமைச்சர், திரு. ஸ்டாலின்-துணை முதலமைச்சர், கனிமொழி-நாடாளுமன்ற உறுப்பினர், மு.க. அழகிரி-மத்திய அமைச்சர்—அழகிரியைப்பற்றிப் பேசினால் இன்னும் நிறைய பேசலாம். திருமங்கலம் ஃபார்முலாவாம். பணம் கொடுத்து மக்களை எல்லாம் விலைக்கு வாங்கி ஓட்டைச் சேர்த்துவிடலாம் என்று எல்லோரும் நினைத்தார்கள். அதுமட்டுமல்ல, நாங்கள் 5 இடைத் தேர்தல்களைச் சந்தித்தோம். மதுரை மத்திய, மேற்கு, திருமங்கலம் ஆகிய இடைத் தேர்தல்களில் எல்லாம் ஆளை வைத்து அடித்தார்கள்.





ஒரு நாட்டின் முதலமைச்சராக இருக்கக்கூடியவருடைய மகன், மு.க. அழகிரி, மத்திய அமைச்சர். காவல் நிலையத்தின் உள்ளே புகுந்து கராத்தே சிவா என்கிற ரவுடி, அண்ணா தி.மு.க. வேட்டி கட்டியவர்களை அங்கே வந்து உள்ளே புகுந்து அடித்தார்கள். “தயவு செய்து விட்டுவிடுங்கள், செத்துப் போய்விடப் போகிறார்” என்று அங்குள்ள ஏட்டையா காலைப் பிடித்து கெஞ்சுகிறார். இதுவே, அம்மாவினுடைய ஆட்சியாக இருந்தால் ஏதாவது ஒரு இடத்தில் அத்தகைய ஒரு சம்பவம் நடைபெறுமா? சட்டம்-ஒழுங்கு எங்கேயிருந்தது அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்?

சட்டம் படிக்கின்ற கல்லூரியில் மாணவர்கள் அடித்துத் தாக்கப்படுகிறார்கள். கீழே விழுந்து கிடக்கிறான், அவன் தலையிலே கட்டையை வைத்து அடிக்கிறார்கள். அதைப் பார்த்துக்கொண்டு காவல் துறையினர் செல்ஃபோனிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, குற்றுயிரும், குலையுயிருமாகத் தொங்கிக் கிடக்கிறான். ஒரு மரக் கிளையைப் பிடித்து எழுந்திருக்கிறான். அதுகூட முடியாமல் திரும்ப கீழே விழுகிறான். அதற்குப் பிறகும் அடிக்கிறார்கள். இதுதான் கடந்த 5 ஆண்டுகால சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை. அதுமட்டுமல்ல, நீதிமன்ற வளாகத்திற்குள் வழக்கறிஞர்கள் தகராறில் அங்கே காவல் துறை அத்துமீறி அடிக்கிறது. நீதிபதிகளே வெளியே வருகிறார்கள். நீதிபதியையும் அடிக்கிறார்கள். நீதிபதி, ‘நான் நீதிபதியப்பா’ என்று சொல்கிறார். உடனே பக்கத்தில் போலீஸ்காரர் சொல்கிறார், ‘ஏம்பா நீதிபதி என்று தெரிந்து ஏனப்பா அடிக்கிறாய்’ என்கிறார். ‘இந்தச் சமயத்தில் அடித்தால்தான் அடிக்க முடியும், அப்புறம் அடிக்க முடியாது’ என்கிற அளவுக்கு காவல் துறை மிக மோசமான, கட்டுக்கடங்காத சூழ்நிலையில் இருந்தது. அம்மா அவர்களுடைய ஆட்சியாக இருந்தால் எந்தப் பகுதியிலாவது இந்த மாதிரி ஒரு சம்பவம் நடைபெறுமா?

இன்றைக்கு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று எத்தனை நாட்கள் ஆகிவிட்டன. சட்டம்-ஒழுங்கு எங்கேயாவது, ஏதாவது பிரச்சினை ஏற்படுகிறதா? எங்கேயும் ஒரு பிரச்சினை கிடையாது. நாட்டிலே இன்றைக்கு களவு செய்கிறவன் யாருமே இங்கே இல்லை. எல்லோரும் அண்டை மாநிலத்திற்கு ஓடிப் போய்விட்டார்கள். மதுரையில் இப்போது யாருமே குடியிருப்பதாகத் தெரியவில்லை. நிறைய பேர் விசா வாங்கிக் கொண்டு வெளியூர் போய்விட்டார்கள். அதையெல்லாம்

[திரு. நயினார் நாகேந்திரன்] [2011 ஜூன் 7

அம்மாவிடம் தனியாக எழுதிக் கொடுக்கிறேன். ஏனென்றால், சபையில் அதைப் பேசுவது நாகரிகமாக இருக்காது.

யார் யார், என்னென்ன செய்தார்கள் என்பதை அம்மா அவர்களிடம் எழுதிக் கொடுத்து யாராக இருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தின்முன் அனைவரும் சமம். ஆக, அனைவரும் சமம் என்ற முறையில் யாராக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டினுடைய ஏகோபித்த தலைவியாக, இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும் நீடிக்கக்கூடியவர். தொலைநோக்குப் பார்வையோடு அம்மா அவர்கள் 2025 ஆம் ஆண்டு வரை திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். 2025 ஆம் ஆண்டு மட்டுமல்ல, இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும் இனி தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யாரும் இருக்கமுடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-10*

அந்த அளவிற்கு மக்கள் இன்றைக்கு புரிந்துகொண்டுவிட்டார்கள். அதை யாராலும் மறுக்கமுடியாது. நடுநிலையாளர்கள், பத்திரிகையாளர்கள், ஏன், இன்றைக்கு தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் பாதி பேர்கள்கூட அம்மா ஆட்சிதான் வரவேண்டும் என்று சொல்லும் காலம். அந்த அளவிற்கு அம்மாவினுடைய ஆட்சி நேர்மையான ஆட்சி என்பதை 2001-லிருந்து 2006 வரையிலும், 1991-லிருந்து 1996 வரையிலும் அம்மாவினுடைய ஆட்சிக் காலம்தான் தமிழ்நாட்டினுடைய பொற்காலமாக இருந்தது. ஆனால், எப்பொழுதெல்லாம் தி.மு.க. ஆட்சி வருகிறதோ, அப்பொழுதெல்லாம் மேலவையைக் கொண்டுவர முயற்சி எடுக்கிறார்கள் என்று கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் சொன்னார்கள். இனி எப்பொழுதுமே தி.மு.க. ஆட்சி வராது. இனி அதற்கு வாய்ப்பும், வழியும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 50 கோடி ரூபாயை முதலீடு செய்து, அதை நுகர்பொருள் நியாய விலைக் கடைகளில் விலை உயரும்போதெல்லாம், அதிகப்படியாகக் கொள்முதல் செய்து அந்த



2011 ஜூன் 7] [திரு. நயினார் நாகேந்திரன்]

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிகப் பெரிய புரட்சியை அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திருநெல்வேலி தொகுதியைப் பொறுத்தமட்டிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அங்கு பிரச்சாரம் செய்தார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் பல ஜாதிப் பிரச்சினைகள் இருந்தாலும், ஜாதி மோதல்கள் இருந்தபோதிலும் இப்பொழுது அம்மா அவர்கள் வந்து போன பிறகு, எல்லா இன மக்களும், எல்லா ஜாதி மக்களும் ஒரே அணியில் இருந்து ஓட்டு போட்ட ஒரு தேர்தல் உண்டென்று சொன்னால், அது இந்தத் தடவை நடந்த தேர்தல்தான் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல, மானூர் ஒன்றியத்தில், இன்றைக்கு தேவேந்திர இன மக்கள், தேவர் இன மக்கள் எல்லோரும் அதிகப்படியாக வாழ்கின்ற பகுதியில், அது வானம் பார்த்த பூமியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் அம்மா அவர்கள் வருகின்றபோது எல்லோரும் முறையிட்டார்கள். அங்கு பள்ளமடை என்கின்ற ஒரு குளம் இருக்கிறது. அந்தப் பள்ளமடை குளத்திற்குக் கால்வாய் வெட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் பள்ளமடை, மானூர், குப்பனாபுரம், பல்லிகோட்டை, ராஜா வீதி, கங்கைகொண்டான் வரையுள்ள மக்கள் பயன்பெறுவார்கள். வறண்ட பகுதியாக இருக்கின்ற மானூர் பகுதியில் ஒரு கலைக் கல்லூரி அமைக்கவும், மானூரைத் தாலுகா தலைநகரமாக மாற்றுவதற்கும், ஒரு சார்பதிவாளர் அலுவலகம் அங்கே ஏற்படுத்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்பதை அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வைத்து, பேசுவதற்கு இந்த வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள்.

[2011 ஜூன் 7

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன் முறையாக இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்வு செய்த சிதம்பரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியையும், பாராட்டுகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோன்று தமிழகத்தில் பணநாயகத்தை முறியடித்து, ஜனநாயகத்தை நிலைநாட்டி *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய, தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினையும், பாராட்டுகளையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெற்ற தேர்தலில் தமிழகத்திலே ஒரு அமைதிப் புரட்சிக்குத் தலைமை தாங்கி, தமிழகத்தில் நடைபெற்ற ஊழல், கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்தி, மகத்தான மக்கள் ஆதரவோடு மூன்றாவது முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுக்கடுக்கான ஊழல், மாநிலத்திலும், மாவட்டங்களிலும் கோலோச்சிய குடும்ப ஆட்சி, வரலாறு காணாத விலைவாசி உயர்வு, கடுமையான மின்வெட்டு, விவசாயத் துறை சீரழிவு, சிறு தொழில்கள் நசிவு, சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, மத்திய, மாநில அரசுகளின் நாசகர பொருளாதாரக் கொள்கை போன்ற பிரச்சினைகளால் நலிவுற்ற தமிழ் மக்கள், தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியை நிர்மூலமாக்கியுள்ளார்கள் என்பது தெளிவு.

அதுமட்டுமல்லாமல் திருமங்கலம் ஃபார்முலா வெற்றி பெறும் என்பதை தமிழக மக்கள் தவிடுபொடியாக்கியுள்ளார்கள் என்பதையும் இங்கே நான் நினைவுகூர விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்கள் தீர்ப்புக்குத் தலை வணங்கி, தங்களை சுய பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்வதே ஜனநாயகப் பண்பாடு. ஆனால், இதற்கு நேர்மாறாக தி.மு.க. தலைவர்கள், 'மக்கள்



2011 ஜூன் 7] [திரு. க. பாலகிருஷ்ணன்]

தோற்றுவிட்டார்கள், மக்கள் ஏமாந்துவிட்டார்கள்' எனத் தமிழக மக்களையே கேவலப்படுத்துவது ஒரு நாணயமற்ற, அரசியல் நேர்மையற்ற செயலாகும் என்பதைச் சுட்டிக்காட்டுகிற அதே நேரத்தில், இவர்கள் இப்போது மட்டுமல்ல, எப்போதும் திருந்தவே மாட்டார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வரலாறு காணாத வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள புதிய ஆட்சியின் கொள்கைத் திட்டங்களைக் கொண்டுள்ள மேதகு ஆளுநர் உரையை வரவேற்கிறேன், பாராட்டுகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இன்றைக்கு வெள்ளையர் ஆட்சிக் காலம் துவங்கி வரலாற்றில் முதல் முறையாக மேட்டூர் அணையை, ஜூன் மாதம் 12 ஆம் தேதி என்பதற்கு மாறாக *(மேசையைத் தட்டும் ஒலி)* 6 ஆம் தேதியே திறந்து, டெல்டா மாவட்ட விவசாயிகளுடைய வாழ்வுக்கு வழிவகுத்திருக்கிற முதலமைச்சருக்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், நம்முடைய காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புப் பிரச்சினை இன்றைக்கும் உச்ச நீதிமன்றத்திலே நிலுவையிலே இருந்துகொண்டிருக்கிறது. நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பை நாம் பெற்ற பிறகும்கூட, கடந்த ஆட்சி அந்தத் தீர்ப்பினை அமலாக்குவதற்கு வக்கில்லாத ஆட்சியாக இருந்தது. உச்ச நீதிமன்றத்திலே ஒரு மனுவைப் போட்டுவிட்டு அந்த மனுவைத் திரும்பிப் பார்க்கிற காரியத்தைக்கூட அவர்கள் செய்யவில்லை. எனவே, தமிழக அரசை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த நடுவர் மன்றத் தீர்ப்பின்மீது உச்ச நீதிமன்றத்திலே முறையாக வாதாடி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு, முதலாவதாக எடுக்கவேண்டிய நடவடிக்கை, அதனை மத்திய அரசிதழில் வெளியிடச்

செய்யவேண்டும். It has to be notified in the Central Gazette. அதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசிதழில் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டவுடனேயே அது கர்நாடக அரசுக்கு ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும். It will become binding on the Government of Karnataka to implement this order. எனவே, அதற்கான நடவடிக்கைகளை வேண்டுமென்றே இதற்கு முன்பிருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு மேற்கொள்ளவில்லை. நம்முடைய அரசு உடனடியாக அந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்ற அன்றே தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், நாட்டிலேயே முதல் முறையாக குடும்பத்திற்கு 20 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் உள்ளிட்ட (மேசையைத் தட்டும் ஒலி) 7 திட்டங்களை அமலாக்கியிருப்பது ஒரு நல்ல தொடக்கம் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமின்றி, அரசு விழாக்கள் ஆடம்பர விழாக்கள் என்பதை மாற்றி, அரசு விழாக்கள் எளிய முறையிலே நடக்கும் என்று அறிவித்திருப்பதையும் நான் இந்த நேரத்திலே வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், முதியோர் ஓய்வூதியப் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் நிவாரணத் தொகை வழங்குவது, அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரி, மாணவ மாணவியருக்கு இலவச மடிக் கணினி வழங்குவது, கடைக்கோடியிலுள்ள கேபிள் இயக்குநர்கள் பாதிக்கப்படாமல் தனியார் கேபிள் டி.வி. கொள்ளையைத் தடுக்க அரசுடைமை ஆக்குவது, அனைத்து கிராமங்களுக்கும் தார்ச் சாலை, செப்டம்பர் 15 முதல் மகளிருக்கு மின் விசிறி, கிரைண்டர், மிக்சி வழங்குவது போன்ற பல திட்டங்களை அறிவித்திருப்பது பாராட்டுக்குரியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)





அனைத்திற்கும் மேலாக, தான் தந்திருக்கிற தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் 1½ ஆண்டுகளுக்குள்ளேயே நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) முன் எப்போதும் இல்லாத சிறப்புவாய்ந்த சாதனையாகும்.

இவ்வாறு ஏழையெளிய மக்களுக்குப் பயன் தரக்கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதேநேரத்தில், இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் வளர்ச்சித் திட்டங்களுக்கும், கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் அதே முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பது இந்த அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு எடுத்துக்காட்டாகும் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, கடந்த ஆட்சியில் ஏற்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள், கோளாறுகள், குறைபாடுகள் அனைத்தையும் சரிப்படுத்தி, ஒரு நிமிர்ந்த செங்கோல் ஆட்சியை நடத்த வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு இந்த அரசுக்கு இருப்பதை இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆட்சியில் காவல் துறை, ஆளுங்கட்சியினரின் கைப்பாவையாக மாறிவிட்டது. "'இம்' என்றால் வன வாசம், 'ஏன்' என்றால் சிறைவாசம்" என்பதே தமிழகத்தின் நியதியாக இருந்தது. சமூக விரோதிகள், ரௌடிகளின் அட்டகாசம் ஆளுங்கட்சியினரின் துணையோடு கொடிகட்டிப் பறந்தது. தி.மு.க. தலைவரின் சொந்த மாவட்டமான திருவாரூரில் C.P.M. கட்சியினுடைய தலைவர் தோழர் நாவளன் உயிருக்கு ஆபத்து என காவல் துறையிலே பாதுகாப்பு கேட்டு பலமுறை மனு கொடுத்த பிறகும் பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அவர் மனு கொடுத்த அடுத்த ஒரு வார காலத்திலே படுகொலை செய்யப்பட்டார் என்பது மிக மோசமான செயல் என்பது அறிந்த ஒன்று. அவ்வாறு படுகொலையிலே குற்றம் சாட்டப்பட்டிருக்கிற தி.மு.க. நகரச் செயலாளர் பல கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்; 50-க்கும் மேற்பட்ட வழக்குகளிலே அவர் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறவர். இவர்தான் தி.மு.க-வினுடைய பேரளம் நகரச் செயலாளர் என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி எப்படிப்பட்டவர்களைக் கொண்ட கட்சி என்பதை இதற்கு மேல் விளக்க வேண்டிய அவசியம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2011 ஜூன் 7

*பிற்பகல் 1-20*

நாமக்கல் பள்ளிப்பாளையத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த தோழர் வேலுச்சாமி கந்துவட்டிக் கொடுமையை எதிர்த்துப் போராடி, அதனால் தன்னுடைய உயிருக்கு ஆபத்து என காவல் நிலையத்திலே புகார் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்புகிற அடுத்த அரை மணி நேரத்திலேயே வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்றால், காவல் துறைக்கும் சமூக விரோதிகளுக்கும் எப்படி ஒரு இணைந்த செயல்பாடு இருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். இதற்கு மேலே வேறு சம்பவங்கள் தேவையில்லை. எனவே, இந்த ஆட்சி, காவல் துறையை ஒழுங்குபடுத்தி, சட்டம்-ஒழுங்கை நேர்மைப்படுத்தி அதை ஒரு முன்னுரிமைப் பணியாக நிறைவேற்றுவோம் என அறிவித்திருப்பதை இந்த நேரத்திலே நெஞ்சார்ந்து பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிற ஒரு செய்தி. முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிற அவர்கள், வேலூரிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சிலர் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட செய்தி தெரிந்தவுடன் அவர்களைக் கட்சியைவிட்டு நீக்கியது மட்டுமல்ல, அவர்களைக் கைது செய்து சிறையிலே அடைத்ததன்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு இந்த அரசு செயல்படும் என்பதை நிரூபித்த மாண்புமிகு தமிழக முதல்வரை இந்த நேரத்திலே பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அணுகுமுறை தொடர்ந்து நீடிக்கவேண்டும். கட்சி மாச்சரியத்திற்கு அப்பாற்பட்டு சமூக விரோதிகள்மீது நடவடிக்கை மேற்கொண்டால் மட்டுமே தமிழகத்திலே அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட முடியும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதையெல்லாம் நிறைவேற்றுகிற அதே நேரத்தில் காவல் துறை கடிவாளமில்லாத துறையாக அமைந்துவிடக்கூடாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுகூட மதுரை காவல் நிலையத்தில் ஒருவர் மரணமடைந்திருக்கிற செய்தி நமக்கு அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது.



2011 ஜூன் 7] [திரு. க. பாலகிருஷ்ணன்]

கடந்த ஆட்சியில் சட்ட விரோதமாக பறிக்கப்பட்ட பலருடைய சொத்துகள் மீட்கப்பட்டு, உரிய நபருக்கு வழங்க புதிய சட்டம் இயற்றப்படும் என்பதை அறிவித்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது.

2G Spectrum ஊழல் புகழ், கைதாகியிருக்கிற ஆண்டிமுத்து ராசா, அவரது குடும்பத்தினர் Green House Promoters என்கிற நிறுவனத்தை வைத்துக்கொண்டு அந்தப் பகுதியிலே ஏழை தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களின் நிலங்களையெல்லாம் அடிமாட்டு விலைக்கு வாங்கி பல கோடி ரூபாய் சம்பாதித்திருக்கிறார்கள். இதேபோன்று மதுரை திருமங்கலம் பகுதியிலே தயா இன்ஜினியரிங் கல்லூரிக்கும் ஏராளமான நிலங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. எனவே, தமிழகத்தினுடைய பல மாவட்டங்களில் அன்றைய ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் இவ்வாறு நிலங்களை வாங்கிக் குவிப்பது, சொத்துகளை வாங்கிக் குவிப்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மீட்டு சம்பந்தப்பட்ட மக்களிடம் ஒப்படைக்கிற நடவடிக்கையை உறுதியாக இந்த அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனிம வளக் கொள்ளை, மணல் கொள்ளை என்பது கடந்த ஆட்சியினுடைய சாதனையாகச் சொல்லும் அளவிற்கு நடந்துகொண்டிருந்தது. எனவே, கனிம வளத் துறையிலே வழங்கப்பட்டு இருக்கிற அந்த டெண்டர்களையெல்லாம் இரத்து செய்து, அரசுக்கு வருமானம் அளிக்காமல் தனியார் மட்டுமே கொள்ளை அடிக்கிற, அதற்கு வழிவகை செய்கிற கனிம வள டெண்டர்களை இரத்து செய்து முறையான புதிய டெண்டர்களை விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வரலாறு காணாத விலைவாசி உயர்வால் வெந்து மடியும் ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழ்வது, பொது விநியோகத் துறை. எனவே, இந்தத் துறையை ஒழுங்குபடுத்தவும், விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் ஒரு முயற்சியாக ‘விலைக் கட்டுப்பாட்டு நிதி’ ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால், மத்திய அரசு விலைவாசி உயர்வைத் தொடர்ந்து உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பெட்ரோல், டீசல் விலை உயர்வு, டீசல் விலை கட்டுப்பாட்டுக்குத் தளர்வு, ஆன்லைன் வர்த்தகத்தை அனுமதிப்பது, சிறு வர்த்தகத்தில்

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2011 ஜூன் 7

வால் மார்ட் போன்ற அந்நிய பகாசுர கம்பெனிகளுக்கு அனுமதி அளிப்பது உள்ளிட்ட மக்கள் விரோதக் கொள்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. எனவே, தமிழக மக்களை விலை உயர்வுக் கொடுமைகளிலிருந்து பாதுகாத்திட வேண்டுமென்றால், மத்திய அரசின் மோசமான நடவடிக்கைகளை எதிர்த்து தமிழக அரசு தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதுமட்டுமல்ல, மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுடைய விலைகளை உயர்த்துவதையும், ஒதுக்கீடுகளை வெட்டிக் குறைப்பதையும் மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. எனவே, இதற்கு இடமளிக்காமல் உறுதியாக நமக்குரிய அந்த ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மின்வெட்டு என்பது, தமிழகமே இருண்டு போகிற அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய மின்வெட்டைப் போக்குவதற்கு ஆயிரம் மெகாவாட் கூடுதல் மின்சாரத்தைத் தமிழகத்திற்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டிருப்பதை (மேசையைத் தட்டும் ஒலி) வரவேற்கிற அதேநேரத்தில், அதை மத்திய அரசு வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பொது விநியோகத் திட்டத்தில் நடைபெறுகிற ஊழல், முறைகேடுகள், கடத்தல் இவற்றைத் தடுத்திட உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். போலி கார்டுகளைப் பறிமுதல் செய்ய வேண்டும். அதேசமயம் நீண்டகாலமாக குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் அவதிப்படும் பல இலட்சம் குடும்பங்களுக்கு உடனடியாக புதிய அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கடந்த ஆட்சியில் தவறான நடவடிக்கைகளால் முதன்மைத் துறையான வேளாண் துறை மரணப் படுக்கையிலே கிடத்தப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தி வீழ்ச்சி, உற்பத்தித் திறனில் தேக்கம் என்கிற நிலையுள்ளது. இதனால் மக்கள் தொகையில் பெரும்பான்மையான மக்களுக்கு வாழ்வாதாரமாகத் திகழும்



2011 ஜூன் 7] [திரு. க. பாலகிருஷ்ணன்]

விவசாயத் துறையில் ஏற்பட்ட நெருக்கடி, ஒட்டுமொத்த தமிழக நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாகத் திகழ்கிறது. கடந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் 3 ஆயிரம் விவசாயிகள் தற்கொலையில் மரணமடைந்துள்ளதாக National Crimes Record Bureau என்கிற மத்திய அரசு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இத்தற்கொலைகள் குறித்து விசாரித்து வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் இலாபகரமான தொழிலாக இல்லை. விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காதது; இடுபொருட்களுடைய விலை பன்மடங்கு உயர்ந்திருப்பது; பாசன உத்தரவாதம் இல்லாதது; போதிய கடன் வசதி இல்லாதது; இயற்கை இடர்ப்பாடுகளால் விவசாயம் அழிவு; பயிர் இன்சூரன்ஸ் திட்டம் அமல்படுத்தாதது போன்றவையே விவசாய வளர்ச்சிக்கு தடைக் கற்களாக அமைந்துள்ளன. எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் சிபாரிசுகளை மத்திய மாநில அரசுகள் கடந்த காலங்களிலே அமலாக்கவில்லை. இவற்றையெல்லாம் நிறைவேற்றிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாய நிலங்கள் கட்டுப்பாடின்றி பிளாட்டுகளாக, குடியிருப்புப் பகுதிகளாக விவசாயம் அல்லாத பணிகளுக்கு மாற்றப்படுகின்றன. சாகுபடி பரப்பளவு வேகமாகக் குறைந்து எதிர்காலத்தில் மாநிலத்தின் உணவுத் தேவைக்குப் பெரும் சவால் ஏற்படும் என்கிற நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாய நிலங்கள் விவசாயம் அல்லாத பணிகளுக்கு மாற்றப்படுவதை தடை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கரும்பு, நெல் உள்ளிட்ட விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு, கரும்பு டன்னுக்கு 3 ஆயிரம் ரூபாயும், நெல்லுக்கு 1,500 ரூபாய் என்றும் அறிவிக்கின்ற நடவடிக்கையை மேற்கொள்வதோடு கொள்முதலை விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு மற்றும் அரசுடைமை வங்கிகளில் ஏழை, நடுத்தர விவசாயிகள் அனைவருக்கும் முன்னுரிமை அடிப்படையிலே கடன் வழங்குவதை உத்தரவாதம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பல இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு NREGA திட்டம் அமலாக்கம், விலைவாசிக்கேற்ற கூலி உயர்வு, விவசாயத் தொழிலாளர்களுக்கான

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2011 ஜூன் 7

சமூகப் பாதுகாப்பு திட்டங்களை இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்டவற்றையெல்லாம் உள்ளடக்கியதாக ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுள்ள "பண்ணைசார் சிறப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நில உச்சவரம்பு சட்டம் என்பது தமிழகத்திலே கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தவருடைய சொந்த மாவட்டமான திண்டுக்கல் மாவட்டத்திலேயே 5 ஆயிரம் ஏக்கர் உச்சவரம்பு நிலத்தில் ஏழை விவசாயிகளுக்கு 513 ஏக்கர் வழங்கப்பட வேண்டுமென்று ஆணை வெளியிட்ட பிறகும்கூட அது வழங்கப்படாமல் கிடப்பிலே போடப்பட்ட நிலைமை உள்ளது.

அதேபோன்று, இலவச நிலம் வழங்கும் திட்டம் என்ற ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு அதிலே ஏராளமான ஊழல் முறைகேடுகள் கடந்த ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது. இவற்றையெல்லாம் இந்த அரசு களைய வேண்டும். நில உச்சவரம்பு சட்டத்தை முறையாக அமலாக்குவதற்கும் நிலமற்ற ஏழைகளுக்குத் தரிசு நிலங்களை வழங்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் இருந்த தரிசு நிலங்களெல்லாம் ஏழையெளிய விவசாயிகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலும் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்திலும் வழங்கப்பட்டுவிட்டன. மேலும் வழங்குவதற்கு தரிசு நிலங்கள் இல்லை. இதை 2006 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தபோதே "மக்களை ஏமாற்றுகிறார், ஏழை மக்களுக்கு வழங்குவதற்கு தரிசு நிலங்கள் இனி தமிழ்நாட்டில் இல்லை" என்று அப்போதே சுட்டிக்காட்டினேன். அதையேதான் இப்பொழுதும் நான் தெளிவுப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஜூன் 7]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிற அதேநேரத்தில் இன்றைக்கு பல வசதிபடைத்தவர்களிடம் இருக்கிற தரிசு நிலங்களை மீட்டால் கொஞ்சம் பேருக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அகில இந்தியா முழுவதும் ஆதிவாசி மக்களுக்கு நிலம் வழங்குகிற வன உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால், கடந்த ஆட்சியில் தமிழகத்தில் ஒரு ஆதிவாசிக்குக்கூட வனச் சட்டத்தின்கீழ் நிலம் வழங்கப்படவில்லை.

கோயில் நில சாகுபடியாளர்கள், குடியிருப்போர் போன்றோரின் நிலம் தொடர்பான பிரச்சினைகளும் தீர்க்கப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருகிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் புறம்போக்கில் வாழ்பவர்கள் 25 இலட்சம் பேருக்கும் மேலே இருக்கிறார்கள். வீட்டுமனை இல்லாமல் ஒரே வீட்டிலே பல குடும்பங்கள் அடைந்து கிடக்கும் அவல நிலை நீடிக்கிறது. இன்றைக்கு வீடில்லாத மக்களுக்கு "பசுமை வீடு" கட்டித் தருகிற ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிற இந்த அரசு அதற்கு அடிப்படையாக இருக்கிற அனைவருக்கும் வீட்டுமனை வழங்குகிற திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிற்சாலைகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சிப்காட் நிறுவனங்களுக்கு நிலம் கையகப்படுத்துவது எண்ணற்ற பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது. பரங்கிப்பேட்டை, நாகை, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களிலே விவசாயிகளுடைய நிலங்களெல்லாம் அடிமாட்டு விலைக்கு இப்படிப்பட்ட நிறுவனங்களுக்குத் தேவை என்கிற முறையிலே கையகப்படுத்துகிறார்கள். தொழிற்சாலை வேண்டுமென்பது அவசியமான ஒன்றுதான். ஆனால் அதற்காக விவசாயத்தை அழித்து தொழிற்சாலைக்கு நிலத்தைக் கையகப்படுத்துவது கண்ணை விற்று சித்திரம் வாங்குவதற்குச் சமம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு ஒரு நல்ல கொள்கையை இந்த அரசு உருவாக்க வேண்டும். விவசாயிகளுடைய ஒப்புதல் இல்லாமல் அவர்களை மிரட்டி, நிலங்களைக் கையகப்படுத்துகிற நடவடிக்கை தடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2011 ஜூன் 7

பரங்கிப்பேட்டை பகுதியில் கடலோரத்தை மோசமாக்கக்கூடிய சூழ்நிலையிலே அனல் மின் நிலையம், இரசாயன ஆலைகள், சாயப்பட்டறை ஆலைகள் அமைப்பதற்கு இன்றைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருப்பதால் அங்கே கடலோர பாதிப்பு ஏற்பட்டு, மக்களுடைய வாழ்வாதாரம் சீரழியும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து இன்றைக்குச் சமூகத்தில் இருக்கிற மிக முக்கியமான பிரச்சினை தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுடைய பிரச்சினை. அவர்களுடைய பிரச்சினைக்கு இந்த அரசு முன்னுரிமை கொடுக்கும் என்று கூறியிருப்பது பாராட்டத் தகுந்தது, வரவேற்கத் தகுந்தது. ஆனால், கடந்த ஆட்சியில் அந்த மக்களுக்காக வந்த நிதி திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுக்கான Special Component Plan என்ற திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கும் தமிழகத்திலே பல நூற்றுக்கணக்கான ஆலயங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே நுழைய முடியாது என்கிற சமூக அநியாயம் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் போக்கி ஆதி திராவிட மக்களின் சமூக விடுதலைக்கு இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு கடைசியாக என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

சிதம்பரம் தொகுதியில் கடந்த முறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுவிட்டது என்ற காரணத்தினால் அன்றைய ஆட்சியாளர்கள் அந்தத் தொகுதியை முற்றாகப் புறக்கணித்துவிட்டார்கள். எனவே, கடந்த ஐந்தாண்டுகளிலே நிறைவேற்ற வேண்டிய காரியத்தையும், இந்த ஐந்தாண்டு காலத்திலே நிறைவேற்ற வேண்டிய காரியத்தையும் சேர்த்து நிறைவேற்ற வேண்டிய மிகக் கடினமான பொறுப்பிலே நான் இருக்கிறேன் என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்தத் தொகுதியிலே, கல்வி நகரம் என 50 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அழைக்கப்பட்ட சிதம்பரத்தில், தற்போது பெண்கள் கல்லூரி இல்லை. அங்கே பெண்கள் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

அதேபோல, வெள்ள பாதிப்பு என்று சொன்னாலே தமிழகத்திலேயே முதலில் பாதிக்கப்படுகிற பகுதி சிதம்பரம் பகுதியாக இருக்கிறது. அங்கே வெள்ளத் தடுப்பு நடவடிக்கைக்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டும். பரங்கிப்பேட்டை, கிள்ளை பகுதிகளில் இப்போதைய முதலமைச்சர் கடந்த முறை ஆட்சியிலே இருக்கிறபோது சுனாமி திட்டங்கள் அங்கே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. ஆனால், கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்த சுனாமி திட்டங்கள் எல்லாம் முழுமையாக நிறுத்தப்பட்டு அங்கே மீனவ மக்களுக்கு அடிப்படை வசதிகள் எவையும் செய்யப்படாத நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். எனவே, அந்தப் பகுதி வளர்ச்சிக்கு, சுனாமி நிவாரணத் திட்டத்திலே கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஜூன் 7] [திரு. க. பாலகிருஷ்ணன்]

பிற்பகல் 1-35

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக இருக்கிற பத்திரிகையாளர்களுக்கு தமிழகம் முழுவதும் வீட்டுமனை வேண்டுமென்கிற கோரிக்கை நீண்ட காலமாக முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு வீட்டுமனை ஒதுக்கீடு செய்வதிலே இந்த அரசு அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரைக்கு வாய்ப்பளித்திருக்கிற அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம், 15 நிமிடங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-வது சட்டமன்றப் பேரவையின் முதல் ஆளுநர் உரைமீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி உரைப்பது, நன்றியை வெளிப்படையாகச் சொல்வது தமிழர்களின் பண்பு என்ற வகையில், ஆளுநர் உரையின்மீது கருத்துகளைச் சொல்வதற்கு முன்பு இரண்டாவது முறையாக என்னை மீண்டும் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்வு செய்த சிவகங்கை தொகுதி மக்களுக்கு மனதார நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் வெற்றிக்காக சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தந்து, வாக்காளர்களை நேரில் சந்தித்து, வாக்குகளைக் கேட்டு, என் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அனைத்திந்திய அண்ணா

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜூன் 7

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் தமிழகத்தின் முதலமைச்சருமான மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்களுடைய ஆலோசனையின்படி செயல்பட்டு, மாவட்டத்தில் பெரும் வெற்றியை ஈட்டித் தந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட மற்றும் சிவகங்கை தொகுதி முன்னணித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தே.மு.தி.க.-வின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கும், அக்கட்சியின் மாவட்ட மற்றும் தொகுதியின் முன்னணித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் தமிழகத்தில் புதிய எழுச்சியோடு கம்யூனிஸ்டு இயக்கத்தையும், மக்கள் இயக்கத்தையும் உருவாக்கி தம் எழுத்தாற்றல் மற்றும் பேச்சாற்றலால் அரசியல் மாற்றத்தை உருவாக்கிய தோழர் தா. பாண்டியன் அவர்களுக்கும், அரசியல் நேர்மையின் இலக்கணமாகத் திகழும் தோழர் ஆர். நல்லக்கண்ணு அவர்களுக்கும், அகில இந்தியச் செயலாளர் டி. ராஜா அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, புதிய தமிழகம், சமத்துவ மக்கள் கட்சி, பார்வர்டு பிளாக் மற்றும் மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் தலைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடந்த ஆட்சிக் காலத்தில் இதே சட்டமன்றப் பேரவையில் ஜனநாயகக் கடமைகள் ஆற்ற முடியாமல் நாங்களெல்லாம் வெளியேற்றப்பட்ட நேரத்தில் நிழல் சட்டமன்றத்தின் பேரவைத் தலைவராக செயலாற்றிய தாங்கள் மீண்டும் நிஜமான சட்டமன்றப் பேரவையின் தலைவராக அமர்ந்ததற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நடைபெற்ற 14-வது சட்டமன்றப் பேரவை தேர்தல் ஜனநாயக பொதுத் தன்மைகளோடும், அதிகார வரம்பு மீறல் இல்லாமலும், அதோடு கடந்த முறை நடைபெற்ற இடைத் தேர்தலில் உருவாக்கப்பட்ட வாக்குகளை விலை கொடுத்து



2011 ஜூன் 7] [திரு. சு. குணசேகரன்]

வாங்குவது என்ற நடைமுறைகள் இல்லாமலும் நடைபெறுமா என்ற பலத்த சந்தேகங்கள் நிலவிய நேரத்தில், தேர்தலை நேர்மையாகவும், பண பரிவர்த்தனைகளைக் கட்டுப்படுத்தியும், அதிகார மீறல்கள் இல்லாமலும், ஜனநாயக சக்திகளுக்கு மக்கள் நம்பிக்கையூட்டும்விதமாகத் தேர்தலை சிறப்பாக நடத்தி முடித்த தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தலில் கிடைத்த படிப்பினைகளின்மூலம் இன்னும் பண பலத்தைக் கட்டுப்படுத்தி, உண்மையான பொதுச் சேவை புரியும் எண்ணம் கொண்டவர்கள் நம்பிக்கையோடு அரசியலில், தேர்தல் களத்தில் பங்கேற்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்க தலைமைத் தேர்தல் ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த வேளையிலே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

14-வது சட்டமன்றப் பேரவைமுன் வைத்த முதல் ஆளுநர் உரையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அறிக்கையின், கடைசிக்கு முந்தைய பக்கத்தில் 41-வது பத்தியில் சொல்லப்பட்ட "மகத்தான வெற்றி பெற்று பொறுப்பேற்றுள்ள இந்த அரசிடமிருந்து பொது மக்களின் எதிர்பார்ப்பு மிக அதிகமாக உள்ளது" என்ற வரிகள் முதல் ஆளுநர் உரைக்கு மட்டுமல்ல, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றைக்கும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய இலட்சிய வரிகள் என்பதை இந்த நேரத்திலே நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அறிக்கையில் தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கான பல்வேறு அடிப்படை விஷயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். குறிப்பாக, தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இலவச அரிசித் திட்டம், முதியோர் உதவித் தொகை உயர்த்தப்பட்டுள்ளது, திருமண உதவித் திட்டம், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வேளாண்மைத் துறைக்கு முன்னுரிமை மற்றும் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது, அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துவது, தட்டுப்பாடு இல்லாத மின் வழங்கலுக்கான நடவடிக்கைகள் என்று எண்ணற்ற திட்டங்களை அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். மக்கள் நலத் திட்டங்களோடு இணைந்து எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்களிலும் முன்னுரிமை கொடுத்து கவனம் செலுத்தப்படும் என்ற துவக்கம் சிறப்பானது.

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜூன் 7

*பிற்பகல் 1-40*

*இதில் இலவச அரிசி தற்போது வழங்கும் அளவை மாற்றி, 2 நபர்கள் உள்ள குடும்பத்திற்கும் 20 கிலோ அரிசி வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரிசி வழங்கலில், 5 கிலோ பச்சரிசி கட்டாயமாக வழங்கப்படுகிறது. அதை மாற்றி விருப்பப்படுகிறவர்கள் பச்சரிசியோ அல்லது முழுமையாகப் புழுங்கல் அரிசியோ வாங்கிக் கொள்வதற்கான விநியோக முறையை உருவாக்கிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார்கள். ஏனென்றால், அதுபோல அம்மா அவர்கள் எந்த அறிக்கையும் கொடுக்கவில்லை; யாருக்கும் எந்த அனுமதியும் கொடுக்கவில்லை. விரும்புகிறவர்கள் முழுமையாக அவர்கள் விரும்புகிற அரிசியை வாங்கிக் கொள்ளலாம். ஒருசில இடங்களில் பச்சரிசியை வாங்குகிறார்கள்; ஒருசில இடங்களில் புழுங்கல் அரிசியை வாங்கிக்கொள்கிறார்கள். எனவே, அதுபோல யார் சொல்லியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுத்தால், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்; அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி வழங்குகிற நேரத்தில், என்னுடைய தொகுதியிலே நான் பல நியாய விலைக் கடைகளுக்குச் சென்று பார்த்தேன். 5 கிலோ பச்சரிசி வழங்குகிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*



2011 ஜூன் 7]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது தெளிவுபடுத்தினார்கள். நியாய விலைக் கடைகளில் ரேஷன் கார்டுகளுக்கு அரிசி வழங்கும்போது, கட்டாயமாக 5 கிலோ பச்சரிசி வழங்கப்பட வேண்டுமென்ற எந்த உத்தரவையும் இந்த அரசு பிறப்பிக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரையில், அந்த ரேஷன் கார்டுகளுக்கு அரிசி பெறுகின்ற மக்கள், விரும்பினால் பச்சரிசியைப் பெற்றுக்கொள்ளலாம்; விரும்பினால் புழுங்கல் அரிசியைப் பெற்றுக்கொள்ளலாம். இப்போது அமைச்சர் என்ன சொன்னார் என்றால், எந்த நியாய விலைக் கடையிலாவது, கட்டாயமாக 5 கிலோ பச்சரிசியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தினால், அந்த விவரத்தைத் தெரிவியுங்கள்; அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, குடும்ப அட்டைகள் வழங்குவதில் கடந்த கால ஆட்சியில் இருந்த குறைபாடுகளையும், காலதாமதத்தையும் நீக்கி, உடனடியாகக் குடும்ப அட்டைகள் வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நியாய விலைக் கடைகளில் மக்கள் எளிதில் பொருட்களை வாங்கும் விதத்தில், கூடுதல் நியாய விலைக் கடைகளையும், பகுதிநேரக் கடைகளையும் உருவாக்கிட வேண்டும்.*

*முதியோர் ஓய்வூதியத்தை வங்கியில் பெற்றுக்கொள்ளும் முறையை வரவேற்கிறோம். அதைப்போல, தொகையை 1,000 ரூபாயாக உயர்த்தியதையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். வங்கிக் கணக்குகளை அரசே தொடங்கி, இந்த உதவித் தொகையை வழங்குகிற திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றிட வேண்டும். வங்கிகள் இல்லாத பகுதிகளில், பழைய முறையிலேயே தபால் நிலையங்கள் மூலமாக ஓய்வூதியத்தை வழங்கி உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

[2011 ஜூன் 7

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகைத் திட்டம் தபால்மூலமாக விநியோகம் செய்யப்படுவதால்தான், பயனாளிகள் ஏமாற்றப்படுகிறார்கள். இந்த முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்கள் பெரும்பாலும் ஆதரவற்ற முதியோர். அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட யாருமில்லை. அதனால், இந்தத் தபால் நிலையங்களில் தபால்காரர்களே கையெழுத்துப் போட்டு, அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, இந்த முதியோர்களுக்குக் கிடைக்கவேண்டிய பணம் கிடைப்பதில்லை. அதனால்தான் வங்கி மூலமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். அரசாங்கம் பணத்தை ஒட்டுமொத்தமாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடம் கொடுத்துவிடும். அந்த வங்கிகளே தேவையான வங்கிக் கணக்குகளைப் பயனாளிகளுக்காகத் திறந்து, அவர்களுக்கு ஸ்மார்ட் கார்டுகளை வழங்கி, ஒவ்வொரு மாதமும் சரியாக அந்தத் தொகை அவர்களுக்குப் போய்ச் சேரும்படி பார்த்துக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மிக்க நன்றி. விலைவாசி உயர்வு மக்களை மிகவும் பாதிக்கும் பிரச்சினையாகும். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது அரசின் மிக முக்கிய கடமை. அதற்கு மாநில அரசின் முயற்சி வரவேற்கத்தக்கது. அறிக்கையில் உற்பத்தியாளர்களிடம் கூட்டுறவு அமைப்புகள் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று, இலாபமில்லாமல் பயனாளிகளுக்கு வழங்க எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது. ஆனால், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ.50 கோடி என்பது போதுமானதாகத் தெரியவில்லை. அதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

மேலும், விலைவாசி உயர்விற்கு மிக அடிப்படையானது இடைத்தரகர்கள். அவர்களைக் கட்டுப்படுத்தி, விவசாய விளைபொருட்கள் அனைத்திற்கும் கட்டுப்படியான விலையை அரசே நிர்ணயித்து, விற்பனை விலையை அரசே அறிவிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களை அரசே முழு கொள்முதல் செய்திடல் வேண்டும். அதற்கு அடிப்படையாக கூட்டுறவு அமைப்புகளைப் பலப்படுத்த வேண்டும்.



2011 ஜூன் 7] [திரு. சு. குணசேகரன்]

கடந்த ஆட்சியில் கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தாமல் காலம் கடத்தப்பட்டது. அதன் விளைவாக கூட்டுறவு அமைப்புகள் நசிந்து கிடக்கின்றன. விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட இழப்பு நிதியைக்கூட தமிழக அரசு இன்னும் கூட்டுறவு அமைப்புகளுக்கு வழங்கவில்லை. அதோடு கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தாததால், மத்திய அரசு நமது கூட்டுறவு அமைப்பிற்குக் கொடுக்க வேண்டிய சுமார் 800 கோடி ரூபாய் நிதியும் இன்னும் கிடைக்காமல் உள்ளது. எனவே, உடனே கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டும்.

மேலும், விலை உயர்விற்கு மாநில அரசு மட்டும் பொறுப்பேற்க முடியாது. மத்திய அரசுதான் 90 சதவிகிதம் பொறுப்பேற்க வேண்டும். ஆன்லைன் வர்த்தகத்தைத் தடை செய்ய மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் பெட்ரோல், டீசல் எரிவாயு விலைகளை உயர்த்த அனுமதிக்கக்கூடாது. கொள்ளை இலாப மொத்த வர்த்தக நடைமுறைகளில் கட்டுப்பாடான மாற்றங்களைக் கொண்டுவர... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். தேர்தல் நடத்துவதற்கான காலக்கெடு இப்போது உச்ச நீதிமன்றத்திலே இருப்பதால், உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதியும் பெற வேண்டியிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருப்பதால், அது எந்த அளவுக்கு வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டு, அம்மா அவர்கள் நிச்சயமாகக் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவார்கள்; முறையாக நடத்துவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மிக்க நன்றி. மாநில அரசு வற்புறுத்த வேண்டும். நிலையான, நீடித்த தொழில் வளர்ச்சியால்தான் தமிழகத்தின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அதோடு தனி நபர் வருமானம் மாநிலத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்த முடியும். அதனடிப்படையில், தமிழக அரசின், தமிழ்நாடு, 2025 தொலைநோக்குப் பார்வைத் திட்டம் பற்றிய

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜூன் 7

அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அதில் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து களைவது என்ற நோக்கம், திட்டச் செயல்பாடு வெற்றிகரமாக அமைய உதவிடும்.

தமிழகத்தில் 75 சதவீதம் மக்கள் பங்கெடுக்கிற வேளாண் துறை வளர்ச்சிக்கு பல திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன. வேளாண் துறையைப் பாதுகாத்து வளர்த்திட விரிவான வேளாண் கொள்கையை உருவாக்கிட வேண்டும். வேளாண் தொழில் மனித குலத்திற்கு மட்டுமல்ல; எல்லா உயிர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதால், வேளாண் தொழிலின் அடிப்படையான நிலம், நீர்வளம், இடுபொருட்களின் விலை போன்ற அடிப்படைப் பிரச்சினைகளில் தெளிவான கொள்கைகளை அரசு முன்வைக்கவேண்டும்.

விவசாய முறைகளில் இப்போது அவசியமாகக் கருதப்படும் இயற்கை வேளாண்மை பற்றித் தெளிவான கொள்கையை வகுக்க வேண்டும். வேளாண் கொள்கையை உருவாக்க வேளாண் துறை வல்லுநர்கள் மட்டுமல்லாது; விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் முன்னோடி விவசாயிகளையும் உள்ளடக்கிய குழு அமைத்து விரைவில் அறிக்கை அளித்திட வேண்டும்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் கூறியதைப்போல, இந்த ஆண்டே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,100 விலை என்று அறிவிக்க வேண்டும். வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்கச் செய்ய வேண்டும். கரும்பு விவசாயிகளைப் பாதுகாக்கிற விதமாக, ஆண்டுதோறும் முத்தரப்புக் கூட்டத்தைச் சட்டபூர்வமாக கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டத்தின்கீழ், 100 நாள் வேலையளிக்கையில், இவ்வேலையை விவசாயப் பணிகளுக்கும் பயன்படுத்த மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அதுமாதிரி பயன்படுத்தும்போது, விவசாயிகளிடமிருந்து பாதி சம்பளம்கூட வாங்கிக்கொள்ளலாம். பாதி அரசாங்கமே கொடுக்கிற ஒரு நடைமுறையை உருவாக்கலாம்.

அதேபோல ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியிருக்கிற தமிழக மீனவர்களுக்கான உதவித்தொகை அதிகரித்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால், தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது, உடைமைகள் அழிக்கப்படுவது போன்ற இலங்கை



2011 ஜூன் 7] [திரு. சு. குணசேகரன்]

இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

கச்சத் தீவை திரும்பப்பெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி உங்களோடு துணை நிற்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலில் ஒன்றியப் பெருந்தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சித் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நடைமுறையைக் கொண்டுவரவேண்டும். அரசு கேபிள் திட்டத்தை வரவேற்கிறேன். அதேபோல், பெண்கள் திருமண உதவித் திட்டத்தை நீங்கள் நேற்று துவக்கி வைத்திருக்கிறீர்கள். மிக்க நன்றி.

அதேசமயத்தில், படித்த பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நான்கு கிராம் தங்கமும் இலவசமாகத் தருகிறீர்கள். 10-வது படித்தவர்களுக்கு 25 ஆயிரமும், நான்கு கிராம் தங்கமும் தருகிறீர்கள். ஆனால், இப்போது எங்கள் பகுதியில் முக்கால் பவுன் தாலி, அதாவது 6 கிராமில் திருமாங்கல்யம் செய்கிறார்கள். உங்களை நம்பியவர்களைக் கைவிட மாட்டீர்கள் என்ற உங்கள் செயல்பாடு தமிழகம் நன்கு அறிந்தது; நானும் அறிந்திருக்கிறேன். அந்த அடிப்படையில், தேர்தல் நேரத்தில் என்னுடைய தொகுதியில் நான் சுற்றிச்சுற்றி வாக்குகளைக் கேட்கிற நேரத்தில், கண்டிப்பாக சட்டமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராக ஆவது உறுதி. அவர்களிடம் நேரிடையாக எடுத்துச்சொல்லி கண்டிப்பாக இந்தத் தொகுதியில் மட்டுமல்ல; தமிழக மக்களுக்கு 6 கிராம் தங்கத்தை வாங்கித் தருவேன் என்ற வாக்குறுதியை உங்களை நம்பிச் சொல்லியிருக்கிறேன். எனவே, நீங்கள் 2 கிராம் கூடுதலாக்கி 6 கிராம் கொடுத்து முக்கால் பவுன் மாங்கல்யம் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் இப்படி உதவி வழங்கவேண்டிய பெண்களுக்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 7

நீங்களே வசூல் செய்து மீதி இரண்டு கிராம் தங்கத்தை நாங்கள் கொடுக்கின்ற 4 கிராமோடு சேர்த்துக் கொடுத்துவிடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சு. குணசேகரன்:** அடுத்து சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம். அது ஒரு சிறப்பான திட்டம். கடந்த ஆட்சியில் கொண்டுவந்த வீடு கட்டும் திட்டத்தை நாங்கள் கடுமையாக அந்த நேரத்திலே எதிர்த்தோம். ரூ.65,000 என்று முதலிலே அறிவித்தார்கள்; போதாது என்று சொன்னோம்; ரூ.75,000 என்று அறிவித்தார்கள்; அதுவும் போதுமானதாக இல்லை என்று சொன்னோம். அந்தத் திட்டமும் முழுமை பெறாத நேரத்தில் சூரிய ஒளியோடுகூடிய சுற்றுச் சூழலைப் பாதுகாக்கிற பசுமை வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கி இருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதைப்போல கடைசியாக ஒரே ஒரு பிரச்சினைபற்றிக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தின் 14-வது சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை அண்ணா தி.மு.க தலைமையிலான கூட்டணி பெற்றுள்ளது. அதற்கு கடும் விலை உயர்வு, மின் பற்றாக்குறையால் ஏற்பட்ட இருட்டு, சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, மிகப் பெரிய ஊழலான 2G Spectrum அலைக்கற்றை ஊழல், ஆட்சி நிர்வாகத்தில் எல்லா மட்டங்களிலும் தலைவிரித்து ஆடிய இலஞ்சம், அரசாங்கப் பண விரயம் என்று அனைத்தையும் எதிர்த்து தமிழக மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்பது உண்மைதான். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், உரையை முடியுங்கள்

**திரு. சு. குணசேகரன்:** ஆனால் நீரால் பிரிக்கப்பட்டு, கூப்பிடுதூரத்தில் அமைந்த இலங்கையின் தமிழ் மக்களைக் கூண்டோடு அழிக்கும் கொடிய செயலுக்கு உதவியவர்களுக்குத் தண்டனை தரும் நோக்கத்தோடு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் தங்களுக்கு நான் கவனப்படுத்த விரும்புகிறேன். 21 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழ் இனத்தை முற்றாக அழிக்கும் பாசிச வெறியாகவே இந்திய கம்யூனிஸ்டு கட்சி இதைக் கருதுகிறது. இலங்கையில் நிகழ்ந்துள்ளது வெறும் போர்க் குற்றம் மட்டுமல்ல; இனஅழிப்புப் போர்க் குற்றமாகும் என்று கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது. ஒரு இலட்சத்து



2011 ஜூன் 7] [திரு. சு. குணசேகரன்]

நாற்பத்து ஆறாயிரத்து அறுநூற்று இருபத்தொன்பது பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு உரிய ஆதாரங்களும் இருக்கின்றன. இலங்கை அரசின் கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களில் அரசு மக்கள்தொகை புள்ளி விவரக் கணக்கெடுப்பின்படி, 2008 ஆம் ஆண்டு அங்கு வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை நான்கு இலட்சத்து இருபத்தொன்பது ஆயிரத்து ஐம்பத்தொன்பது பேர். போர் முடிந்து அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததாக இலங்கை அரசு வெளியிட்ட அகதிகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று எண்பது பேர். இதன்படி ஒரு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து அறுநூற்று எழுபத்தி ஒன்பது பேர் காணவில்லை என்பதை ஐக்கிய நாடுகள் சபை தனது போர் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய பெரிய படுகொலை இரண்டாவது உலகப் பெரும்போருக்குப் பின் உலகில் எங்கும் நடக்கவில்லை. கடந்த காலங்களில் போர்க் குற்றங்கள் செய்தவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். ஹிட்லரின் தலைமையில் நடைபெற்ற இழிவுமிகுந்த படுகொலைக்காக நூரம்பர்க் என்னும் இடத்தில் விசாரணை மன்றம் அமைக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர். போஸ்னியாவில் 1995 ஆம் ஆண்டில் 7,000 பேர் கொல்லப்பட்டார்கள். இன அடிப்படையில் இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள்மீது விசாரணை நடத்தப்பட்டு 2007 ஆம் ஆண்டு தீர்ப்பும் வழங்கப்பட்டது. முன்னாள் தளபதி Ratko Mladic என்பவர் இப்போது கைது செய்யப்பட்டுள்ளார். இதனைப் போன்று ஆப்பிரிக்காவில் உள்ள ருவாண்டாவிலும் போர்க் குற்றவாளிகள் விசாரணை செய்யப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இலங்கையில் கடந்த 27 ஆண்டுகளாக தமிழ் இன மக்களை அழிப்பதற்குத் தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டுகளில் உலகில் தடை செய்யப்பட்ட குண்டுகள் அனைத்தும் அந்த மக்கள்மீது போடப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 மற்றும் 18 தேதிகளில் மட்டுமே 40,000 மக்கள் கொல்லப்பட்டார்கள். வெள்ளைக் கொடியோடு சென்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

[திரு. சு. குணசேகரன்] [2011 ஜூன் 7

இந்த நிலையில் ராஜபக்சேமீது சர்வதேச விசாரணை மன்றம் வைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை நமது தமிழக முதல்வர் அவர்கள் இதே சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அழிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கிட வேண்டும் என்று தங்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், நாடாளுமன்றத்திலே எங்களுடைய ஆட்சி அமைந்தால், தேவைப்பட்டால் இராணுவத்தை அனுப்பி தமிழ் மக்களைப் பாதுகாப்பேன் என்று சொன்னவர்தான் இன்றைக்குத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று இருக்கிறார்கள். ஆகவே, இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இந்தத் தமிழக சட்டமன்றம் ஒரு தீர்வாக அமைந்து ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசின் மூலமாக ராஜபக்சேவை சர்வதேசக் குற்றவாளியாக அறிவித்து, போர்க் குற்றவாளியாக உலகத்தின் முன்னால் நிறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த Price Stabilisation Fund அமைக்கப்படும் என்பதைப் பற்றிய எங்களுடைய அறிவிப்பைப் பற்றி அவர் குறிப்பிட்டார். அதாவது, 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் விலைக் கட்டுப்பாட்டு நிதி உடனடியாக ஏற்படுத்தப்பட்டு, வட்டி இல்லாக் கடனாக கூட்டுறவு அமைப்புகளுக்கு வழங்கப்படும் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டு, 50 கோடி ரூபாய் என்பது போதுமானதாக இல்லை; அதை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த 50 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு அவசரத் தேவைக்காகத்தான். ஒரு Corpus Fund, அவ்வளவுதான். தேவை இருந்தால் இன்னும் அதிகமாக அரசு வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஜூன் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா அவர்கள்.

***திரு. பழ. கருப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, அதற்கு இலக்கணமாகத் திகழ்கின்ற போற்றுதலுக்குரிய எங்களின் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு இந்த உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"வடக்கு வாழ்கிறது" என்றார் அண்ணா. "வடக்கு வாட்டுகிறது" என்கிறார் முன்னாள் முதல்வர். திகார் சிறைச்சாலையில் வெப்பம் தாங்க முடியவில்லையாம். ராபின்சன் பூங்காவிலே கொட்டும் மழையிலே துவக்கப்பட்ட ஒரு கட்சி, இப்பொழுது கொதிக்கும் வெயிலில் திகார் சிறைச்சாலையில் முடிவடைவது வரலாற்றின் அவலம்தான்!

பலவற்றைக் கைவிட்டுவிட்டார்களே, சிலவற்றை மாற்றிவிட்டார்களே என்றெல்லாம் முன்னாள் ஆளுங்கட்சியினர் கவலைப்பட்டிருக்கின்றனர். ஏமாற்றப்பட்ட மக்கள், மாற்றம் கருதி அளித்த தீர்ப்பின் விளைவுதான் அம்மாவினுடைய அரசு.

சட்டமன்றத்தை மீண்டும் பழைய செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கே கொண்டுபோய் விட்டார்களே என்பது அவர்களின் குற்றச்சாட்டு. "நம்மை அடிமைப்படுத்தி ஆள்வதற்காக வெள்ளைக்காரன் கட்டிய செயின்ட் ஜார்ஜ் கோட்டையை இனியும் சுதந்திர நாட்டில் ஆட்சிப் பீடமாக இருக்க விடலாமா என்று எண்ணி, புதிய சட்டமன்றத்தை உருவாக்கினோம்; ஆனால் அதைக் கைவிட்டு, பழைய சட்டமன்றத்திற்கே புதிய ஆட்சியினர் போய்விட்டார்களே" என்று முன்னாள் முதலமைச்சர் வருத்தம் தெரிவித்திருக்கிறார். அப்படியானால், 'ரிப்பன் எங்கள் அப்பன்' என்று தமிழ் மக்களால் போற்றப்பட்ட ரிப்பன் கட்டடத்திலிருந்து இயங்கும் மாநகராட்சியை மாற்றியிருக்கலாமே? செம்மொழி ஆய்வகத்தை அங்கு கொண்டு சென்றிருக்கலாமே? செயின்ட் ஜார்ஜ் கோட்டையைவிட்டு நம்முடைய ஆட்சிப் பீடத்தை மாற்றிவிட்டால், அடிமை வரலாறு மாறிவிடுமா? நாம்

அடிமைப்பட்டிருந்தோம் என்பது வரலாற்றின் ஒரு பகுதி! மகாத்மா காந்தியின் தலைமையில் விடுதலை பெற்றோம் என்பது வரலாற்றின் இன்னொரு பகுதி! கட்டடங்களை மாற்றுவதன்மூலம் வரலாற்றை மாற்றிவிட முடியுமா? வெள்ளைக்காரர்கள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அதே கட்டடத்தில், மக்களின் நன்மைக்காக, ஒரு தமிழச்சி அம்மா ஆள்கிறார்களே என்பதுதானே பெருமை! (மேசையைத் தட்டும் ஒலி) அதுதானே வரலாற்றின் தொடர்ச்சி. கட்டடத்தை மாற்றிவிடுவதன்மூலம் இடைப்பட்ட வரலாற்றை மறைத்துவிட முடியுமா? அதைக் கிழித்தெறிந்துவிட முடியுமா? ஒரு வரலாற்றைக் கிழித்தெறிந்து, இல்லாமல் செய்துவிட முடியும் என்றால், கிழித்தெறியப்பட வேண்டிய வரலாறு அசிங்கமான ஆட்சி நடத்தியவர்களின் வரலாறு அல்லவா? கட்டடத்தின் புகழ்மையைச் சீரழிக்க நடக்கின்ற முயற்சி என்று முன்னாள் முதல்வர் கூறியிருக்கிறார். அதிலே என்ன அழகு இருக்கிறது? அதில் என்ன புகழ்மை இருக்கிறது? அது எந்த விதத்திலே சீரழிக்கப்பட்டுவிட்டது? பாண்டிச்சேரி போலீஸ்காரனின் தொப்பியைக் கவிழ்த்து வைத்ததுபோல் இருக்கிறது என்று அம்மா ரொம்ப அழகாகச் சொன்னார்கள். குமரியிலே இருக்கிற வள்ளுவன் சிலைகூட பெண்மைத் தன்மையோடு இருக்கிறது; நெளிந்துகொண்டு நிற்கிறார் வள்ளுவர். நம்முடைய சென்னையில் உள்ள வள்ளுவன் சிலையைப்போல அல்ல. அதுவே உங்களுடைய புகழ்மை, உங்களுடைய கலை; இவை குறித்து நீங்கள்தான் வருத்தப்பட வேண்டுமே தவிர, நாடு அவற்றைக் குறித்து, மகிழ்ச்சிதான் அடைகிறது.

ஊரக வீட்டு வசதித் திட்டத்தைப் பற்றிச் சொல்லி இதையெல்லாம் கைவிட்டுவிட்டார்களே என்று ரொம்ப அங்கலாய்த்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் கொண்டுவரப்பட்ட ஊரக வீட்டு வசதித் திட்டம் கைவிடப்பட்டது குறித்து முன்னாள் ஆளுங்கட்சியினர் வருத்தப்படுகிறார்களே, அந்தத் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு 75 ஆயிரம் ரூபாய் அரசு நிதியாக வழங்கப்பட்டது. 75 ஆயிரம் ரூபாயை வாங்கி, பாதியைக் கட்டிவிட்டு, மீதியை முடிக்க முடியாமல் கடனாளிகள் ஆனதுதான் மக்கள் கண்ட பலன். கூரை வீட்டிலே கடன் இல்லாமல் வாழ்ந்தவனை கற்பனையில் மிதக்க வைத்து, கடனாளி ஆக்குவதில் என்ன பயன் இருக்கிறது என்று கருதித்தான், அம்மாவின் இந்த அரசு இந்தத் திட்டத்தைக் கைவிட்டது.





பிற்பகல் 2-00

ஒன்றரைச் சாண் பாயிலே முடங்கியிருக்கிற பாட்டாளி, ஒழுகாத வீட்டில் வாழ வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது என்கிறார் முன்னாள் முதலமைச்சர் அவர்கள். 75 ஆயிரம் ரூபாயிலே சுவர்கள்தான் எழுப்பலாம், மேற்கூரை போடமுடியாதே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையை நாளை தொடரலாம். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (8-6-2011) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சென்னை, தாம்பரம் (மேற்கு), திருவாளர்கள் இந்து மிஷன் மருத்துவமனைக்கு யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 16-12-2010 ஆம் நாளிட்ட 208 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள திருவாளர்கள் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனம் செய்யும் மருத்துவக் கதிர் படச்சுருள் (X-Ray) விற்பனை குறித்து செலுத்தத்தக்க மதிப்புக் கூட்டு வரி வீதத்தைக் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 23-12-2010 ஆம் நாளிட்ட 209 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

[2011 ஜுன் 7

*அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*3. யாதொரு வணிகர், சேர்க்கை பொருட்களுடன் அல்லது சேர்க்கை பொருட்களின்றி பெட்ரோல் விற்பனை மீதான செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நாள் முதல் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 1-3-2011 ஆம் நாளிட்ட 45 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*4. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலிமனையிடங்களுக்குச் சொத்து வரி விதித்தல்) விதிகள் இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 20-8-2009 ஆம் நாளிட்ட 151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) ஆம் பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) ஆம் பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) ஆம் பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) ஆம் பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) ஆம் பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10 (3) ஆம் பிரிவு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10 (3) ஆம் பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*



2011 ஜுன் 7]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)*

*2. 2011 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 3 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

## இணைப்பு

*(9 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

Hon'ble Members of the Legislative Assembly,

Vanakkam. It gives me immense pleasure to address the First Session of this newly constituted 14th Legislative Assembly of the State today. I congratulate all the newly elected Members and wish success to all in their endeavour to serve the State. I also extend my deep appreciation to the people of Tamil Nadu for coming out in large numbers and exercising franchise to uphold democratic principles in electing the new Government in a free and fair manner.

2) I congratulate the Honourable Chief Minister Selvi J Jayalalithaa on assuming charge for the third time with a spectacular victory and decisive mandate. The historic victory achieved in this election by All India Anna Dravida Munnetra Kazhagam shows the firm faith the people of Tamil Nadu have in her laudable leadership. With her profound wisdom and knowledge, I am sure she will lead the State to prosperity once again and make it *Numero Uno* in the country.

3) This Government follows the strong ideology of Perarignar Anna and Puratchi Thalaivar MGR who always promoted the welfare of the destitute and downtrodden. This new Government will also uphold the same principle of serving the poor under the leadership of the Honourable Chief Minister. While giving priority to welfare measures directly benefiting the poor and disadvantaged, this Government will lay equal emphasis on developmental schemes building infrastructure that will put the State on a new trajectory of growth and prosperity.

4) Having assumed charge at a very difficult moment when the State is facing several challenges, the immediate priorities of this Government are to restore law and order and provide efficient governance. Though Tamil Nadu is known for effective maintenance of law and order, in the past few years, issues relating to law and order have severely affected the economic development of the State. Whenever the Honourable Chief Minister Selvi J Jayalalithaa headed

the Government, deterrent actions were pursued against anti social elements and terrorists to make the State a haven of peace. The present Government will take the required stringent measures and restore law and order in the State, so that people can live in peace and pursue their livelihood without any fear. During the previous regime, many persons were wrongfully dispossessed of their immovable properties through force and intimidation. This Government has decided to take appropriate action and restore such properties to the rightful persons by enacting a new Act. This Government will strengthen and modernise the Police Force by providing it with sophisticated equipment and training. Apart from taking efforts to bring down the crime rate, e-governance initiatives like Crime and Criminal Tracking Network System (CCTNS) will be put in place at the earliest to make the system efficient and public friendly.

5) In order to spread awareness about the ancient glory of Tamil and its richness among non-Tamils all over the world, Thirukkural, literary works of Bharathiar, Bharathidasan and other famous Tamil works will be translated into English, Mandarin, Arabic and other major languages of the world. This will be published through the internet. To facilitate the use of Tamil in computers and also to promote linguistic research, adequate funds will be allocated, besides restoring the uniqueness of the Tamil University and other related institutions. This Government also urges the Government of India to make Tamil one of its official languages and also to ensure the usage of Tamil in the Courts.

6) As the Legislative Council in the State was found to be redundant, it was abolished on November 1st, 1986 by Puratchi Thalaivar MGR. Therefore, this Government is not in favour of constituting the Legislative Council once again. Accordingly, the matter will be placed in the Legislative Assembly and an appropriate decision will be taken.

7) The new Legislative Assembly - Secretariat Complex at Omanthoorar Government Estate had been inaugurated in March 2010 without completing the works fully. It lacks adequate facilities. Even basic facilities have not been provided. Without completing





the construction, a few departments were hastily shifted to the new Secretariat Building along with the offices of the Chief Minister and all Ministers. Only six departments were shifted to the new Secretariat Building and the remaining 29 departments continued to function from the Secretariat at Fort St. George. While the offices of Ministers were shifted to the new Secretariat Building, the connected departments continued to function from the old Secretariat Building at Fort St. George. This Government feels that keeping the departments at one place and shifting the offices of the Ministers and a few departments alone to the new Secretariat Building is causing unnecessary administrative hardship and inconvenience to the public. Therefore, this Government has decided to continue to function from the Secretariat at Fort St. George. There have been allegations of excess and wasteful expenditure and deficiency in the standards of construction of new Secretariat Building. Therefore, a Commission of Inquiry headed by a retired Judge of the High Court will be constituted to enquire into the alleged irregularities like excess expenditure, inordinate delay and deficiency in standards of construction. Further works in the new Secretariat complex will be stopped to facilitate this enquiry.

8) This Government's vision is to make Tamil Nadu a well governed State, thus making it the most preferred destination for investors. This will be achieved by adopting the principle of zero tolerance towards corruption. Delivery of services by the Government will be improved through e-governance initiatives and process re-engineering. All the existing welfare schemes will be integrated with biometry based unique identification system to improve the delivery of Government services which will help in plugging leakages and eliminating corruption. As a first initiative to improve service delivery, this Government has decided to disburse the monthly pension under Social Security Schemes like Old Age Pension through the bank account of the beneficiary and the Banks in turn will extend doorstep service through banking correspondents. This new system will be put in place with effect from September 1st, 2011.

9) Immediately after assuming charge, this Government have issued orders for the supply of rice under Public Distribution System

free of cost fulfilling one of the most important poll promises. This shows the firm resolve and commitment of this Government towards alleviating the sufferings of the poor. Public Distribution System in the State will be improved by introducing technological innovations in family card management, tracking movement of stocks, monitoring allotment and distribution of essential commodities to control diversions. This Government, besides taking stringent action against hoarding and black-marketing, will also strengthen the Public Distribution System as a price control measure. A 'Price Stabilisation Fund' with a corpus of Rs. 50 crores will be constituted immediately to extend interest-free financial support to the co-operatives for market intervention to procure select commodities showing abnormal price rise and sell them through co-operative outlets at cost price to the public. As a long term measure to control prices of essential commodities, this Government will take up intensive measures to increase production and productivity of commodities facing demand-supply mismatch.

10) Welfare of fishermen is always close to the heart of the Honourable Chief Minister Selvi J Jayalalithaa. As promised in the manifesto, the relief to the fishermen during the fishing ban period has been enhanced from the present level of Rs.1,000 to Rs. 2,000 per month. Similarly, the assistance under Old Age Pension and other monthly social security pension schemes has been doubled from the present level of Rs.500 to Rs.1,000 per month fulfilling another important poll promise benefiting the poor.

11) Tamil Nadu ranks third in terms of Gross Domestic Product contribution at national level following Maharashtra and Uttar Pradesh. The Gross State Domestic Product growth in the State has slowed down from 2008-2009 due to low growth in the agriculture and manufacturing sectors. The lack of a clear cut sector-specific strategy to accelerate growth is the main cause for such stagnation. The objective of this Government will be to promote economic prosperity and generation of employment through a structured sector-specific strategy for creating an enabling environment to achieve the goal of accelerated development with inclusive growth. This will be possible only if we have a blueprint for development to achieve the level of overall GSDP growth of above 10 percent on a





sustainable basis. Therefore, the State will prepare a 'Vision 2025 Document for Tamil Nadu' to identify and remove the bottlenecks in development, prioritise critical infrastructure projects and work assiduously to place the State of Tamil Nadu at the forefront of development once again.

12) Higher growth will bring equitable benefits only if the primary, secondary and tertiary sectors grow concurrently. But, since the commencement of the 11$^{th}$ Plan, the cumulative growth in the primary sector is negative 1.18 percent for the period 2007-2010. Thus, achieving 4 percent growth in the primary sector as per the 11$^{th}$ Plan objective has become impossible. This Government, therefore, will pay special attention to the development of the primary sector encompassing agriculture, animal husbandry and fisheries. The focus will be on enhancing productivity and increasing the income level of 75 lakh small and marginal farmers through schemes designed specially for farm level intervention.

13) The Agriculture sector will be revitalised with a crop specific strategy for increasing the production of paddy, pulses, sugarcane, cotton, etc. Precision farming and micro irrigation will be promoted in a big way. Efforts will be made to shift the cropping pattern towards high value crops while ensuring adequate level of food production. Forward and backward linkages will be strengthened with large scale promotion of agro processing industries with farmers' participation and also by augmenting supply of quality inputs, marketing facilities, godowns and cold storage facilities.

14) Strengthening the irrigation infrastructure is the most important prerequisite to the sustainable growth of the agriculture sector. This Government will take measures to interlink the rivers in the State for enhancing the irrigation capacity. This will also control floods and serve as inland waterways.

15) This year, water will be released from the Mettur Dam for irrigation on 6$^{th}$ June itself against the normal due date of 12$^{th}$ June. After Independence, water from Mettur Dam is being released before the due date for the first time. I trust that the farmers in the Cauvery Delta will be happy to commence cultivation in time.

16) It is our vision to eliminate poverty completely. This Government is well aware of the fact that economic growth alone cannot eliminate poverty if it is not inclusive. Therefore, through convergence of various schemes, this Government will strategise for family based intervention and monitor the socio economic development till they cross the poverty line.

17) This Government will work towards smooth Centre-State relations. On the issue of implementation of Goods and Services Tax, this Government will support the introduction of tax reforms in indirect taxes without compromising on the fiscal autonomy of the State. As sales tax is the main source of revenue for the State, this Government urges the Central Government to adopt an acceptable GST model which does not erode the State's revenue.

18) This Government desires to settle the inter-State river water disputes through peaceful negotiations wherever possible. Where this is not possible, this Government will not hesitate to take legal recourse for such problems. As the disputes over Mullai Periyar and other river water problems are in Court, this Government will strive hard to find a lasting solution through the legal process. This Government also believes that the Mullai Periyar dispute pending before the Supreme Court will come to a finality at the earliest.

19) Industrial development is affected badly in the State due to power shortage, gap in physical infrastructure and shortage of skilled manpower leading to the flight of capital to other competing States. It will be the endeavour of this Government to attract top industrial houses for investment in key sectors like automobile and auto parts, IT, ITES, textiles, leather, engineering goods, etc., and make the State a hub of the manufacturing sector. As industrial development is more concentrated in Chennai and its surrounding districts, efforts will be made to promote industries in a decentralised way through appropriate incentives. This Government will lay special emphasis on attracting investments in the ship building industry to promote economic development along the east coast. Madurai - Aruppukottai-Thoothukudi corridor will be promoted as a self-sufficient growth corridor to trigger industrial growth in the Southern region. This



Government will lay special emphasis on the newly emerging sectors like bio-technology, nano-technology and pharmaceuticals.

20) Tamil Nadu will be promoted as a hub of IT and ITES industry. IT parks in second tier cities will be promoted aggressively for doubling the growth of the IT industry. BPOs in the rural areas will be strengthened for promoting the decentralised growth of the IT industry. This Government will also implement the scheme for free distribution of laptop computers to students and commence the distribution from September 15$^{th}$, 2011 to cover all the Plus One and Plus Two students in Government and Government aided Schools and students in Government and Government aided Colleges in a phased manner. During 2011-2012, laptops will be distributed to 9.12 lakh students.

21) Arasu Cable TV Corporation formed by the previous Government has become defunct. There has been overwhelming demand from the public for the immediate revival of Arasu Cable TV Corporation for providing cable TV services at reasonable rates. This Government will revive its activities in the public interest and nationalise the private cable TV operations in the State without affecting the interest of the last mile local cable operators.

22) Continuous planning and execution of infrastructure projects in key sectors such as power, roads, urban infrastructure and housing are necessary to bridge the existing gap in the physical infrastructure which is critical for sustainable economic development. This requires enormous resources and the State cannot meet such a huge requirement from its own limited resources. Besides resource mobilisation, a focused approach is required for holistic infrastructure development. Therefore, as a policy, this Government will promote Public Private Partnership for strengthening physical infrastructure.

23) Shortage of power has badly affected industrial growth during the previous regime. This Government will give top priority to making the State a power surplus one by reforming the energy sector. A long term power strategy will be drawn up for putting up the projects in the pipeline anticipating the growth in demand to ensure

uninterrupted power supply to industry and other sectors. Efforts will be made for improving efficiency in generation, transmission and distribution, controlling the T&D losses by preventing power theft and segregating the industrial, domestic and agricultural feeders to improve the quality of power supply. As short term measures, this Government will improve the efficiency of its own generating stations and maximise the wind power evacuation besides controlling technical and commercial loss. As a credible alternative, additional power generation through renewable sources of energy like wind, solar and biomass will be given special priority. This Government will also bring out a separate Policy for promotion of renewable energy.

24) Quality roads and better connectivity are vital for maintaining the growth momentum. This Government will focus on laying of quality roads which will enhance traffic efficiency and reduce travelling time. All the State Highways will be converted into at least two lane roads and Major District Roads will be converted into intermediate lane roads before 2014. Every village with a population of more than 500 will have a black topped road and other habitations will have an all weather road. This Government will seek World Bank assistance to implement the second phase of the Tamil Nadu Road Sector Project.

25) Tamil Nadu is one of the highly urbanised States in the country. Large scale migration in search of employment has resulted in faster expansion of cities like Chennai. But, there is no corresponding increase in the level of basic amenities. This Government will come out with a special scheme to improve water supply, sewerage and waste water management, solid waste management, roads and streets in Chennai and its suburban areas. A special Urban Development Mission will be launched for the development of basic amenities in all other Corporations, Municipalities and Town Panchayats in the State.

26) Traffic congestion continues to pose a major challenge to administration in Chennai and other cities. The modal share of public transport in the urban transport system of Chennai is currently 27%, which should be eventually increased to 46% by 2026.



Therefore, this Government will put in place an integrated multi-modal transport system in Chennai. The Metro Rail Project which is under implementation covers only 45 kilometres. Being a cost intensive project it will take considerable time for completion. Hence, this Government will implement the Mono Rail Project in Chennai to integrate with the existing transport system. In the first phase, 111 kilometres will be covered under this project and eventually it will cover 300 kilometres in a phased manner. Investigations will also be undertaken for introducing mono rail system in other corporations like Coimbatore, Madurai and Trichy to decongest the traffic.

27) Rural housing scheme implemented by the previous Government is fraught with many shortcomings. The unit cost of Rs. 75,000 provided per house is grossly inadequate, as the cost of construction has gone up by two to three times recently. This has forced many of these poor families into debt trap. Construction of large number of houses is yet to be commenced for the same reason. Therefore, this Government have decided to discontinue this scheme. Alternatively, this Government will launch a 'Solar Powered Green House Scheme' for the benefit of the poor in the rural areas and construct houses measuring about 300 square feet with a unit cost of Rs. 1.80 lakh by meeting the entire cost by Government. It will also launch a new housing scheme for the urban poor by dovetailing the funds from centrally sponsored schemes. In Chennai city, families living on river embankments will be provided with safe and modern houses.

28) Tamil Nadu with its long coastline has tremendous potential to develop maritime trade. This Government appreciates the fact that such port development will promote commercial activities in the hinterland. The minor ports along the east-coast, including Cuddalore, Nagapattinam and Colachel will be developed through public-private partnership. This will improve the cargo handling capacity of the State.

29) Economic and political empowerment of women is one of the foremost objectives of this Government. This Government urges the Centre to bring the Women's Reservation Bill in the Lok Sabha

at the earliest. It will continue to support Women Self Help Groups for the overall socio-economic development of women by providing adequate amount of revolving fund and further bank linkages for loans.

30) This Government will procure and distribute electric fans, mixies and grinders to the women as promised and commence its distribution with effect from September 15th, 2011, on the occasion of the celebration of Perarignar Anna's birthday. During 2011-2012, about 25 lakh families will be covered. About 1.83 crore women beneficiaries belonging to families holding family cards which are eligible for drawing rice will get this benefit and all of them will be covered in a phased manner. As already promised by the Honourable Chief Minister, this Government will fulfil all the remaining poll promises within the next one and a half year.

31) This Government will endeavour to improve the Physical Quality of Life Index (PQLI) in rural areas by providing safe drinking water, sanitation, round the clock health facilities, quality education, all weather roads, etc. Infrastructure of urban standards will be created in the villages. This Government will initiate steps to energise street lights with solar energy on an experimental basis. At present, the initial investment required for solar energy is very high. But with the technological breakthrough and economy of scale, the unit cost is likely to come down in future, making it a viable alternative for street lights and other community needs.

32) This State has a tremendous unexploited potential for the promotion of tourism. It is endowed with a rich cultural heritage and monuments of architectural splendour. This Government will make all efforts to promote Tamil Nadu as an attractive tourist destination at the international level and reach the level of 60 lakh domestic tourists and 40 lakh foreign tourists in the next five years.

33) This Government will lay special emphasis on protecting the environment. A massive drive will be launched to clean-up the villages and towns. Information, Education and Communication (IEC) campaigns will be launched for sensitising the public to eschew non-degradable plastics. This Government will impose a ban on the



use of plastic carry bags made of virgin plastics or recycled plastics of less than 60 microns thickness and 8x12 inches size. Recycling of plastics will be strictly regulated in accordance with the specification of Bureau of Indian Standards.

34) Providing affordable and quality health service to the people is the objective of this Government. A new Public Health Insurance Scheme will be launched by this Government shortly to achieve the objective of universal health care by terminating the existing health insurance scheme, as it is not comprehensive and effective in fulfilling public aspirations. This Government will pay special attention to the improvement of infrastructure in the Primary Health Centres and Government Hospitals. All urban Public Health Centres will be upgraded to round the clock units to benefit the urban poor. Medical tourism will be promoted in a big way by setting up medi-cities supported with research facilities under Public-Private Partnership and this Government will come out with clear policy guidelines to attract such private investments in the health sector.

35) Providing free and quality school education to all children is one of the main objectives of this Government. This Government will continue to strengthen the infrastructure and improve the key education-related indicators like reducing the drop-out rate, increasing enrolment ratio etc. It is not acceptable to bring down the standards of school education and harm the future of the children in the name of uniform system of school education. The education system in the schools should provide equal opportunity to all for nurturing creative talents and imparting practical knowledge. This should also provide a competitive edge to the students of Tamil Nadu. The common syllabus already prepared is not adequate to fulfil this objective. Therefore, this Government will revise the common syllabus prepared for uniform system of school education. A committee of experts will be constituted to examine the issue and make necessary recommendations.

36) The creation of a large number of universities for higher education alone does not improve the standard of education. Rather, creation of new Anna Universities in different places has weakened the Anna University, Chennai. It has only resulted in the creation of

unviable institutions and has not improved the quality of education. Therefore, this Government has decided to restore the original status of Anna University. Further, this Government will come out with specific programmes to transform the universities in the State into world class institutions.

37) Tamil Nadu has a disciplined work force with a vast pool of manpower. But, a large number of educated youth lack employable skills. This Government will enter into partnership with industry and arrange large scale skill training programmes to augment skilled manpower and bridge the present demand-supply gap.

38) This Government is of the view that good governance and better implementation of schemes and programmes will be possible only if the Government officials are well motivated and allowed to function independently. I hope the Government servants will rise to the occasion and take forward all the good initiatives of the newly formed Government. This Government has ordered the increase of maternity leave from three months to six months thereby fulfilling its poll promise.

39) This Government accords top priority to the socio-economic development of the people belonging to Scheduled Castes and Tribes. Programmes for skill training, entrepreneurship development, etc., will be implemented enabling them to avail the benefits in upcoming sectors like IT and ITES. It is necessary to create a congenial environment for the students in the hostels in order to improve their performance. This Government will provide special financial support to improve the facilities in all the hostels within a year.

40) Necessary steps will be taken to renovate the Sri Lankan Tamil Refugee Camps in the State enabling them to live with dignity in Tamil Nadu. Quality housing, drinking water, sanitation and health facilities will be provided in these camps. Besides providing necessary assistance for the children of Sri Lankan Tamil Refugees to get a proper education, special employment training will also be arranged for them. All the welfare schemes implemented in Tamil Nadu will be extended to the Sri Lankan Tamils living in the camps. Lakhs of





Tamils have perished during the recent war in Sri Lanka and the remaining are leading a pathetic life of subjugation in their own homeland. This Government urges the Centre to impress upon the Sri Lankan Government the need for taking up immediate measures to rehabilitate the Tamils in their own area.

41) I have outlined the policies and priorities of this new Government. After giving this massive mandate, the expectations of the public from this Government are very high. I am sure that the Honourable Chief Minister Selvi J Jayalalithaa with her dynamic leadership will provide excellent governance benefiting the public at large.

42) I hope the deliberations in this House will be constructive and uphold democratic values facilitating the formation of the policies and schemes which are essential to espouse the cause of the public.

43) I conclude my address on this positive note and wish you all the best once again.

Nandri, Vanakkam. Jai Hind!

[2011 ஜூன் 7

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,

வணக்கம். தமிழ்நாட்டின் பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரை இந்நன்னாளில் தொடங்கி வைத்து உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்கள் இம்மாநில மக்களுக்குப் பெரும்பணி ஆற்றும் முயற்சியில் வெற்றிபெற வேண்டும் என வாழ்த்துகிறேன். அதே வேளையில், தமிழகத்தின் வாக்காளப் பெருமக்கள் அதிக அளவில் திரண்டு வந்து ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக்காத்து சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் சட்டமன்றத் தேர்தல் நடப்பதற்கு ஒத்துழைத்துள்ளதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன்.

2) இந்தத் தேர்தலில் மக்களின் பேராதரவுடன் மகத்தான வெற்றியைப் பெற்று மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பதவி ஏற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சரித்திரப் புகழ்மிக்க வெற்றியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றதன் மூலம் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையைப் பெற்றுள்ள தலைவராக அவர் விளங்குகிறார் என்பது தெளிவாகியுள்ளது. அவருடைய ஆழ்ந்த சிந்தனையாலும், அறிவாற்றலாலும் இம்மாநிலத்தை மீண்டும் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் திகழச் செய்வார் என உறுதியாக நம்புகிறேன்.

3) ஏழை எளிய மற்றும் ஆதரவற்ற மக்களின் நலனையே முதன்மையாகக் கொண்டு செயல்பட்ட பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய கொள்கையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. மாண்புமிகு முதல்வர் தலைமையில் அமைந்துள்ள இந்தப் புதிய அரசும் ஏழைகளின் நலனையே முன்னிலைப்படுத்திச் செயல்படும். ஏழை எளிய மக்களுக்கு நேரடியாக பயன் தரக்கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதே நேரத்தில், இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் வளர்ச்சித் திட்டங்களுக்கும், கட்டமைப்புகளை உருவாக்கும் திட்டங்களுக்கும்



2011 ஜூன் 7]

அதே முக்கியத்துவத்தை அளித்து தமிழகத்தை வளமான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும்.

4) பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள கடினமான தருணத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுள்ளதால், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதையும், நிருவாகத்தைச் செம்மையாக்குவதையும் தனது முதன்மையான பணியாக இந்த அரசு கருதுகிறது. சட்டம் ஒழுங்குப் பராமரிப்பில் தமிழகம் சிறப்பான மாநிலம் என்ற பெயர் பெற்றிருந்தாலும், கடந்த சில ஆண்டுகளாக சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளால் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அரசு அமைந்தபோதெல்லாம் சமூக விரோதிகள் மீதும், தீவிரவாதிகள் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து தமிழகத்தை அமைதிப் பூங்காவாகத் திகழச் செய்துள்ளார். எனவே, இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை கடுமையாக மேற்கொண்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி மக்கள் அச்சமின்றி அமைதியான வாழ்க்கையை நடத்த வழிவகுக்கும். கடந்த ஆட்சியில் சட்ட விரோதமான முறையில் வலுக்கட்டாயமாக பயமுறுத்தி பலருடைய சொத்துகள் பறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சொத்துகள் மீட்கப்பட்டு உரிய நபர்களுக்கு மீண்டும் வழங்க ஏதுவாக புதிய சட்டம் இயற்றப்படும். இந்த அரசு காவல் துறையில் உள்ள காவலர்களின் எண்ணிக்கையை வேண்டிய அளவில் உயர்த்தி, துறையை வலுப்படுத்தி, நவீன உபகரணங்கள் வழங்கி அவர்கள் திறம்பட செயல்பட உரிய பயிற்சிகளை அளிக்கும். காவல் துறை குற்றங்களைக் குறைப்பதற்கு கடுமையான முயற்சிகள் எடுப்பதோடு, மின் ஆளுமை முறைகளைப் புகுத்தி குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்புத் திட்டம் (Crime and Criminal Tracking Network System) போன்றவற்றை விரைவில் செயலாக்கத்திற்குக் கொண்டுவந்து பொதுமக்களுடன் நட்புடன் சிறப்பான முறையில் செயல்பட வழிவகை செய்யும்.

5) தமிழ் மொழியின் தொன்மையையும், பெருமையையும் மற்ற மொழியினரும் உணர்ந்து போற்றத்தக்க வகையில் திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் மற்றும் புகழ் பெற்ற தமிழ் நூல்களை ஆங்கிலம், சீன, அரேபிய மற்றும் உலகில் அதிகம் பேசப்படும் ஏனைய மொழிகளிலும், மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு இணைய தளத்தில் இடம் பெறச் செய்து, நமது

[2011 ஜூன் 7

தமிழ் மொழியின் பெருமை உலகமெல்லாம் பரவ வழிவகை செய்யப்படும். கணினிவழித் தமிழ் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், தனித் தன்மை இழந்த தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் அதன் தொடர்புடைய நிறுவனங்களை மீட்டெடுக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். தமிழ் மொழியை இந்திய ஆட்சி மொழிகளுள் ஒன்றாக ஆக்கவும், நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்தவும் மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துகிறது.

6) இம்மாநிலத்தில் சட்ட மேலவை ஒரு தேவையற்ற அமைப்பாகக் கருதப்பட்டதால், 1-11-1986 அன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கலைக்கப்பட்டது. எனவே, மீண்டும் சட்ட மேலவையைக் கொண்டுவரத் தேவையில்லை என இந்த அரசு கருதுகிறது. சட்டப் பேரவையில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, ஓர் இறுதி முடிவு எடுக்கப்படும்.

7) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்ற தலைமைச் செயலகக் கட்டடம் முழுமையாகக் கட்டி முடிக்கப்படுவதற்கு முன்பே, மார்ச் 2010 இல் திறந்துவைக்கப்பட்டது. அந்தப் புதிய கட்டடத்தில் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. அடிப்படை வசதிகள்கூட அங்கு இல்லை. கட்டுமானப் பணிகள் முழுமை பெறுவதற்கு முன்பே, அவசர அவசரமாக ஒரு சில துறைகளும், முதலமைச்சர் மற்றும் அனைத்து அமைச்சர்களின் அலுவலகங்களும் அந்தப் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டன. ஆறு செயலகத் துறைகள் மட்டுமே புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட நிலையில், மீதமுள்ள 29 துறைகள் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பழைய கட்டடத்திலேயே இயங்கி வந்தன. அமைச்சர்களின் அலுவலகங்கள் மட்டும் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்திற்கு மாற்றப்பட்ட நிலையில், தொடர்புடைய துறை அலுவலகங்கள் தொடர்ந்து புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பழைய தலைமைச் செயலகக் கட்டடத்திலேயே செயல்பட்டு வந்தன. இவ்வாறு துறைகளை ஓர் இடத்திலும், அமைச்சர்களின் அலுவலகங்கள் மற்றும் ஒரு சில துறைகளை மட்டும் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்திற்கு மாற்றியது தேவையற்ற நிருவாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தியதுடன், பொதுமக்களுக்கும் இடையூறாக அமைந்துள்ளதால், இந்த அரசு புனித ஜார்ஜ் கோட்டையில்



2011 ஜூன் 7]

அமைந்துள்ள தலைமைச் செயலகக் கட்டடத்திலேயே தனது நிருவாகப் பணிகளைத் தொடர முடிவு செய்துள்ளது. புதிய தலைமைச் செயலகக் கட்டடப் பணிகளுக்குக் கூடுதலான மற்றும் பயனற்ற செலவு, காலதாமதம், தரமற்ற கட்டுமானப் பணிகள் போன்ற குறைபாடுகள் உள்ளதாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதுகுறித்து விசாரணை செய்ய ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு விசாரணைக் குழு அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த விசாரணை முறையாக நடைபெற ஏதுவாக, புதிய தலைமைச் செயலக கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்படும்.

8) சிறப்பான நிருவாகத்தை வழங்கி, அனைத்து முதலீட்டாளர்களும் விரும்பி வந்து முதலீடு செய்யும் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவதே இந்த அரசின் கொள்கையாகும். இந்த நோக்கத்தை அடைய இலஞ்ச ஊழல் அற்ற நிலைமையை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அரசின் சேவைகள் அனைத்தும் சிறப்பான முறையில் மக்களைச் சென்றடைய மின் ஆளுமை முயற்சிகளும், பணி சார்ந்த நிருவாக மறு சீரமைப்பு (process re-engineering) முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். தற்பொழுது செயல்படுத்தப்பட்டுவரும் அனைத்து மக்கள் நலத் திட்டங்களும் அங்க அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட அடையாள அட்டைத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, ஊழலுக்கு இடம் தராமல், திட்டத்தின் பயன் மக்களை முழுமையாகச் சென்றடைய வழிவகை செய்யப்படும். இதன் பொருட்டு ஒரு முதல் முயற்சியாக முதியோர் ஓய்வூதியத் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை, பயனாளிகள் பெயரில் வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, அதன் மூலம் வங்கி சேவையாளர் உதவியுடன் பயனாளிகளுக்கு நேரடியாக வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய திட்டம் வரும் 2011 செப்டம்பர் முதல் நாள் முதல் செயல்படுத்தப்படும்.

9) இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம், பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியை இலவசமாக வழங்க ஆணையிட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் துயரத்தைப் போக்க இந்த அரசு எடுத்துவரும் உறுதியான முயற்சிகளுக்கு இது ஓர் உதாரணமாகும். பொது விநியோகத் திட்டத்தில்

தொழில்நுட்ப உத்திகள் புகுத்தப்பட்டு குடும்ப அட்டைகள் பராமரிப்பு, பொருட்களின் நகர்வு, அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீடு, விநியோகங்கள் போன்றவற்றைக் கண்காணித்தல், கடத்தலைத் தடுத்தல் ஆகிய பணிகளை இந்த அரசு செவ்வனே செய்யும். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்துவதுடன், பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை விற்பனையில் ஈடுபடுவோர்மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கையை எடுக்கும். ரூபாய் 50 கோடி ஒதுக்கீட்டில் 'விலைக் கட்டுப்பாட்டு நிதி' உடனடியாக ஏற்படுத்தப்பட்டு, வட்டியில்லாக் கடனாகக் கூட்டுறவு அமைப்புகளுக்கு வழங்கி, அத்தியாவசியப் பொருட்களின் விலை, அளவுக்கு அதிகமாக உயரும்போது, அத்தகைய பொருட்களை உற்பத்தி மையங்களில் நேரடியாக வாங்கி அடக்க விலையிலேயே நுகர்வோருக்கு விற்பனை செய்ய வழிவகை செய்யப்படும். நீண்டகாலத் திட்டமாக உற்பத்தி குறைவாக உள்ள அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்து, அதன்மூலம் தேவை மற்றும் வழங்கலுக்கு இடையே உள்ள இடைவெளியை நீக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*10)* மீனவர்களின் நலனைப் பேணிக் காக்கும் பணியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தன் இதயத்தில் இருத்தி செயல்பட்டு வருகிறார். தேர்தல் வாக்குறுதியில் கூறியுள்ளபடி, மீன்பிடிக்க தடைசெய்யப்பட்ட காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதமொன்றுக்கு 1,000 ரூபாயாக இருந்ததை, ரூபாய் 2,000 ஆக உயர்த்தி வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. அதேபோல், முதியோர் ஓய்வூதியம் மற்றும் இதர சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் தற்போது வழங்கப்பட்டுவரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூபாய் 500 என்பது இரட்டிப்பாக்கப்பட்டு, மாதம் ரூபாய் 1,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மேலும் ஒரு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு ஏழைகளின் நலன் பேணப்பட்டுள்ளது.

*11)* நாட்டின் பொருளாதார உற்பத்தி மதிப்பில் மகாராஷ்டிரம் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது அதிக பங்களிப்பு தரும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளின் வளர்ச்சி குறைந்ததால், 2008-2009 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி



வளர்ச்சி குறையத் தொடங்கியது. வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய துறை சார்ந்த திட்டமிட்ட உத்திகள் பயன்படுத்தப்படாமையே இந்தத் தேக்க நிலைக்குக் காரணமாகும். எனவே, வருவாய் வளர்ச்சியை ஊக்குவித்து, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய துறை சார்ந்த நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு, துரித வளர்ச்சியை எல்லோருக்கும் பயனளிக்கத்தக்க வகையில் ஏற்படுத்தி ஒரு நல்ல சூழலை உருவாக்குவதே இந்த அரசின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய மாநிலத்தின் மொத்த வளர்ச்சி 10 விழுக்காட்டிற்கும் மேல் தொடர்ந்து இருக்கக்கூடிய வகையில் ஒரு ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் தயாரித்து செயல்படுத்தப்பட வேண்டும். எனவே, இந்த அரசு 'தமிழ்நாடு 2025 தொலைநோக்குப் பார்வைத் திட்டம்' ஒன்றைத் தயாரித்து, வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து களைவதுடன், வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய முக்கிய கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிந்து முன்னுரிமையில் செயல்படுத்தி தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் கொண்டு செல்ல பாடுபடும்.

*12)* பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைவரையும் சென்றடைய வேண்டுமெனில், முதன்மை நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் துறைகள் ஒருசேர சேர்ந்து வளர்ச்சி அடைய வேண்டும். ஆனால், முதன்மைத் துறையான வேளாண்மையில் 11 ஆவது திட்டக் காலம் தொடங்கி, 2007-2010 வரை, ஒட்டுமொத்த வளர்ச்சி (cumulative growth) எதிர்மறையாக 1.18 சதவீதம் எனக் குறைந்துள்ளது. இதனால் 11 ஆவது திட்டக் காலத்தில் முதன்மைத் துறையில் 4 விழுக்காடு வளர்ச்சி என்ற குறிக்கோளை எட்ட இயலாத நிலை உள்ளது. எனவே, இந்த அரசு முதன்மைத் துறையான விவசாயம், கால்நடைத் துறை, மீனளம் போன்றவற்றின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தும். விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், தமிழ்நாட்டிலுள்ள 75 இலட்சம் சிறு, குறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையிலும், பண்ணைசார் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

*13)* வேளாண் உற்பத்தித் திறனைப் பெருக்கக்கூடிய வகையில் நெல், பயறு, கரும்பு, பருத்தி போன்ற பயிர்களுக்கான உற்பத்தி வழிமுறைகள் தனித்தனியே திட்டமிடப்பட்டு, வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிக்கப்படும். துல்லிய பண்ணை முறை, நுண்ணீர் பாசனத் திட்டங்கள் முதலியவை பெரிய அளவில்

செயல்முறைக்குக் கொண்டு வரப்படும். தேவையான அளவு உணவு உற்பத்தியை உறுதி செய்யும் அதே வேளையில், குறைந்த மதிப்புள்ள பயிர்களுக்குப் பதிலாக அதிக வருவாய் தரும் பயிர்களைப் பயிரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேளாண் கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில், விவசாயிகள் பங்களிப்புடன் விவசாயப் பொருட்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், சந்தை வசதி, சேமிப்புக் கிட்டங்கிகள் மற்றும் குளிர்சாதன வசதிகளை உருவாக்குதல் போன்ற பணிகளையும் இந்த அரசு தீவிரமாக மேற்கொள்ளும்.

*14)* வேளாண்மையில் ஒரு நீடித்த, நிலையான வளர்ச்சியை எய்த பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மிக முக்கியமான தேவையாகும். இந்த அரசு மாநில நதிகளை இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி, பாசன ஆதாரத்தைப் பெருக்கும். இதனால் வெள்ள பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதுடன், இத்தகைய கால்வாய்கள் நீர்வழிப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்படும்.

*15)* இந்த ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குப் பொதுவாகத் திறக்கப்படும் சூன் *12* ஆம் தேதிக்குப் பதிலாக, சூன் *6* ஆம் தேதி அன்றே தண்ணீர் திறந்து விடப்படும். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு குறித்த காலத்திற்கு முன்பே பாசனத்திற்கு நீர் திறந்து விடுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் காவிரி டெல்டா பகுதி வேளாண் பெருமக்கள் விவசாயப் பணிகளை உரிய காலத்தில் மகிழ்ச்சியுடன் தொடங்க இயலும்.

*16)* வறுமையை முழுமையாக அகற்றுவதே இந்த அரசின் கொள்கையாகும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி இல்லையெனில், பொருளாதார வளர்ச்சியினால் மட்டுமே வறுமையை முழுமையாக அகற்றிவிட முடியாது என்ற உண்மையை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, பல்வேறு திட்டங்களையும் ஒருங்கிணைத்து, அவற்றின் பயன் ஏழைகளின் குடும்ப அளவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படும். இதனால் ஏற்படும் சமூகப் பொருளாதார மாற்றங்களால் அக்குடும்பங்கள் வறுமையின் பிடியிலிருந்து விடுபடும் வரை கண்காணித்து உதவிகள் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.





*17)* மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு சுமுகமாக இருக்கும் வகையில் இந்த அரசு செயல்படும். மாநில அரசின் தன்னாட்சி நிதி அதிகாரம் பாதிக்காத வகையில் சரக்கு மற்றும் சேவை வரியை உள்ளடக்கிய மறைமுக வரி முறைகளில் கொண்டுவரப்படும் வரிச் சீர்திருத்தத்தை இந்த அரசு வரவேற்கும். விற்பனை வரி மட்டுமே மாநிலத்திற்கு முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ள நிலையில், மாநில அரசுகளின் வருவாயைப் பாதிக்காத சரக்கு மற்றும் சேவை வரி முறையைப் பின்பற்ற வேண்டும் என மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.

*18)* மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை மூலம் சுமுகத் தீர்வு காணவே இந்த அரசு விரும்புகிறது. இதற்கு வாய்ப்பு கிட்டாத சூழ்நிலையில், சட்டப்படியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது. முல்லைப் பெரியாறு மற்றும் பிற நதிநீர்ப் பிரச்சினைகள் நீதிமன்றங்களுக்குச் சென்றுவிட்ட நிலையில், ஒரு நிலையான தீர்வினை எட்ட சட்டப்படியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். முல்லைப் பெரியாறு அணை குறித்து உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் விசாரணை விரைவில் முடிக்கப்பட்டு ஒரு நியாயமான முடிவு கிடைக்கும் என இந்த அரசு நம்புகிறது.

*19)* தமிழகத்தில் நிலவிவரும் மின் பற்றாக்குறை, அடிப்படைக் கட்டமைப்புகளில் உள்ள குறைபாடு, மனிதவளப் பற்றாக்குறை ஆகியவை தொழில் வளர்ச்சியை வெகுவாகப் பாதிப்பதால், நமது மாநிலத்திற்கு வரவேண்டிய தொழில் முதலீடு வேறு மாநிலங்களுக்குச் செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த அரசு முக்கிய தொழில்களான மோட்டார் வாகன உற்பத்தி, மோட்டார் வாகன உதிரி பாகங்கள், தகவல் தொழில்நுட்பம், கணினி சார்ந்த சேவைகள், ஜவுளித் துறை, தோல் பொருட்கள் சார்ந்த தொழில் துறை, பொறியியல் உபகரணங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்ய பெரிய தொழில் நிறுவனங்களை ஈர்க்க முயற்சி செய்யும். தொழில் வளர்ச்சி, பெரும்பாலும் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ளதால், மாநிலத்தின் பிற பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்க இந்த அரசு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும். கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த கப்பல் கட்டும் தொழிலுக்கான முதலீடுகளை ஈர்க்க இந்த அரசு சிறப்பு முயற்சிகள்

[2011 ஜூன் 7

மேற்கொள்ளும். மதுரை-அருப்புக்கோட்டை-தூத்துக்குடி பாதையை அனைத்து வசதிகளும் கொண்ட தன்னிறைவு வளர்ச்சிப் பாதையாக மாற்றி, தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புதிதாக வளர்ச்சி பெற்று வரும் துறைகளான உயிரி தொழில்நுட்பம் (bio-technology), நானோ தொழில் நுட்பம் (Nano technology) மற்றும் மருந்தியல் (pharmaceuticals) போன்ற துறைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசு செயல்படும்.

20) தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த சேவைகளை வழங்கும் முக்கிய மையமாகத் தமிழகத்தை மாற்றும் நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். இரண்டாம் நிலை நகரங்களில் தொலைத் தொடர்புப் பூங்காக்கள் மூலம் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தி, இத்துறையின் வளர்ச்சியை இரட்டிப்பாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கிராமப் பகுதிகளில் உள்ள வணிக வெளிப்பணி மையங்கள் (BPOs) வலுவாக்கப்பட்டு, தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி பரவலாக்கப்படும். மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை இந்த அரசு 2011 செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் தொடங்கும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து +1 மற்றும் +2 மாணவர்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில், இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக 2011-2012 ஆம் ஆண்டில் 9.12 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

21) முந்தைய அரசால் தொடங்கப்பட்ட அரசு கேபிள் டிவி நிறுவனம் தற்போது செயலற்ற நிலையில் உள்ளது. அரசு கேபிள் டிவி நிறுவனத்தை உயிர்ப்பித்து மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்து, கேபிள் சேவையை நியாயமான கட்டணத்தில் வழங்க வேண்டும் என்று பொதுமக்களிடம் பெருத்த எதிர்பார்ப்பு உள்ளது. எனவே, பொதுநலனைக் கருத்தில் கொண்டு, இந்த நிறுவனத்தைப் புதுப்பித்துச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதுடன், கடைக்கோடியில் உள்ள உள்ளூர் கேபிள் டிவி இயக்குபவர்கள் பாதிக்காத வகையில் தனியார் கேபிள் டிவி சேவை அரசுடைமை ஆக்கப்படும்.

22) மின்சாரம், சாலை வசதி, நகர்ப்புரக் கட்டமைப்புகள், வீட்டு வசதி ஆகிய உட்கட்டமைப்புகளில் உள்ள குறைவைப்



2011 ஜூன் 7]

போக்க தொடர்ந்து திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி, தமிழ்நாடு நீட்டித்த பொருளாதார வளர்ச்சியைப் பெற வழிவகை செய்யப்படும். இத்தகைய பணிகளை மேற்கொள்ள கணிசமான நிதி தேவைப்படும் நிலையில், மாநில அரசிடம் உள்ள வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரத்தைக் கொண்டு மட்டும் திட்டங்களைச் செயல்படுத்த இயலாது. எனவே, நிதி ஆதாரத்தைத் திரட்டுவதுடன், முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முறையான அணுகுமுறை பின்பற்றப்படும். அரசு தனியார் தொழில் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணியை இந்த அரசு செயல்படுத்தும்.

23) கடந்த ஆட்சிக் காலத்தில் மின் பற்றாக்குறையினால் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு மாநிலத்தின் மின் துறையைச் சீரமைத்து தமிழகத்தை உபரி மின்சாரம் உள்ள மாநிலமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளும். எதிர்காலக் கூடுதல் தேவையை எதிர்நோக்கி, நீண்டகால மின் செயல்முறைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, தொழில் துறைகள் மற்றும் பிற துறைகளுக்குத் தங்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க வழிவகை செய்யப்படும். மின் உற்பத்தி, பகிர்மானம், வழங்கல் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். மின் திருட்டைத் தடுத்து மின் இழப்பைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதுடன், தொழிற்சாலைகள், வீடுகள், விவசாயம் போன்றவற்றுக்கான மின் வழங்கிகளைத் (feeders) தனித்தனியாக அமைத்து மின்சாரம் வழங்கப்படும்; தரம் மேம்படுத்தப்படும். உடனடித் தீர்வாக, சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், காற்றாலை மின் உற்பத்தியை முழுமையாகப் பயன்படுத்துதல், தொழில்நுட்ப, வணிக ரீதியான இழப்பைக் குறைப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு நம்பகத்தன்மையுள்ள மாற்று எரிபொருள் ஆதாரமாக மரபுசாரா எரிசக்தியான காற்று, சூரிய ஒளி மற்றும் உயிரி எரிபொருள்மூலம் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும். மரபுசாரா எரிசக்திமூலம் மின் உற்பத்தி செய்வதற்காகத் தனியாக ஒரு கொள்கையை இந்த அரசு வகுக்கும்.

24) தரமான சாலைகள் மற்றும் சிறப்பான இணைப்பு வசதி ஆகியவை நீடித்த பொருளாதார வளர்ச்சியைப் பெற

அவசியமாகிறது. எனவே, இந்த அரசு தரமான சாலைகளை அமைத்து பயண நேரத்தைக் குறைத்து சிறப்பான போக்குவரத்தை அமைக்கப் பாடுபடும். மாநிலத்தில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும் குறைந்தபட்சம் இருவழித் தடங்கள் கொண்டவையாகவும், மாவட்ட முக்கியச் சாலைகள் இடைவழித் தடங்களாகவும் 2014 ஆம் ஆண்டுக்குள் மாற்றப்படும். 500-க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் தார்ச் சாலைகள் அமைக்கப்படும். பிற குடியிருப்புகளுக்கு எல்லா பருவ காலத்திலும் பயன்படுத்தக்கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்படும். தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்ட செயலாக்கத்திற்கு உலக வங்கியிலிருந்து நிதியுதவி கோரப்படும்.

25) நாட்டிலேயே அதிக அளவில் நகர்ப்புரமாக மாறியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. வேலை தேடி நகர்ப்புரங்களுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சென்னை போன்ற நகரங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. ஆனால், அதற்கேற்ப அடிப்படை வசதிகள் வளர்ச்சி பெறவில்லை. இந்த அரசு சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் குடிநீர், கழிவு நீர் சுத்திகரிப்பு, திடக் கழிவு மேலாண்மை, சாலைகள் மற்றும் தெருக்கள் மேம்பாடு போன்ற பணிகளை மேற்கொள்ள ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும். தமிழ்நாட்டின் பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்த ஒரு சிறப்பு நகர்ப்புர வளர்ச்சி இயக்கம் துவங்கப்படும்.

26) சென்னை மற்றும் பிற நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், நிருவாகத்திற்குப் பெரும் சவாலை ஏற்படுத்தி வருகிறது. சென்னை மாநகரப் போக்குவரத்தில் பொதுப் போக்குவரத்தின் பங்கு தற்போது 27 சதவீதம் உள்ளது. இந்த விழுக்காடு 2026 ஆம் ஆண்டுக்குள் 46 சதவீதத்திற்கு உயர்த்தப்பட வேண்டும். எனவே, இந்த அரசு ஓர் ஒருங்கிணைந்த பன்முறைப் போக்குவரத்து (Multi Modal Transport) வசதியினை சென்னை மாநகரில் ஏற்படுத்தும். தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ இரயில் திட்டம் 45 கிலோ மீட்டர் அளவிற்கே திட்டமிடப்பட்டுள்ளது. மூலதனச் செலவு அதிகமாக உள்ள இத்திட்டம் செயல்பாட்டுக்கு வர மிகுந்த காலமாகும். எனவே, இந்த அரசு சென்னை மாநகருக்குத் தற்போதுள்ள போக்குவரத்து முறைகளுடன் ஒருங்கிணைந்து





செயல்பட மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்தும். முதற்கட்டமாக, 111 கிலோ மீட்டருக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக 300 கிலோ மீட்டர் வரை விரிவுபடுத்தப்படும். கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி போன்ற மாநகராட்சிகளிலும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மோனோ இரயில் திட்டம் செயல்படுத்த உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

27) கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் பல குறைபாடுகளுடன் உள்ளது. கட்டுமானச் செலவு இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துவிட்ட நிலையில், அத்திட்டத்தில் ஒரு அலகிற்கு வழங்கப்படும் நிதியான ரூபாய் 75 ஆயிரம் மிகக் குறைந்த அளவாக உள்ளது. இதனால் ஏழை எளிய குடும்பங்கள் கடன் சுமையில் சிக்கியுள்ளனர். இதன் காரணமாக, மிக அதிக எண்ணிக்கையில் வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தினைக் கைவிடுவதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மாற்றாக, கிராமப்புர ஏழைகள் பயன்பெறும் வகையில், ‘சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம்’ தொடங்கப்படும். இத்திட்டத்தில் சுமார் 300 சதுர அடி அளவில் ரூபாய் 1.80 இலட்சம் செலவில் அரசே வீடு கட்டிக் கொடுக்கும். அதேபோல், நகர்ப்புர ஏழைகளின் வீட்டு வசதிக்காக மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்து ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை நகரில் ஆற்றோரங்களில் வாழும் குடும்பங்களுக்குப் பாதுகாப்பான நவீன வீடுகள் வழங்கப்படும்.

28) கடலோரப் பகுதிகளில் வணிக வாய்ப்புகளைப் பெருக்கத்தக்க வகையில், தமிழ்நாட்டில் நீண்ட கடற்கரை உள்ளது. இப்பகுதியில் உள்ள துறைமுகங்கள் மேம்பாடு அடைந்தால் அதனை ஒட்டி உள்ள நிலப் பகுதிகளில் வர்த்தகம் மேம்பாடு அடையும் என இந்த அரசு கருதுகிறது. எனவே, கிழக்குக் கடற்கரையை ஒட்டி உள்ள கடலூர், நாகப்பட்டினம் மற்றும் குளச்சல் உள்ளிட்ட சிறு துறைமுகங்கள் அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் மேம்படுத்தப்படும். இதனால் மாநிலத்தின் சரக்குக் கையாளும் திறன் அதிகரிக்கும்.

29) பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரம் பெற்றவர்களாக பெண்களின் நிலையை உயர்த்துவதே இந்த

[2011 ஜூன் 7

அரசின் தலையாய நோக்கங்களுள் ஒன்றாகும். பாராளுமன்றத்தில், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு சட்டமுன்வடிவை விரைவில் கொண்டு வரவேண்டும் என இந்த அரசு வலியுறுத்துகிறது. சுய உதவிக் குழுக்கள்மூலம் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குத் தொடர்ந்து கவனம் செலுத்தி போதிய அளவு அவர்களுக்கு சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

30) இந்த அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதியன்று மகளிருக்கு மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தைத் தொடங்கும். 2011-2012 ஆம் ஆண்டு சுமார் 25 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன்பெறும். பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறத் தகுதியுடைய சுமார் 1.83 கோடி குடும்பங்களைச் சேர்ந்த மகளிர் இத்திட்டத்தினால் படிப்படியாகப் பயனடைவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே உறுதி அளித்துள்ளபடி, மீதம் உள்ள அனைத்துத் தேர்தல் வாக்குறுதிகளும் அடுத்த ஒன்றரை ஆண்டில் இந்த அரசால் நிறைவேற்றப்படும்.

31) கிராமப்புரங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதி, 24 மணி நேர மருத்துவ வசதி, தரமான கல்வி, அனைத்துப் பருவ காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய சாலைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இந்த அரசு பாடுபடும். நகர்ப்புரங்களுக்கு இணையான வசதிகள் கிராமப்புரங்களில் ஏற்படுத்தப்படும். சோதனை அடிப்படையில் கிராமப்புரங்களில் சூரிய எரிசக்தியைப் பயன்படுத்தும் தெரு விளக்குகள் அமைக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும். சூரிய எரிசக்தியைப் பயன்படுத்துவதில் ஆரம்பகட்ட மூலதனச் செலவு தற்பொழுது அதிகமாக இருந்தாலும், வருங்காலத்தில் தொழில்நுட்ப மேம்பாடு, பயன்பாட்டு அளவில் உயர்வு ஆகியவற்றால் ஒரு அலகுக்கான மூலதனச் செலவு குறைந்து தெரு விளக்குகள் மற்றும் பிற சமுதாய எரிசக்தித் தேவைகளுக்கு இது ஒரு நிரந்தரமான மாற்று தீர்வாக அமையும் என இந்த அரசு கருதுகிறது.

32) தமிழ்நாட்டில் கலை நயமிக்க கட்டடங்கள், புராதனச் சின்னங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளதால், சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளன. தமிழகத்தை அடுத்த ஐந்தாண்டுகளில் 60 இலட்சம் உள்நாட்டுச் சுற்றுலாப்



2011 ஜூன் 7]

பயணிகளையும், 40 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கக்கூடிய வகையில், சர்வதேச சுற்றுலா மையமாக மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

33) சுற்றுச் சூழலைப் பாதுகாக்க இந்த அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும். கிராமப்புரங்களையும், நகர்ப்புரங்களையும் தூய்மைப்படுத்த ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மக்கிப் போகாத ப்ளாஸ்டிக் பொருட்களை மக்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு சிறப்புத் தகவல் கல்வித் திட்டம் தொடங்கப்படும். முதன்முறையாகவோ அல்லது மறுசுழற்சி முறை மூலமோ தயாரிக்கப்படும் 60 மைக்ரான் மற்றும் 8 x 12" அளவுக்குக் குறைவான பாலிதின் பைகளுக்குத் தடை விதிக்கப்படும். இந்திய தர நிர்ணயக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்குட்பட்டு, ப்ளாஸ்டிக் பொருட்களுக்கான மறுசுழற்சிமுறை கடுமையாக ஒழுங்குமுறைபடுத்தப்படும்.

34) அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய தரமான மருத்துவச் சேவையை வழங்குவதே இந்த அரசின் நோக்கமாகும். தற்போதுள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மக்களின் தேவைகளை நிறைவு செய்யத்தக்க வகையில் முழுமையாக இல்லை என்பதால், இத்திட்டம் கைவிடப்படும். அனைவருக்கும் தரமான மருத்துவச் சேவை வழங்கும் நோக்கத்தை எட்டக்கூடிய வகையில் ஒரு புதிய பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி, அனைவரும் மருத்துவ வசதி பெறுவதை உறுதி செய்யும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தும். நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏழை மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் 24 மணி நேரம் செயல்படும் மையங்களாக மாற்றியமைக்கப்படும். மருத்துவச் சுற்றுலாவை ஒரு பெரிய அளவில் ஊக்குவிக்க ஆராய்ச்சி வசதிகளுடன் கூடிய மருத்துவ நகரங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்படும். மருத்துவத் துறையில் தனியார் மூலதனத்தை அதிகரிக்கும் வகையில் தெளிவான வழிமுறைகளை இந்த அரசு வகுக்கும்.

35) தரமான பள்ளிக் கல்வியை இலவசமாக அனைவருக்கும் வழங்குவது இந்த அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். முக்கிய கல்வி சார்ந்த குறியீடுகளான பள்ளிச் சேர்ப்பு விகிதத்தை

[2011 ஜூன் 7

அதிகரித்தல், இடைநிற்றலைக் குறைத்தல் போன்றவற்றுடன் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும். சமச்சீர் கல்வி என்ற பெயரில் பள்ளிக் கல்வியின் தரத்தைக் குறைத்து, அதனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் நிலை ஏற்படுவதை இந்த அரசு விரும்பவில்லை. பள்ளிக் கல்வி முறை மாணவர்களின் செயல்முறை அறிவாற்றலையும், ஆக்கப்பூர்வமான சிந்தனைத் திறனையும் மேம்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். தமிழ்நாட்டு மாணவர்கள் பிற மாணவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கும் வகையில் உருவாக்க, இந்தக் கல்வி முறை வகை செய்யவேண்டும். ஆனால், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள பொதுப் பாடத் திட்டம் இந்த நோக்கத்தை எய்த போதுமானதாக இல்லை. எனவே, சமச்சீர் கல்விக்கான பாடத் திட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும். ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு இதுகுறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை அளிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*36)* அதிக எண்ணிக்கையில் உயர் கல்விக்கானப் பல்கலைக்கழகங்களைத் தொடங்கிவிட்டால் மட்டும் கல்வியின் தரம் உயர்ந்துவிடாது என இந்த அரசு கருதுகிறது. அண்ணா பல்கலைக்கழகங்களை மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தொடங்கியதால், சென்னை அண்ணா பல்கலைக்கழகம் வலுவிழந்துவிட்டது. இதனால் கல்விச் சேவையின் தரம் உயராமல் சுயமாகச் செயல்பட இயலாத பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தை மீண்டும் பழைய நிலைக்கே கொண்டுவர இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்த அரசு பல்கலைக்கழகங்களைச் சீரமைத்து, உலகத் தரம் மிக்க நிறுவனங்களாக மாற்றியமைக்க சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும்.

*37)* தமிழ்நாட்டில் கட்டுப்பாட்டுடன் திறம்படப் பணியாற்றக்கூடிய மனித வளம் உள்ளது. கல்வியறிவு பெற்றும் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய திறன் இல்லாத படித்த இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர். இந்த அரசு தொழில் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து வேலைவாய்ப்புக்கான திறன் வளர்ப்புப் பயிற்சியை பெரிய அளவில் மேற்கொண்டு, மனித வளத்தில் தற்போதுள்ள இடைவெளியைக் குறைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



2011 ஜூன் 7]

*38)* அரசு அலுவலர்கள் சுதந்திரமாகவும், ஊக்கமுடனும் செயல்பட உரிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்தால்தான், அரசின் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட இயலும் என இந்த அரசு கருதுகிறது. அரசு அலுவலர்கள் ஊக்கமுடன் செயல்பட்டு புதிய அரசின் நல்ல முயற்சிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பார்கள் என உறுதியாக நம்புகிறேன். பெண் அரசு அலுவலர்களின் நலன் பேண, மகப்பேறு மருத்துவ விடுப்பிற்கு இதுவரை அளிக்கப்பட்ட மூன்று மாதம் என்பதை ஆறு மாதங்களாக உயர்த்தி தனது தேர்தல் வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்றியுள்ளது.

*39)* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும். திறன்வளர் பயிற்சி, தொழில் முனைவோருக்கான பயிற்சிகள்மூலம் வளர்ந்து வரும் தொலைத் தொடர்புத் துறை போன்றவற்றில் அவர்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்க வழிவகை செய்யப்படும். ஆதி திராவிட மாணவர்களின் திறன் மேம்பட, அவர்கள் விடுதிகளில் தங்கிப் பயிலும்போது சிறப்பான சூழ்நிலைகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். இந்த அரசு ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்கள் தங்கிப் பயிலும் விடுதிகளின் வசதியை ஓராண்டிற்குள் மேம்படுத்த சிறப்பு நிதி உதவியை அளிக்கும்.

*40)* இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப்பட்டு, அவர்கள் தமிழகத்திலேயே கௌரவமாக வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இந்த முகாம்களில் தரமான இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை செய்து தரப்படும். இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகள் கல்வி பயிலத் தேவையான உதவிகளை வழங்குவதுடன், அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான சிறப்பு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களும், முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்படும். இலங்கைப் போரினால் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மாண்டு போன நிலையில், மீதமுள்ள இலங்கைத் தமிழர்களும் தங்கள் சொந்த நாட்டிலேயே அடிமைகள் போல் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்கள் அவர்கள் சொந்தப் பகுதிகளிலேயே மறுவாழ்வு பெறுவதற்கான உடனடி

நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வலியுறுத்துமாறு மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.

41) இந்த அரசின் கொள்கைகளையும், முன்னுரிமைகளையும் இங்கு சுட்டிக்காட்டியுள்ளேன். மகத்தான வெற்றிபெற்று பொறுப்பேற்றுள்ள இந்த அரசிடமிருந்து பொது மக்களின் எதிர்பார்ப்பு மிக அதிகமாக உள்ளது. மக்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றல் வாய்ந்த தலைமையால் ஒரு சிறப்பான நிருவாகத்தை மக்களுக்கு வழங்கமுடியும் என உறுதியாக நம்புகிறேன்.

42) இம்மாமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் மக்களாட்சியின் மாண்புகளைக் கட்டிக் காக்கும் வகையில் ஆக்கபூர்வமாக அமைந்து மக்களின் நலனை மேம்படுத்தக் கூடிய நல்ல பல கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

43) உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்!

—